368

# ஜகன்மோகினி

ஆசிரியை :
வை.மு.கோதைநாயகி அம்மாள்



364
18 OCT 1939
MADRAS

ஸ்ரீ

## கானல் நீர்

பாலைவனத்தில் பசுமைச் செடிகளையும், நீர் ஓடைகளையும் காண முடியுமா? அதுபோலத்தான் சில மனிதர்களின் மனமும் இருக்கும். எல்லா வியாதிகளுக்கும் மருந்தோ, மாற்றோ உண்டு. பசையற்ற இதயத்திற்குப் பசை ஒட்ட மார்க்கம் ஏது?

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

தன்வினை தன்னைச்சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்.

நீ நினைப்பதுபோலவே என்னுடைய பிறவியிலும் சில மர்மங்கள் இருக்கலாம்.

* * * *

1914

செப்டம்பர் 1939

கபட உலகம்

அணா 2

# திருச்சி அகிலஇந்தியரேடியோவில்

## ஸெப்டம்பர் 10உ ஞாயிறன்று

**மாலை 7 முதல் 7-15 வரையில்**

நமது ஆசிரியை

**ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்**

## "வீடும் வாசலும்"

என்பதுபற்றிப் பேசுவார்கள்

அதோடு

## ஸெப்டம்பர் 11உ திங்கட்கிழமை

**மாலை 8-45 முதல் 9-15 வரையில்**

# ஸ்ரீ பாரதியார் தினக் கொண்டாட்டத்தில்

அடியிற்கண்ட பாரதிப் பாடல்களைப் பாடுவார்கள்

| | |
|---|---|
| கண்ணன் திருவடி | ப்யாக் |
| துன்பமிலாத நிலையே | ப்யாகடா |
| தொன்று நிகழ்ந்த | காவடிச் சிந்து |
| மோகத்தைக் கொன்றுவிடு | மோகனம் |
| எண்ணிய முடிதல் வேண்டும் | ராகமாலிகை |
| வாழ்க நிரந்தரம் | மங்களம் |

"சாரதி"யின்

# ரயத்து பிட்டா

[தெலுங்கு பேசும் படம்]

## ஒரே சமயத்தில் 11 ஊர்களில் வெளிவருகிறது

18 OCT 1939
MADRAS

மிஸ். டி. சூர்யகுமாரி,

ஸ்ரீ. டி. ராகவாச்சாரி

டைரக்ஷன் : ஜி. ராமபிரும்மம்

போடோ : ஸைலன் போஸ்

ஆடியோகிராபி : ஏ. கே. விச்வநாத்



தயாரித்தவர்கள் :
சாரதி பிலிம்ஸ் லிமிடெட்,
சென்னை.

டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் :
சரஸ்வதி டாகீஸ் லிமிடெட்.,
பெஜவாடா.

தமிழ் நாட்டிற்கும், மைசூருக்கும்
ஜெமினி பிக்சர்ஸ் ஸர்க்யூட்,
சென்னை.

**அகக் கதவா ?** **ஆலயக் கதவா ?**


தற்காலம் நம் தென்னிந்தியாவில் எங்கு பார்த்தாலும் ஹரிஜனங்களின் ஆலயப்பிரவேச விஷயமான வார்த்தைகளே சப்திக்கின்றன.

ஹரிஜனங்களை மமதை பிடித்த ஜாதி ஹிந்துக்கள் எத்தனை விதங்களில் துன்புறுத்தி உயிரையும் போக்கத் துணிந்திருக்கிறார்கள் என்ற அதி உருக்கமான விஷயத்தையும், ஹரிஜனங்களுக்காகத் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தஞ்செய்துழைக்கும் சதிபதிகளின் அபரிமிதமான அன்பின் பெருக்கையும் பற்றி வெகு எளிய முறையில் தெளிவாக எழுதியுள்ள,

# மகிழ்ச்சி உதயம்

என்ற நாவலைப் படித்து முதலில் உங்கள் இதயக் கோயிலை அவர்களுக்குத் திறவுங்கள். பிறகு பகவானின் திருக்கோயில் தானாகவே ஆளின்றித் திறந்துகொள்ளும்

அணா 10. சந்தாநேயர்களுக்கு அணா 8



எஸ். ஆர்எம். கம்பெனியின் "மாத்ரு பூமி"யில்

குமுதினியும் ப்ரதாபும்




"மாத்ரு பூமி" பாடல்களை ஓடியன் ரிகார்டில் கேளுங்கள்.

விவரங்களுக்கு :— ஏஎல். ஆர்எம். கம்பெனி,

32, ஆதியப்ப முதலி தெரு, வேப்பேரி, சென்னை.

# ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய நாவல்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| **1925** | | | |
| 1. | வைதேகி | 2 | 8 |
| **1926** | | | |
| 2. | பத்மசுந்தரன் | 2 | 8 |
| **1927** | | | |
| 3. | சண்பகவிஜயம் | 1 | 12 |
| 4. | ராதாமணி | 2 | 8 |
| **1928** | | | |
| 5. | கௌரீமுகுந்தன் | 1 | 12 |
| 6. | நவநீதகிருஷ்ணன் | 2 | 0 |
| **1929** | | | |
| 7. | கோபாலரத்னம் | 0 | 14 |
| 8. | மாதவமணி | 0 | 3 |
| 9. | சாருலோசனை | 2 | 8 |
| **1930** | | | |
| 10. | சுகந்தபுஷ்பம் | 1 | 0 |
| 11. | வீரவஸந்தா | 0 | 8 |
| 12. | சாமளநாதன் | 2 | 0 |
| 13. | ருக்மிணிகாந்தன் | 2 | 0 |
| **1931** | | | |
| 14. | ஸாரமதி | 1 | 12 |
| 15. | நளினசேகரன் | 0 | 8 |
| **1932** | | | |
| 16. | பரிமளகேசவன் | 1 | 4 |
| 17. | மூன்று வைரங்கள் | 0 | 8 |
| 18. | உத்தமசீலன் | 1 | 4 |
| 19. | கதம்பமாலை | 0 | 12 |
| **1933** | | | |
| 20. | காதலின் கனி | 2 | 8 |
| 21. | சோதனையின்கொடுமை | 1 | 8 |
| 22. | படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 |
| **1934** | | | |
| 23. | தியாகக் கொடி | 2 | 0 |
| 24. | ஜெயஸஞ்சீவி | 0 | 4 |
| 25. | பக்ஷமாலிகா | 0 | 6 |
| 26. | புத்தியே புதையல் | 0 | 14 |
| **1935** | | | |
| 27. | மங்களபாரதி | 2 | 0 |
| 28. | பட்டமோ பட்டம் | 0 | 10 |
| 29. | சுகுணபூஷணம் | 0 | 4 |
| 30. | பிச்சைக்காரக்குடும்பம் | 0 | 8 |
| 31. | ஆனந்தஸாகர் | 0 | 8 |
| 32. | அம்ருததாரா | 0 | 4 |
| **1936** | | | |
| 33. | இன்பஜோதி | 1 | 4 |
| 34. | ராஜமோஹன் | 1 | 4 |
| 35. | அனாதைப் பெண் | 1 | 4 |
| 36. | ப்ரேமப்ரபா | 0 | 8 |
| **1937** | | | |
| 37. | அன்பின் சிகரம் | 0 | 4 |
| 38. | சாந்தகுமாரி | 1 | 0 |
| 39. | மாயப்ரபஞ்சம் | 1 | 0 |
| 40. | சந்திரமண்டலம் | 1 | 0 |
| **1938** | | | |
| 41. | வாழ்க்கையின் நாதம் | 1 | 4 |
| 42. | உளுத்த இதயம் | 0 | 4 |
| 43. | மகிழ்ச்சி உதயம் | 0 | 10 |
| 44. | ஜீவியச் சுழல் | 1 | 4 |
| 45. | மாலதி | 0 | 8 |
| 46. | வத்ஸகுமார் | 0 | 8 |
| **1939** | | | |
| 47. | கஸ்தூரீதிலகம் | 1 | 4 |

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீராகவ கவி.



| மலர் | பிரமாதி ௵ ஆவணி மீ | இதழ் |
|---|---|---|
| 16 | செப்டம்பர் 1939 | 9 |



## திருமால் துதி

திருமகள் மேவிச் சிறந்திடு மார்பன் திகழுநற்பூண்
பெருமகளாய்க் குலப் பெண்ணைக்கு நாதன் பிறங்கிருள்வாய்
வெருவர வந்தவள் வெம்முலைப்பா லொடு மாவியுண்ட
ஒருமகன் பொன்னடி யுன்னிட வல்வினை யோய்ந்திடுமே. 1.

வண்டு லாவிய மென்குழல் மாதராள்
வண்ண மாறிட வால்வளை சிந்திடும்
விண்டு லாவிய தென்றலு மன்றிலும்
வெய்ய வாயின மெய்யருள் பாலிப்பாய்
தண்டு லாவிய தாமரை மேவிய
தையல் வாழ்தரு மார்பகந் தங்கிய
தண்டு ழாய் தரினுய்குவ ளன்றெனில்
தாவி யாவியு நீங்குமென் னையனே ! 2.

கண்டு லாவிய மென்மொழிக் காரிகை
காமர் நின்னுருக் கண்டனள் போலுமால்
பண்டு லாவிய மெய்ந்நிறப் பண்பெலாம்
பாறி மாறிடும் பாயலு மூந்துவாள்
விண்டு லாவிடின் வெந்துயிர் வெம்புமால்
வெய்ய நோயினை வீட்டுதல் நின்கடன்
தொண்டு லாவிய மெய்ப்பொருட் டுயனே
தூய மாமறை தேடுந் துணைவனே ! 3.

—திரு. ராகவாசாரியார்.

# உண்ணாவிரதத்தின் உயர்வு

## மகாத்மா காந்தி

### சர்க்கார் கடமை

"உண்ணாவிரதம் என்பது ஒரு பிளேக்கைப் போலாய்விட்டது. ரொம்ப அல்ப காரணங்களுக்காகக் கூட சிலர் உண்ணாவிரதம் இருக்க விரும்புகிறார்கள். ஆகவே, சிறையிலிருந்து விடுதலை பெறுவதற்கு உண்ணாவிரதமிருப்பதையாவது சந்தேகத்திற்கிடமில்லாத பாஷையில் காரியக் கமிட்டி கண்டித்திருப்பது நல்ல காரியம். காரியக் கமிட்டி அத்துடன் நில்லாமல், உண்ணாவிரதமிருப்பவர்களுக்குப் பலவந்தமாக உணவை உட்செலுத்தும் முறையையும் கண்டித்திருக்க வேண்டும். ஒரு கைதியின் உடலாயிருந்தாலும், மனித உடல் மிகவும் புனிதமானது. அதில் நினைத்தபடி செய்யக்கூடாது. பலவந்தமாக உணவுகளை உட்செலுத்துவது அளவுக்கு மீறிய உரிமையைப் பிரயோகிப்பதாகுமென்று நான் கருதுகிறேன். கைதிகளின் உடல்கள் சர்க்கார் வசத்தில்தான் இருக்கின்றன என்பது உண்மையே. ஆனால், அவர்களின் ஆத்மாவைக் கொல்லும் அளவுக்குச் சர்க்காருக்கு உரிமையில்லை. சர்க்காருக்குள்ள உரிமைக்கு ஒரு அளவு இருக்கிறது. ஒரு கைதி, பட்டினி கிடந்து சாவதென்று தீர்மானித்தால், அவரைப் பேசாமல் அப்படிச் செய்யும்படி விட்டுவிட வேண்டுமென்றே நான் கருதுகிறேன். உண்ணாவிரதத்துக்கு ஏதாவது சக்தியும், அந்தஸ்தும் இருக்கிறதென்றால், உண்ணாவிரதிக்குப் பலவந்தமாக உணவை உட்செலுத்தினால், அந்த சக்தியும், அந்தஸ்தும் போய்விடுகிறது. மூக்கு வழியாகவோ, வாய் வழியாகவோ எப்படியாவது போதிய உணவை உட்செலுத்திவிட்டால், உண்ணாவிரதம் என்பது வெறும் கேலிக்கூத்தாய் விடுகிறது. மூக்கின் வழியாக உணவை உட்செலுத்தினால் மனதுக்குப் பிடிக்காது. ஆனால், சில தினங்களுக்குப் பிறகு இந்த உணர்ச்சி போய் விடுகிறதென்று அறிகிறேன்.

### சில போலிகள்

கைதி இந்த முறையைக் கடுமையாக எதிர்த்தால் கஷ்டமாயிருக்கும். ஆனால், இப்படி எதிர்ப்பவர்கள் ரொம்ப அபூர்வம். வெகு நாட்களுக்கு இப்படி எதிர்ப்பது சாத்தியமில்லை. நல்ல உறுதியுள்ளவராயிருந்தால், முதல் நாளன்றே பிராணனை விட்டுவிடுவார். ஆனால், அதற்கு ரொம்ப துணிச்சலும், சாவில் அலக்ஷியமும் இருக்கவேண்டும். எப்படியிருந்தாலும் பலவந்தமாக உணவை உட்செலுத்துவது நாகரிகமில்லாத காலத்துப் பழக்கமாகும். அதை விட்டுவிடவேண்டுமென்பதே என் திடமான நம்பிக்கை. உண்ணாவிரதிகள் என்ற வரட்டு கௌரவத்தைப் பெறுவதற்காகச் சில கைதிகள் இந்தப் பலவந்தமுறையை வரவேற்கிறார்களென்பதை நான் அறிவேன். பலவந்தமுறையை நிறுத்தினால் இந்தக் கைதிகள் வருத்தப்படுவார்களென்று ஜெயிலர்கள் பல சமயங்களில் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். இப்போதுள்ள ஜெயில் விதிகளில் கைதிகள் பட்டினி கிடந்தால், பலவந்தமாக உணவை உட்செலுத்தித்தான் ஆகவேண்டுமாம். அப்படிச் சட்டமிருந்தால் அதைத் திருத்தும்படி சிபார்சு செய்கிறேன்.

சென்னை 600 008

### காரியக்கமிட்டிக்குச் சிபார்சு

அனுமதியில்லாமல் அரசியல் உண்ணுவிரத மிருப்பது கட்டுப்பாட்டை மீறிய செய்கையாகுமென்று ஒரு விதி செய்யக்கூடாதா வென்பதையும் காரியக் கமிட்டி ஆலோசிக்கவேண்டும். ஒருவருடைய சொந்த நன்மைக்காகவும், சமூக நன்மைக்காகவும் தவிர, தனிப்பட்ட நபர்களின் சுதந்தரத்தில் கட்டுப்பாடுகள் விதிப்பது எனக்குப் பிடித்தமில்லை. ஆனால், உண்ணுவிரதம் என்பது பெரிய நியூஸன்ஸாய் விட்டது. இது ரொம்ப பெரிதாவதற்கு முன் அதைத் தடுக்க காரியக் கமிட்டி நடவடிக்கை எடுத்துக் கொள்வது நல்லது. இம்மாதிரி விஷயங்களில் காரியக் கமிட்டி செய்யும் தீர்மானத்திற்கு மதிப்பு உண்டு. இந்த உண்ணுவிரத முறை துஷ்பிரயோகம் செய்யப்படாமலிருப்பதற்கும் அது ஒரு தடையாயிருக்கும். அதை அமுலுக்குக் கொண்டுவர வேண்டிய அவசியமே இல்லாமலிருக்கலாம்.''

52
M211,N22 JM
F34-16

---

## ஞானோதயம்

அகில இந்திய வர்ணுசிரம ஸ்வராஜ்ய சங்கத் தலைவர் ராவ்சாகிப் ஸ்ரீ. என். நடேசய்யருக்கு, கொல்லங்கோடு ராஜா ஸ்ரீ. வாசுதேவ் ராஜா எம். எல். ஏ. (டில்லி) அனுப்பியுள்ள கடிதமொன்றில் ஆலயப் பிரவேசத்திற்கு எதிராக நடந்துவரும் கிளர்ச்சிக்கு மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டு, இவ் விஷயத்தைச் சும்மா விட்டுவிடக் கூடாதென்றும், நமது ஹிந்துமதத்தைக் காப்பாற்ற மூஸ்லிம் லீகிலோ, அல்லது ஸ்ரீ. போஸின் உதிரிக்கட்சியிலோ சேரலாமென்றும் ஆலோசனை கூறியுள்ளார்.

கிறிஸ்தவ மதத்திலோ நாஸ்திகர் கட்சியிலோ சேர்ந்தால் சனுதன தர்மம் ஓங்கி நிலைநிற்கும் என்று கூற ராஜா சாஹிப்புக்கு ஞானோதயம் ஏற்படவில்லை போலும்.

*　　*　　*　　*　　*

ஆகஸ்டு 5-ந் தேதி ஸ்ரீ. முஹம்மதலி ஜின்னு செய்த ஒரு பிரசங்கத்தில், ஜனநாயகம் இந்தியாவுக் கேற்றதல்லவென்று கூறினர்.

'ஹிந்துக்கள், முஸ்லிம்கள், ஆகிய இரு மதத்தினருடைய கலாசாரங்களும் வெவ்வேருனவை. ஆகையால், அதிகாரத்தைப் பெறும் ஒரு வகுப்பினர், மற்றொரு வகுப்பினரை அடக்கப் பார்ப்பது இயற்கையே. பலவிதமான ஜாதியினருள்ள இந்நாட்டில், பார்லிமெண்டரி நிர்வாகமென்ற ஜனநாயக முறை அசாத்தியமென்றே நான் கருதுகிறேன். எதிர்காலத்தின் ஆட்சி முறை எப்படி இருக்கவேண்டுமென்பதை இனிமேல்தான் முடிவு செய்யவேண்டும்.

இத்தனை வருஷங்களாக தேச ஒற்றுமைக்காகப் பாடுபடுகிறேனென்று பறைசாற்றிய ஜனுப் ஜின்னுவுக்கு இப்போதுதான் ஞானோதயம் உண்டாயிற்றே !...ஹிட்லரைப்போல் தான் ஸர்வாதிகாரியாய் விட்டால் ஒருவேளை எதிர்கால அரசியல் முறையைப்பற்றி முடிவு செய்துவிடுவார் போலும்.

# செய்தித் திரட்டு

## ஐரோப்பிய நாடுகளின் ஸைன்ய பலாபலம்

இன்று ஐரோப்பாவில் (ரிசர்வுகள் நீங்கலாக) ஆயுதந் தாங்கிய துருப்புகள் 85 லக்ஷம் இருக்கின்றன. கடற் படை, விமானப் படைகளை இதில் சேர்க்கவில்லை. ரோம் பெர்லின் அச்சின் பலமும், சமாதான முன்னணி பலமும் ஏறக்குறைய ஒரே அளவுக்கு இருக்கின்றன,

**சமாதான முன்னணி**

| | லக்ஷம் |
|---|---|
| பிரான்ஸ் | 10 |
| பிரிட்டன் | 6 |
| போலந்து | 5 |
| துருக்கி | 3 |
| ருமேனியா | $2\frac{3}{4}$ |
| கிரீஸ் | 2 |
| மொத்தம் | $28\frac{3}{4}$ |

**ரோம்-பெர்லின் அச்சு**

| | லக்ஷம் |
|---|---|
| ஜெர்மனி | $17\frac{1}{2}$ |
| இத்தாலி | $9\frac{1}{4}$ |
| ஹங்கேரி | 2 |
| மொத்தம் | $28\frac{3}{4}$ |

ஸ்பெயின், ரோம்-பெர்லின் அச்சில் சேர்ந்தால் இன்னம் $1\frac{1}{2}$ லக்ஷம் துருப்புக்கள் கிடைக்கும்.

நடுநிலைமை நாடுகளில், ஜுகோஸ்லேவியா 3 லக்ஷம், பல்கேரியா 1,60,000, ஹாலந்து, போர்சுகல், ஸ்வித்ஸர்லாந்து (தலா 30,000) துருப்புக்களை வைத்திருக்கின்றன.

ஸோவியத் ரஷ்யாவிடம் 20 லக்ஷம் துருப்புகள் இருக்கின்றன. எனவே, ரஷ்யா ஆதரிக்கும் கக்ஷியை முறியடிக்கவே முடியாது.

## ரஷ்ய-ஜர்மன் ஒப்பந்தம்

1. ரஷியா ஜெர்மனியை தாக்காது ; ஜெர்மனி ரஷியாவை தாக்காது. தனியாகவும் தாக்காது ; பிறருடன் சேர்ந்தும் தாக்காது. (இதுதான் அனாக்ரமிப்பு ஒப்பந்தத்தின் மூல மந்திரம். 2. ஜெர்மனியையோ, ரஷியாவையோ வேறு நாடு தாக்கினால் அந்த 3-வது நாட்டுக்கு ஆதரவளிக்காது. (அதாவது ஆக்கிரமிப்பதில்லை ; பிரிந்து ஆக்கிரமிப்புக்கு உதவுவதுமில்லை.) 3. இருவருக்கும் அக்கரையுள்ள விஷயங்களில் பரஸ்பரம் கலந்து பேசுவது. (நேச முறை) 4. 'நேரடியாகவோ, மறைமுகமாகவோ இருவரில் எவர்மீதும் பிரயோகிக்க உத்தேசிக்கப்படும் கூட்டுறவுகளில் இரண்டு நாடுகளும் சம்பந்தப்படாது. 5. பரஸ்பரம் தகராறு ஏற்பட்டால், நேச முறையில் பேசுவது ; அவசியமானால் மத்யஸ்த கமிஷன்மூலம் தகராறை தீர்ப்பது. 6. இவ்வொப்பந்தம் 10 வருஷகாலம் அமுலிலிருக்கும். 7. உடனே அமுலுக்கு வரும்.

## 1946-ல் பிலிப்பைனுக்குச் சுதந்திரம்

1946-ல் பிலிப்பைன் தீவுகளுக்கு சுதந்திரம் தருவதற்கு ஏற்பாடாயிருக்கிறது. அதை யுத்தேசித்து இரண்டு நாடுகளுக்கு மிடையே இருந்து வரும் உறவை மாற்றி யமைத்துக்கொள்ளும் மசோதாவை பிரெஸிடெண்ட் ரூஸ்வெல்ட் அங்கீகரித்துவிட்டார். தேங்காய் எண்ணெய், அலங்கார வஸ்துக்கள், முத்துப் பொத்தான்கள், புகையிலை முதலியன வரியின்றி அமெரிக்காவில் அநுமதிக்கப்படும்.

## "எனக்குச் சுதந்தரமில்லை"

"நடுநிலைமைச் சட்டத்தை மாற்றுவதற்குள திரிடையாக வோட்டளித்த காங்கிரஸ் மெம்பர்கள், நான் ஒன்றும் செய்ய முடியாமல் என் கைகளைக் கட்டி விட்டார்கள். யுத்தம் வரும்போலிருந்தால், அதைத் தடை செய்வதற்காக அமெரிக்கா முயற்சிப்பதற்கு எனக்கு அதிகார மில்லாமற் போய் விட்டது. இது மிகவும் கஷ்டம் நிறைந்த பொறுப்பாகும்.

—ரூஸ்வெல்ட்.

## சிறுத்தையைக் கொன்ற பசு

ஆகஸ்டு 3உ மாலை சுமார் 3-மணிக்கு கடயத்துக்குப் பக்கத்தில் உள்ள மலைப்பக்கம் சில பசுக்கள் மேய்வதற்காகச் சென்றிருக்கும்போது திடீரென்று ஓர் சிறுத்தை வந்து ஓர் கன்றுக்குட்டியைக் கொல்ல முயற்சிக்கும் சமயத்தில் அதன் தாய் தனது கொம்பினால் சிறுத்தை வயிற்றில் குத்தி வெகு தூரத்திற் கப்பால் தள்ளிவிட்டது. சிறுத்தை இறந்துவிட்டது. மேற்படி பசு ஸ்ரீமான். கே. சங்காராயர் அவர்களுடையதென்று தெரியவருகிறது. இறந்துபோன சிறுத்தையை ஜனங்கள் ஊர்வலமாக எடுத்துச்சென்றார்கள்.

## பைத்தியத்தின் வயிற்றில் 153 நாணயங்கள்

ஒரு பைத்தியத்தின் வயிற்றிலிருந்து 153 நாணயங்கள் எடுக்கப்பட்டன. இவைகளின் பெறுமானம் ரூ. 4–8–0. பம்பாய் போலீஸாரால், ஆஸ்பத்திரியில் இறந்த அவன் பிரேதம் பரீக்ஷை செய்யப்பட்டது. அப்போது பல நிக்கல், செப்பு நாணயங்கள் வெளிவந்தன. பாவம் அந்த மனிதன் தன் "இரும்புப் பெட்டியில்" ஜாக்ரதையாக இவ்வளவையும் சேர்த்து வைத்திருந்தான். இப்போது இந்த நாணயங்கள் மெடிகல் காலேஜில் வைக்கப்பட்டிருக்கின்றன.

## 'பியூன்களுக்கு' குறிப்பிட்ட நேரம்

சர்க்கார் சேவகத்திலிருக்கும் 'பியூன்களின்' வேலை நேரம் பம்பாய் சர்க்காரால் வரையறுக்கப்பட்டிருக்கிறது. சனிக்கிழமையைத் தவிர மற்ற தினங்களில் தினசரி 9 மணி நேரம் வேலை செய்தால் போதும். மத்தியில் 1 மணி நேரம் அவகாசமுண்டு. சனிக்கிழமையில் 6½ மணி நேரம் வேலை செய்தால் போதும். அன்று ½ மணி நேரம் மத்தியில் அவகாசம் அளிக்கப்படும். ஆனால், இந்த விதிகள் ஹைக்கோர்ட்டை கட்டுப்படுத்தாது.

## "ஏன் எதிரிகளைப் போலிருக்கவேண்டும்?"

"இன்றைய பிரச்னைகள்" என்பது பற்றி, பம்பாய் உள் நாட்டு மந்திரி ஸ்ரீ. கே. எம். முன்ஷி, ஆகஸ்டு மாதம் 10.ந் தேதியன்று பம்பாய் இஸ்லாமியா காலேஜில் ஒரு பிரசங்கம் செய்தார்.

தொடர்ச்சியாக இந்தக் காலேஜில் சில பிரசங்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. முதல் பிரசங்கம் ஜனப் ஜின்னு செய்தார். அவர் அதில்தான் ஜனநாயகம் இந்தியாவுக் கேற்றதல்ல வென்று கூறினர். வகுப்புவாதம், மாகாண உணர்ச்சி முதலிய குறுகிய எண்ணங்களைச் சமாளித்துத் தேசீய உணர்ச்சி வெற்றிபெற முடியுமா வென்பதே இன்றைய பிரச்னை. இந்தச் சக்திகள் ஏதாவது, தேசீயத்தைச் சிதைத்தால், இந்தியா சுதந்தரம் பெற முடியாது.

"மொகலாயர்கள், மகாராஷ்டிரர்கள் முதலியோர் தங்கள் ராணுவ பலத்தினல், அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்தினர்களே யொழிய, ஒரு சமுதாயத்தைச் சிருஷ்டிக்க வில்லை. ஆனல், இன்று நாம் அந்தப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கும் சமுதாய உறுதியின் சின்னம்தான் காந்திஜி.

ஹிந்துஸ்தான் ஹிந்துக்களுக்குத் தான் சொந்தம். ஜெர்மனியிலிருந்து யூதர்களை வெளியேற்றுவதுபோல் முஸ்லிம்களையும் இந்தியாவிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்று சொல்பவர்கள் சிலர் இருக்கிருர்கள். அதைப்போல் முஸ்லிம்களிலும் இருக்கிருர்கள். ஹிந்துக்களும், முஸ்லிம்களும், ஒருவரோடொருவர் சண்டை போட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிருர்கள். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும், பாஷை, கல்வி, கலாசாரம், எல்லாவற்றிலும் வித்தியாசமிருப்பதாயும், இரண்டும் சேர முடியாதென்றும் சொல்லுகிருர்கள். சரித்திரத்தைப் பார்த்தால் இது உண்மையாக இல்லையே!

ஹிந்தி இலக்கியத்தை ஸ்தாபித்த ஹயாவி என்பவர் முஸ்லிமல்லவா? இஸ்லாத்திலிருந்து, ஹிந்து மதத்திற்கு வந்த இருவர் இன்று வைஷ்ணவர்களால் பெரிய ஆசாரியர்களாகக் கருதப்பட வில்லையா? ராமானந்த், குருநானக் ஆகியோர்களின் சித்தாந்தங்களுக்கும், இஸ்லாம் மார்க்கத்துக்கும் சம்பந்தமில்லாமலா இருக்கிறது? ஒரே லக்ஷியத்திற்காகப் போராடி ஹிந்துக்களும், முஸ்லிம்களும், தம் ரத்தத்தைச் சிந்தவில்லையா? அக்பர் சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டிப்பதற்கு ஹிந்துக்களின் உதவி யில்லாமலா இருந்தது? மகோன்னதமான தேசீய ஸ்தாபனமாகிய காங்கிரஸ் மகா சபையின் வளர்ச்சிக்கு ஹக்கீம் அஜ்மல் கான், மௌலான ஆஸாத் போன்றவர்கள் பாடு படவில்லையா? ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் பொதுவான அம்சங்கள் எவ்வளவோ இருக்கின்றன. நாம் ஒன்ருக நின்று எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்திருக்கிறோம். எவ்வளவோ வெற்றிகள் பெற்றிருக்கிறோம். எதற்காக நாம் எதிரிகளைப்போலிருக்கவேண்டும்"

## குடிசைத் தொழில்

க்ஷீணித்து வரும் குடிசைத் தொழில்களை மீண்டும் புனருத்தாரணம் செய்யவேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறார்கள். இதை எப்படிச் செய்வது என்பதுதான் பிரச்னை.

உற்பத்தி சங்கங்களை ஆரம்பித்துவிட்டு, இவைகளை விற்பனை செய்யும் பொறுப்பை வியாபாரிகளிடம் விட்டுவிடலாமா? இப்படிச் செய்தால், உற்பத்தி செய்பவர்கள் வெகு சீக்கிரத்தில் வியாபாரிகளின் அடிமைகளாய் விடுவார்கள். ஆகையால், எல்லா இடங்களிலும் விற்பனை டெப்போக்கள் ஆரம்பிக்க வேண்டியது அவசியம்.

அத்துடன் அவர்களுடைய உற்பத்திக்குத் தேவையான மூலதனத்தையும் நாமே கொடுத்து ஏன் உதவக் கூடாது?

அகில பாரத சர்க்கா சங்கத்துடன் ஒரு ஏற்பாடு செய்துகொள்ள முடிந்தால், அவர்களுடைய டெப்போக்களிலேயே குடிசைத்தொழில் உற்பத்திகளை விற்பனைக்கு அனுப்பலாம். அதைத் தவிர, கமிஷன் முறையில் இதர இடங்களிலும் விற்பனை டெப்போக்கள் ஆரம்பிக்க வேண்டும். மாகாண குடிசைத் தொழில் சங்கத்துக்கு, சென்னை மாகாண கோவாபரேடிவ் பாங்க் பண உதவி செய்யவேண்டும். எல்லா கிளை சங்கங்களும், கைத்தொழில் இலாகா டைரக்டரின் மேற் பார்வையில் வேலை செய்ய வேண்டும்."

—பட்டாபி சீதாராமையா.

## ஸ்ரீ. போஸ் 4 அணு மெம்பர்தான்

### மற்ற உரிமைகள் கிடையாது

"ஸ்ரீ. போஸுக்கு மாஜி காங்கிரஸ் அக்கிராசனர் என்ற ஹோதாவில், அ. இ. கா. கமிட்டி மெம்பராகவும் காங்கிரஸின் டெலிகேட்டாகவும் இருக்க உரிமையுண்டா?" என்ற கேள்விக்கு ஆசார்ய கிருபளானி பின்வருமாறு பதிலளித்தார்:—

அவர்மீது எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையானது அவருடைய அந்த உரிமைகளை யெல்லாம் பறித்துவிட்டது, ஸ்ரீ. போஸ் விரும்பினால் 4 அணு மெம்பராக இருந்து வரலாம்.

## "இயற்கை விளையாட்டுகளே சிலாக்கியமானவை"

"டென்னிஸ், கிரிக்கெட், பிலியர்ட்ஸ் போன்று அதிகச் செலவுள்ள விளையாட்டுகளை விட, இயற்கையான விளையாட்டுகளான, ஓடுதல், தாவுதல், கோலி விளையாடுவது போன்றவைதான் பெரிதும் விரும்பத் தக்கவை. குழந்தைகள் ஆரோக்கியமான வீடுகளில் வசிப்பதற்கும் வயிறார உண்பதற்கும் சமூகம் ஏற்பாடு செய்தாலொழிய, அதிகப்படிச் செலவுள்ள விளையாட்டுகளில் கவனம் செலுத்துவது பொருத்தமாகாது."

—கனம் ஸி. ஜே. வர்க்கி.

# நீதி சந்திரிகை

வஞ்சகமும் பொய்யும் வறுமைக்கு வித்தான
விஞ்சும் அழுக்காறு வேணவா—நெஞ்சம்
மிகக்கெடுக்கும் வெஞ்சினமும் மேலோர் விரும்பார் :
நகைக்கிடமாம் ஆதலினால் நன்கு. ௨௧

கற்றாரை நீத்திடுவார் ; கல்லாரைச் சேர்ந்திடுவார் :
அற்றாரை நிந்திப்பர் : ஆதலால்
உற்றார் எனினும் உணர்வொன்றும் இல்லாரைச்
சற்றேனும் தேறற்க சார்ந்து. ௨௨

நன்றிச் செயலொன்றே நண்பன் குறியல்ல :
நன்றியில் தீச்செயலும் நள்ளார்க்குத்—துன்றும்
குறியல்ல : அவ்வவர்தம் கூறு மனத்தின்
செறிகுணமே காரணமாம் தேர். ௨௩

இயற்கைக் குணமொன்றே எவ்விதமும் நாடும்
முயற்சிக் குரித்தா முயல்க—அயற்குணங்கள்
யாவும் அகன்றொழிய அவ்வியற்கை யொன்றுமே
ஓவாது நிற்கும் உயர்ந்து. ௨௪

கற்றறிந்தோர் தாமுங் கடுங்காமத் தீப்பற்றின்
உற்றுணர்வு மோய்ந்தே உழலுவார் : —மற்றோர்
செயல்உரைப்ப தென்னோதான் சேண்விசும்பின் வேந்தன்
கயல்உலவு மெய்யே கரி. ௨௫

மெல்லியலார் பால்வேட்கை மேவிக் கிடந்துழன்ற
புல்லியரில் தண்டகனும் போகியொடு—மல்லுயர்தோள்
பெற்ற இராவணனும் பேரழிந்தார் ஈதன்றோ
சிற்றின்பம் செய்த செயல். ௨௬

வறியோன்செய் ஆகுலமும் : வன்பணியாள் சீற்றம் :
செறிவிரக்கம் இலாதான் செல்வம் : —நெறியற்ற
தையல் கொழுநன்பால் சாரன்பும் : இந்நான்கும்
மையல் மனத்தினரின் மாண்பு. ௨௭

—திரு. ராகவாசாரியார்.

# மகாத்மாவின் மணிவாக்கு

## ஹிந்துமத சீர்திருத்தம்

ஆலய சீர்திருத்தமும், ஆலயப் பிரவேசமும், சேர்ந்தாற்போல், ஒன்றோடொன்று சேர்ந்து நடக்கவேண்டும். இது மேலெழுந்த வாரியானதல்லவென்றால், ஹிந்து மதத்தையும், ஹிந்துக்களையும் பரிசுத்தமாக்க வேண்டுமென்ற விருப்பத்திற்கு இது ஒரு அடையாளமென்றால், இதைத் தொடர்ந்து ஆலயங்களும் எல்லா வழிகளிலும் பரிசுத்தப்படுத்தப்பட வேண்டும். ஆலயங்களின் புனிதமும், செல்வாக்கும் விருத்தியாகவேண்டும். ஹரிஜனங்களை ஆலயங்களுக்குள் அனுமதிப்பதே, அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதா யிருக்கவேண்டும். ஹரிஜன ஊழியர்கள் ஜாக்கிரதையாக இருந்து, தங்கள் முயற்சிகளை இன்னும் அதிகமாக்கி, இந்தச் சீர்திருத்தத்தினால் தங்கள் வாழ்க்கையும் உயர்ந்திருக்கிறது என்று கருத ஆரம்பித்தா லொழிய இதெல்லாம் ஏற்படாது. ஹரிஜன ஆலயப் பிர பிரவேசம்போன்ற சீர்திருத்தத்தினால் இரு சாராரின் வாழ்க்கைகளும் உயரவேண்டும்.''

## நான் சர்வாதிகாரியல்ல

மத்திய மாகாண மந்திரிகள் விஷயத்திலோ, காரியக் கமிட்டியிலோ, நான் சர்வ வல்லமையுள்ளவனல்ல. மந்திரிகள் என்ன செய்கிறார்களென்பதைப்பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது. அவர்களுடைய வேலையில் நான் தலையிடுவதே இல்லை. அது என்னுடைய வேலையென்று நான் கருதியதே இல்லை, கிராமக்கைத்தொழில்கள், மூலக்கல்வி போன்ற விஷயங்களைப்பற்றி எப்போதாவது அவர்களுடன் நான் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்வதுண்டு. சாதாரணமாக எந்தப் பிரஜையும் செய்வது போலவேதான் நானும் செய்கிறேன். அவர்களுடைய வேலையில் தலையிட முடியாதென்றே நானெப்போதும் மறுத்துவந்திருக்கிறேன். நான் தலையிட வேண்டுமென்று விரும்பினாலும், எனக்கு அவகாசம் கிடைக்காது. அப்படிச் செய்வது பார்லிமெண்டரி சப்-கமிட்டியின் வேலையில் ஆக்ரமிப்பதாகும்.

### காரியக் கமிட்டியிடம் உள்ள சம்பந்தம்

காரியக்கமிட்டி கூட்டங்கள் சம்பந்தப்பட்டவரையில் என்னை அழைக்கும்போது நான் போகிறேன். என்னை அபிப்பிராயம் கேட்டால் ஏதாவது சொல்லுகிறேன். என்னைக் கேட்காத விஷயங்களைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதில்லை. பல கூட்டங்களுக்கு நான் போவதே இல்லை. அவர்கள் நிறைவேற்றும் பல தீர்மானங்கள் எனக்குத் தெரியவே தெரியாது. பத்திரிகைகளில் வெளியானபிறகுதான் எனக்குத் தெரியும். காங்கிரஸுக்கும், எனக்குமிருந்த சம்பந்தத்தை நான் கத்தரித்துக்கொண்டபோது செய்யப்பட்ட ஏற்பாடு இதுதான். நான் சொல்வது சரியாக இருந்தால்தானே என் அபிப்பிராயம் ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு ரகசியத்தை வெளியிடுகிறேன்.

பல சமயங்களில் நான் சொல்லும் அபிப்பிராயம் காரியக் கமிட்டி மெம்பர்களுக்குப் பிடிப்பதில்லை. உதாரணமாக—என் இஷ்டப்படி விட்டால், காங்கிரஸை மிகவும் சிறியதாகக் குறைத்துவிடுவேன். பொறுக்கி யெடுக்கப்பட்ட சிலர்தான் அதில் இருப்பார்கள். தேசம் நினைத்தபோது அவர்களை நீக்கிவிடலாம். ஆனால், அவர்கள் சமர்ப்பிக்கும் வேலைத்திட்டத்திற்குத் தேச மக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு கிடைக்கும் முறையில் நடந்து கொள்வார்கள். ஆனால், இது ரொம்ப கடுமையானது. இது, ஜனநாயகத்துக்கு முரணாயிருக்கிறதே யென்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுவார்கள்.

## கதர் விதி

கதர் விதியினால், பொய்யும், வேஷமும் ஏற்பட்டுவிட்டதென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். என் இஷ்டப்படி விட்டால், அது வெகு நாளைக்கு முன்பே ரத்தாயிருக்கும். நான் காங்கிரஸிலிருந்து விலகியபோதே அந்தக் கதர் விதியை ரத்து செய்ய முயற்சித்தேன். அதற்குப் பிறகும் பல தடவைகளில் முயற்சித்தும் பிரயோஜனப்படவில்லை. இந்த விதியை ரத்து செய்வதைப் பொதுவாகக் காங்கிரஸ்காரர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்று எனக்குப் பதில் சொல்லப்பட்டது. அதைப்போலவே, காங்கிரஸ் அமைப்பிலிருந்து, "அமைதியானதும் நியாயமானதுமான" என்ற வார்த்தைகளை எடுத்துவிடவும் பல தடவை முயற்சித்திருக்கிறேன். காரியக் கமிட்டி என் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளாத சந்தர்ப்பங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

காரியக் கமிட்டிமீது புகார் செய்யும் முறையில் இதையெல்லாம் நான் சொல்லவில்லை. என்னுடைய அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளாததற்கு அவர்களுக்கு நல்ல காரணங்களிருந்தன. இதனால் எனது பழைய சகபாடிகளிடமிருந்து பிரிந்துவிட வேண்டுமென்று என் மனதில் படவில்லை. அவர்களைவிட நான் உயர்ந்தவன் என்ற கர்வம் எனக்கில்லை. அவர்களுடன் சேர்ந்து வேலை செய்வது ஒரு பாக்கியம். என்னைப்போல் அவர்களும் உண்மையான தேச ஊழியர்கள்தான். என்றைக்காவது ஒருநாள் அவர்கள் என் கருத்தை ஒப்புக்கொள்வார்கள் அல்லது அவர்கள் கருத்தை நான் ஒப்புக்கொள்வேன் என்ற நம்பிக்கையுடன் நான் அவர்களிடம் ஒட்டிக்கொண்டிருக்கிறேன்.

## மந்திரிகளின் நல்ல வேலை

இப்போதுள்ள ஆட்சியைவிட இதற்கு முன்னிருந்த ஆட்சி இன்னும் சுத்தமாக இருந்ததென்று சொல்வதையும் நான் ஒப்புக்கொள்ளவில்லை. காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குள் ரொம்ப ஊழல் புகுந்துவிட்டதென்பதையும் அதில் பல சுயநலக்காரர்கள் இருக்கிறார்களென்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், பழைய நிர்வாகத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், காங்கிரஸ் நிர்வாகம் அதிக பரிசுத்தமாகத்தான் இருக்கிறதென்பதே என் திடமான நம்பிக்கை. மக்களின் நன்மைக்கான பல காரியங்களைக் காங்கிரஸ் மந்திரிகள் செய்திருக்கிறார்களென்றும் நான் உறுதியாக நம்புகிறேன். இவைகளில் மதுவிலக்கு தலை சிறந்ததென்று நான் நம்புகிறேன். ஆனால், இன்னும் செய்யவேண்டியவை எவ்வளவோ பாக்கி இருக்கின்றன என் பதிலும் சந்தேகமில்லை.

காங்கிரஸின் ஊழல்கள் என்றைக்காவது நிவர்த்தியாகி அது பரிசுத்தமாய் விடுமென்று, நம்பிக்கொண்டிருக்கிறேன். ஒருவர் பயப்படுவதற்குக்

காரணமிருக்கிறதென்பதை மறுக்கமுடியாது. ஆனால், எதுவும் கடைசியாக சரியாய்விடு மென்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை யுண்டு. ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் தன் கடமை என்னவென்பதைச் சிந்தித்துப் பார்க்கும்படித்தான் நிலைமை இருக்கிறது. பரிசுத்தந்தான் காங்கிரஸின் அஸ்திவாரம். அது இல்லையென்றால் காங்கிரஸ் போய்விடும்.

## சமஸ்தான பிரஜைகளுக்கு

சமஸ்தானப் பிரச்னை ஒவ்வொரு நாளும் மிகவும் பெரிதாகிக் கொண்டே வருகிறது. சமஸ்தானாதிபதிகள் தமது துப்பாக்கிகளை மிக தாராளமாகப் பிரயோகிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆதிபத்ய சர்க்கார் எதுவும் செய்யுமோ என்று தாங்கள் பயப்படவேண்டியதில்லை என்று சமஸ்தானாதிபதிகள் கருதுகிறார்கள். காங்கிரசுக்கு இவர்களிடம் அதிக செல்வாக்கு இல்லை. பல சமஸ்தானாதிபதிகள் இப்போது, மக்களிடையே வளர்ந்து வரும் சுதந்தர உரிமை உணர்ச்சியை நசுக்குவதற்குத் திட்டம் போட்டு வேலை செய்கிறார்கள்; காங்கிரஸ் தலையிடுவதை அனுமதிப்பது ஒரு புறமிருக்க, காங்கிரஸானது சமஸ்தான பிரஜைகளுக்கு யோசனை கூறுவதைக்கூட அசாத்தியமாக்கிவிட வேண்டுமென்று சமஸ்தானாதிபதிகள் வேலை செய்கிறார்கள்.

### காங்கிரஸ் கடமையைக் கைவிட முடியாது

ஆனாலும் காங்கிரஸுக்கு ஒரு கடமை இருக்கிறது. சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டின் அமைப்பு விதிகள் எனக்குத் தெரியாது; ஆனாலும் ஏதோ ஒரு விதத்தில் ஏதேனும் ஒரு துறையில் அந்த ஸ்தாபனம் காங்கிரஸுடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது. எப்படியாயினும் சமஸ்தானப் பிரஜைகளுக்குக் கிரியாம்சத்தில் யோசனை கூறி வழிகாட்டுவதற்கு லாயக்கான ஸ்தாபனம் சமஸ்தான பிரஜைகள் மகாநாடுதான் என்று நினைக்கிறேன்; வேறு ஸ்தாபனமில்லை. அந்த ஸ்தாபனம் யோசனைகூறுவது உசித மல்லவென்று சமஸ்தானங்கள் நினைத்தால் அது தவறாகும். அம்மாதிரி புறக்கணிப்பதில் பயனில்லையென்பதை அவை உணரவேண்டும். அவசிய மேற்படும்போது, சமஸ்தானப் பிரஜைகளுக்கு யோசனை கூறி, வழிகாட்டும் கடமையைக் காங்கிரஸ் கைவிட முடியாது.

### காங்கிரஸில் பாதுகாப்பை ஆக்ஷேபிப்பதேன்?

ஆதிபத்ய சர்க்காருக்கு எதிராக நின்று சமஸ்தானங்களின் (சமஸ்தானாதிபதிகளின்) உரிமையைக் காங்கிரஸே பாதுகாத்து வந்த காலமும் ஒன்று உண்டு. சமஸ்தானங்கள், தேவை ஏற்படும் காலத்தில் காங்கிரஸின் நட்பை விரும்புமானால், தமது பிரஜைகள் அதே காங்கிரஸின் பாதுகாப்பையும் புத்திமதியையும் நாடுவதைச் சமஸ்தானாதிபதிகள் ஆக்ஷேபிப்பது உசிதமாகாது.

### தவறு இல்லாத உண்மை வேண்டும்

காங்கிரஸானது, எல்லா காலத்திலும் சமஸ்தானப் பிரஜைகளுக்குப் போதிய அளவு கிரியாம்சத்தில் பயன்படத்தக்க அளவு உதவி செய்ய முடிந்ததில்லை யென்பது துரதிர்ஷ்டமான ஒரு உண்மையே.

காங்கிரஸானது தன் ஸ்தாபன பலத்தைச் சீர்பெற உறுதியானமுறையில் அமைத்துக்கொண்டு தன் ஆதரவுக்கும் கோரிக்கைக்கு மேற்ற சக்தியை வளர்த்து, விவேகமான தன்னடக்கத்துடன் நடந்துகொள்வதன் மூலம் நிஷ்பக்ஷபாதமான நீதி நிலைமையுடன் நடக்கும் ஸ்தாபனம் என்ற கியாதியைப் பெற வேண்டும். காங்கிரஸானது தன் பொறுப்புகளையும் கடமைகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றும் நிலையை அடைய வேண்டுமானால், அதன் ஊழியர்கள் தமது கட்சியை எடுத்துரைக்கும் வாக்குமூலங்களிலும், அறிக்கைகளிலும் இன்னும் சிறிது நிர்ணயமாகப் பழுதற்ற உண்மைச் செய்தியுடனும் இருக்க பழகிக்கொள்ளவேண்டும். இவ்வாறு நிர்ணயமான உண்மை செய்திகளுடன் தமது கட்சியை எடுத்துச் சொல்வது என்பது உறுதியாவதற்காக சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டின் நிரந்தரக் கமிட்டியார் தம்மிடம் வரும் செய்திகளின் உண்மையை நன்கு பரிசீலனை செய்ய வேண்டும். சாதாரண நீதிகூட மறுக்கப்படும் சமஸ்தானங்களில் நடந்த சம்பவங்களைப்பற்றி மறுக்கமுடியாத உண்மைச் செய்திகளைப் பிரசுரித்தால், பிறகு பரிகாரத்துக்கான காரியத்தில் பிரவேசிப்பதற்கு அது நல்ல அஸ்திவாரமாக அமையும்.

## என்னிடம் எதிர்பார்க்கத்தக்கது

எந்த முறையில் இப்பிரச்னை கவனிக்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடும் முறையிலேயே இதைச் சொல்லுகிறேன். சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டு நிரந்தரக் கமிட்டி தன் கொள்கையையும் அவ்வப்போது கிளம்பும் பிரச்னைகளை எவ்வாறு சமாளிப்பது என்ற வழியையும் நிர்ணயித்துக் கொள்ளும். இதை நான் எழுதுவதன் நோக்கம் ஒன்றே ஒன்றுதான்; அதாவது சமஸ்தானப் பிரஜைகளின் ஊழியர்கள் என்னிடம் வந்து நின்றால் நான் உடனே யோசனை கூறிவிட முடியும் என்று எதிர்பார்க்கலாகாதென்று எச்சரிக்கவே இதை எழுதுகிறேன். அவர்கள் சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டு நிரந்தரக் கமிட்டியை அணுகவேண்டும். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் பொறுப்பிலுள்ள பொதுப் பிரச்னைகளில் நான் சாதாரணமாக யோசனைகள் கூற முன்வருவதில்லையாயினும், எப்படி எப்போதும் அவர்கள் அணுகும்போது எனக்குத் தெரிந்ததைச் சொல்லத் தயாராயிருக்கிறேனே அதுபோலவேதான் நான் புதிய சமஸ்தானப் பிரச்னைகள் விஷயத்திலும் நடந்துகொள்வேன். இதற்கு முன்னர் நான் நேரில் சம்பந்தப்பட்டுள்ள சமஸ்தானங்கள் விஷயத்தில் முன்போலவே யோசனை சொல்லி வழி காட்டி வருவேன்; அதை நிறுத்திவிடப் போவதில்லை. சமஸ்தானங்களிலுள்ள பொதுஜன இயக்கங்களிலும் கிளர்ச்சிகளிலும் நேரடியாக என்னைப் பிணைத்துக்கொள்ளாமல், பொதுவாக சமஸ்தானப் பிரச்னை சம்பந்தமாக நான் என்னிடமுள்ள பிரத்தியேகத் தன்மை யெதையேனும் பயன்படுத்திச் செய்யக் கூடியதைச் செய்து வருவேன் என்பதை நான் சொல்லவேண்டியதே அவசியமில்லை.

## தீவிர இயக்கம் ஆரம்பிக்குமுன்

சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டின் நிரந்தரக் கமிட்டியின் அநுமதியைப் பெறாமல், எந்தத் தீவிரமான இயக்கத்திலும் இறங்கிவிடுதல் கூடாதென்று நான் சமஸ்தான ஊழியர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

### சாத்தியமானல் சண்டையைத் தவிர்ப்போம்

சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டின் நிரந்தரக் கமிட்டியின் மூலம் காங்கிரஸ் தன் காரியங்களைச் செய்து வந்து,—சாத்தியமாகுமானல்—சமஸ்தானங்களுடன் போராட்டம் ஏற்படாமல் தவிர்ப்பதும் காங்கிரஸின் கடமையாக இருக்கவேண்டும்.

### தபர்ரா கிளர்ச்சியை நிறுத்துங்கள்

"ஷியா ஸுனி சர்ச்சையைப் பற்றித் தற்காலிகமான அபிப்பிராயத்திற்கு வரப் போதுமான விவரங்கள் என்னிடமிருக்கின்றன. பண்டிட்ஜீயிடமிருந்து எனக்கு ஒரு பெரிய கடிதம் வந்திருக்கிறது. பாரபக்ஷமில்லாதது என்று எண்ணக் கூடிய தஸ்தாவேஜிகளும் வந்திருக்கின்றன.

மத்ஹே ஸஹாபா தேர்ந்தெடுக்கப்பட்ட கலீபாக்களைப் புகழ்வதற்காக இருக்கிறது. தபர்ரா முதல் மூன்று கலீபாக்களைத் தூஷிக்கிறது. பகிரங்கமாக மனிதர்களைப் புகழ்வதில் அர்த்தமுண்டு. இறந்த மனிதர்களைத் தூஷிப்பதற்கு உரிமை என்று ஒன்றிருக்கிறதா? குர் ஆனிலிருந்து தபர்ரா பாடுவதற்கு உரிமையை எடுத்துக் காட்டமுடியாது. ஏனெனில், முஹம்மது நபி இறந்த பின்னர்தான் கலீபாக்கள் வந்தார்கள். ஆகையால் தபர்ரா பாடுவதில் மதசம்பந்தமான கடமை என்ன இருக்கிறது என்பதை எனக்கு விளக்குங்கள்.

கலீபாக்களைப் புகழ்வதில் - அதுவும் இதனல் மனது புண் அடைவோர் முன்னிலையில் பொது ஸ்தலங்களில் புகழ்வதில் - மத சம்பந்தமான கடமை எதுவும் இல்லை என்று கூறினல், அதை ஒப்புக் கொள்கிறேன்.

ஆகையால், அமைதியின் பொருட்டுச் சட்டமறுப்பை வாபஸ் பெற்று விடுங்கள். தபர்ராவைப் பகிரங்கமாகப் பாடுவதை நிபந்தனையின்றி நிறுத்தி விடுங்கள்.

தங்கள் ஷியா சகோதரர்களின் உணர்ச்சிகளைப் புண்படுத்தாமல் நடக்கும் பொறுப்பை ஸுனிகளுக்கு விட்டுவிடுங்கள். நான் இந்தக்கடிதத்தைப் பிரசுரத்திற்காக எழுதவில்லை. என்னுடைய மனப்பூர்வமான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படித் தாங்கள்கேட்டீர்கள். என்னுடைய ஆலோசனைப்படி உங்கள் முடிவைத் தெரிவிக்க இது உதவிசெய்யும். நீங்கள் இஷ்டப்பட்டால் இதைப் பிரசுரிக்கலாம். இதன் பிரதியை வேறு ஒருவருக்கும் அனுப்பவில்லை. இது உங்களுக்கும் உங்களைப் பின்பற்றுபவர்களுக்காகவும், நீங்கள் யார் சார்பில் என்னிடம் வந்தீர்களோ அவர்களுக்காகவும் தான் எழுதப்பட்டது."

---

# ஆலயப் பிரவேசம்

## 'ஆலயப்பிரவேசத்தால் கடவுள் ஓடிவிடமாட்டார் வானம் இடிந்து விழாது'

ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார்

இந்தியாவைப் பரிகாசம்செய்யும் மேல்நாடுகளிலும் ஏதாவது ஒருவித தீண்டாமை இருந்து வருகிறது. ஆனல் இந்த உண்மையை அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. அவர்களைப் பற்றி இப்படிச் சொன்னல், அவர்க

ளுக்குக் கோபம்கூடவரும். இந்தியாவில் உயர்ந்த வகுப்பினரில் சிலர், ஹரிஜனங்கள் ஹிந்துக்களல்லவென்றுகூட சொல்லத் தயாரா யிருக்கின்றனர். இதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஹரிஜனங்கள் ஹிந்து வகுப்பில் ஒரு பகுதியினர் என்று ஹிந்துமதக்கோட்பாடுகள் ஆரம்பத்திலிருந்தே கூறி வருகின்றன.

இந்தியாவுக்கு வெளியில் வசிக்கிறவர்களும் ஹரிஜனங்களை ஹிந்து மதத்தின் ஒரு பகுதியினராகவே பாவிக்கிறார்கள். எனவே, ஹரிஜனங்கள் ஹிந்து மதத்திலிருந்தாலென்ன அல்லது வேறு எந்த மதத்திலாவது சேர்ந்தாலென்ன, நமக்கு அக்கரையில்லை என்று சொல்லும் ஜாதி ஹிந்துத் தலைவர்களும், ஹரிஜனத் தலைவர்களும் ஹிந்து மதத்திற்கோ அல்லது ஹரிஜனங்களுக்கோ சேவை புரிந்தவர்களாகமாட்டார்கள்.

இந்த நாட்டில் திராவிடர்கள், ஆரியர்கள், திராவிடர்களுக்குப் பின் கிளம்பிய ஜாதிகள் என்று மூன்று ஜாதீய கோஷ்டிகள் உண்டு என்ற விசித்திர தத்துவத்தால் நாட்டில் சொல்லொணாத் துயரமும், பிளவுகளும் ஏற்பட்டுள்ளன.

இந்தத் தத்துவத்திற்கு ஆதாரமே கிடையாது. ஆரியர்களென்று சொல்லப்படுகிறவர்கள் வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வரவில்லை. ஹிமாலயம் தான் வடகோடி எல்லையென்று வேதத்தில் இருக்கிறது. இந்தியாவில் ஆரியர் என்ற பெயர் எந்த ஜாதியையும் குறிப்பிட்டதல்ல, நாட்டின் ஒரு பகுதியையே குறிப்பிடுகிறது. ஹிமாலயத்திற்கும் விந்திய மலைக்கும் இடையேயுள்ள பிரதேசம் 'ஆர்யவர்தா' என்றும், விந்திய மலையிலிருந்து குமரிவரை உள்ள பிரதேசம் 'தக்ஷிணபதா' அல்லது 'திராவிடர்' என்றும் அழைக்கப்பட்டது. இதிலிருந்து திராவிடர்கள் வடக்கே செல்லவில்லையென்றும், ஆரியர்கள் தெற்கே வரவில்லையென்றும் அர்த்தம் செய்து கொள்ளக்கூடாது. திராவிடர்களுக்குப் பின்னால் வந்தவர்கள் திராவிடர்களைக் கொடூரமாக நடத்தினார்கள் என்று சொல்லப்படுவதற்கும் அத்தாட்சி கிடையாது. இலங்கையில் ஆட்சிபுரிந்ததாகக் கருதப்படும் ராவணன் வேத சாஸ்திரத்தில் கரை கண்டவன்; அவனுக்குச் சம்ஸ்கிருதத்தில் பாண்டித்ய முண்டென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது இந்நாட்டிலுள்ள அனைவரும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்களென்பதைத் தெளிவாக்குகிறது.

அசுத்தமான பழக்க வழக்கங்கள், அசுத்தமான வேலைகள் முதலிய வற்றாலும், பரம்பரை பரம்பரையாக இவை அனுஷ்டிக்கப்பட்டு வருவதாலும்—இதற்காக குறிப்பாக யார் மீதும் குறை கூறுவதற்கில்லை—இவர்கள் இப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் இவர்கள் "தொடப்படாதார்கள்" என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் இதற்கு முன் "பஞ்சமர்கள்" என்று, அதாவது ஐந்தாவது கோஷ்டியினர் என அழைக்கப்பட்டார்கள். இந்த வார்த்தையில் அவர்களைத் தொட்டால் அசுத்தமாய் விடுவோம் என்று தூஷணையான அர்த்தம் கொடுக்கக்கூடிய எதுவுமில்லை. எனவே அவர்களுடைய பழக்க வழக்கங்கள் வேலைகள் இவற்றில் மாறுதலேற்பட்டால் மேல் வகுப்பினருக்குச் சமமாகலாம்.

புத்த மதம், இஸ்லாம், கிறிஸ்தவமதம் இம்மூன்றின் 'படையெடுப்பை'யும் ஹிந்துமதம் சமாளித்திருக்கிறது. இந்த மதங்கள் வந்ததால் ஹிந்துக்கள் தீண்டாமை ஒழிப்பைத் துரிதப்படுத்தினார்கள். இந்தப் படையெடுப்பு வட இந்தியாவில்தான் கடுமையாக யிருந்ததால், இப்பொழுது

அங்கு தென் இந்தியாவைக் காட்டிலும் மேல் வகுப்புக்கும் கீழ் வகுப்புக்கும் வித்யாஸம் மிகக் குறைவா யிருக்கிறது.

நாட்டில் ஜனநாயக சக்திகள் வேலை செய்ய ஆரம்பித்து விட்டதால், ஜாதி ஹிந்துக்களும், ஹரிஜனங்களும் ஒன்றுகூடி வேலை செய்ய கற்றுக் கொண்டுவிட்டனர். ஹரிஜன வகுப்பிலிருந்தும் தலைவர்கள் தோன்றி பரிசுத்தமான வாழ்க்கையை எப்படி நடத்துவதென ஹரிஜனங்களுக்கு வழி காண்பித்திருக்கிறார்கள்.

## ஆலயப் பிரவேசம்

இப்பொழுது ஆலயப்பிரவேசம்தான் முக்கிய பிரச்னையாக இருக்கிறது. இதில் ஹிந்துக்களின் அபிப்பிராயம் ஒரேவிதமாக இல்லை. அகற்ற முடியாத அசுத்தம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. அசுத்தமான பழக்க வழக்கங்கள், அசுத்தமான வேலைகள், மத கோட்பாடுகளைப் பற்றி ஒன்றுமே தெரியாமலிருப்பது - இவைதான் ஒதுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம். எனவே, இந்தக் காரணத்தைப் போக்கிவிட்டால், தீண்டாமையையும்போக்கிவிடலாம் என பண்டித மதன்மோகன் மாளவ்யாவும்கருதுகிறார்.

என்னுடைய குறை இதுதான். ஒரு கோவிலின் டிரஸ்டியோ, அல்லது சர்க்காரின் டிரஸ்டியோ, கோவில் செல்லும் ஜனங்களின் அபிப்பிராயத்தை எப்படி அறிந்துகொள்வார் என்பதைப் பிரதமமந்திரி பொதுஜனங்களுக்கு எடுத்துக் கூறவில்லை. இது விஷயத்தில் சர்வஜன வோட் எடுப்பதில் தனக்கு ஆக்ஷேபனையில்லை யென்றுதான் கூறியுள்ளார்.

"நாம் இப்பொழுது இந்தியாவில் ஒரு புதிய கடவுளையும் வணங்குகிறோம். அவள்தான் பாரதத்தாய். இந்தத் தாயைப் பூஜிப்பதும் முக்கியமென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். மக்களை ஐக்யப்படுத்தும் அன்னை அவள்தான். அவளைப் பூஜிப்பதென்றால், நாம் சில கடமைகளையும் செய்தாகவேண்டும். பழைய கடவுள்களின் பெயரில் நாம் புதிய கடவுளை அகௌரவிக்கக் கூடாது."

ஹரிஜனங்களுக்கு மதக் கல்வி யளிக்கப்படாததை நான் ஆக்ஷேபிக்கிறேன். பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றி மாத்திரம் பேசிவிட்டால் போதாது. "அகற்றமுடியாத அசுத்தத்துடன் இல்லையென்று நான் கருதும் நபர்கள் [ஹரிஜனங்கள்] சுத்தமான உடம்பு, மனதுடன், நமது மதத்தின் அடிப்படையான தத்துவங்களைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்துகொண்டு, ஆலயத்திற்குள் பிரவேசித்தால் வானம் இடிந்து விழுமென்றோ, அல்லது கடவுள்கள் கோவில்களிலிருந்து ஓடிவிடுமென்றோ நான் நினைக்கவில்லை."

# ஹரிஜனங்களைத் தடுப்பது வேதங்களுக்கே விரோதம்

ஸ்ரீ. ராஜாஜி

இவ்வித சீர்திருத்தம் நடந்திருக்கையிலும், அதில் ஹிந்து அறிஞர்கள் சம்பந்தப்பட்டிருக்கையிலும் சர்க்காரின் கடமை என்ன? அச்சீர்திருத்தம் ஏற்படுத்தியவர்களைத் தண்டிப்பதா? இச் சீர்திருத்தம் மூலம் நீண்ட கால குறையே நிவர்த்திக்கப்பட்டது.

காங்கிரஸ்வாதிகளாகிய நாங்கள் பெருவாரியான மெஜாரிட்டியிலிருக்கிறோம். யாருடைய தயவாலும் இங்கு வரவில்லை. தியாகம், கடும் பிரயாசை இவைகளாலும், ஜனங்களுடன் ஐக்கியப்பட்டதாலும் நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். எங்கள் செயலை ஜனங்கள் அங்கீகரிப்பதாலேயே நாங்கள் மெஜாரிட்டியாக விருக்கிறோம். அவ்வித பெரும்பான்மை கட்சி ஆதரிக்கும் சட்டத்தை எதிர்க்கட்சியும் ஆதரித்தே தீரவேண்டும்.

ஹரிஜனங்களும் ஜாதி ஹிந்துக்களைப் போல் மதவுணர்ச்சி உடையவர்கள். அவர்கள் தாங்களும் ஆலயங்களில் அனுமதிக்கப்பட்டு, ஈச்வர தரிசனம் செய்ய முடிகிறதென்ற மன ஆறுதல் பெறுவார்கள்.

இது தர்க்கப் பிரச்னையுமல்ல. டிரஸ்டி, சொத்து பிரச்னையுமல்ல. மனித வுணர்ச்சிப் பிரச்னையே ஆகும். ஆலயப் பிரவேசத்திற்கு விரோதமாக ஹிந்து தர்மத்தில் எதுவுமில்லை யென்பதை ஒரு நாள் சனாதனிகள் உணர்ந்தே தீருவார்களென்று நம்புகிறேன்.

ஆலயப் பிரவேசம் ஸ்தல வாசிகளின் விருப்பத்திற்கு விடப்படவேண்டுமென்றும் அதுவே ஜனநாயகமுறை யென்றும் கூறப்பட்டது. ஸ்தல வாசிகளின் விருப்பத்திற்கு விடாமல் மதுவிலக்குச் சட்டம் நிறைவேற்றப்பட்டது; இது ஜனநாயக முறையல்லவா? இவ்விதமே ஆலயப் பிரவேச பாதுகாப்புச்சட்டமும் நிறைவேற்றப்படுகிறது. ஸ்தல வாசிகளின் விருப்பத்திற்கு விட்டால் சில கஷ்டங்கள் ஏற்படும். அக் கஷ்டங்களைத் தவிர்க்க நான் விரும்புகிறேன்.

## ஹிந்து சமூகத்தின் வாக்குறுதி

தீண்டாமை விலக்கும், ஆலயப்பிரவேசமும் காங்கிரஸின் லட்சியமாகும். 1932-ம் வருஷத்தில் ஹிந்து சமூகம் முழுவதும் ஒரு வாக்குறுதி அளித்தது. அந்த வாக்குறுதியான பூனா ஒப்பந்தம் அரசியல் அமைப்பு சட்டத்தின் ஒரு பாகமாகும். இந்த வாக்குறுதி காங்கிரஸைக் கட்டுப்படுத்துவதாகும்.

டிரஸ்டி இஷ்டப்பட்டால் ஆலயங்களில் ஹரிஜனங்களை அநுமதிக்கலாமென்பதே பம்பாய் ஆலயப்பிரவேச சட்டமாகும். சென்னையில் வேலை கஷ்டமாகும். ஆனால், காங்கிரஸ் கட்சி எந்த வாக்குறுதியின் பேரில் அதிகாரத்துக்கு வந்ததோ, அந்த வாக்குறுதியில் இந்தச் சீர்திருத்தம் சேர்ந்ததாகும்.

## தலைவர்களுக்கு வேண்டுகோள்

ஹிந்து மதத்தின் உண்மையான சித்தாந்தங்கள் கோவில் அர்ச்சகர்களுக்காக எழுதப்பட்ட புத்தகங்களில்லை. வேதங்களிலும் உபநிஷதங்களிலுமே அச்சித்தாந்தங்கள் இருக்கின்றன. ஹரிஜனங்களை ஒதுக்கிவைப்பது வேதங்களுக்கு விரோதமாகும்.

'கடவுளின் சம்மதத்தாலோ மன்னனின் செய்கையாலோ அல்லது ஜன சமுதாயத்தின் செய்கையாலோ எதாகிலும் ஒன்று நிகழ்ந்தால், அதனை ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதுவே சனாதன தர்மத்தின் மூலாதாரக் கொள்கை. இம்மசோதாவை எனது நண்பர்கள், ஆதரித்தால், ஹிந்துமத தர்மத்தின் அந்நோக்கம் இவ்விஷயத்திலும் அனுசரிக்கப்படுவதாகும்.

"மை டியர் கோபி!

எதிர்பாராத சந்தோஷத்தை யொருவர் அடைந்தால் அதன் மகிழ்ச்சியின் வேகத்தினுல் எழுதுவதற்கோ, பேசுவதற்கோ முடியாது திகைத்து விடுவது சகஜமல்லவா! அந்த நிலையில் நான் இப்போதிருக்கிறேன். காலேஜை விட்ட பிறகு நாம் அன்னியராக விருந்த சமயம் உங்கள் கடிதம் எனக்குப் பெரிதும் சந்தோஷத்தை யளித்தது.

தாங்கள் இந்த அல்பகாரியத்திற்காக இத்தனை பிரமாதமாக எழுதியிருப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. நான் என்னுலாகிய எந்த உதவியையும் செய்ய எக்காலத்திலும் கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் கடிதம் பார்த்த க்ஷணமே ஸ்ரீமதி வஸுந்தராதேவிக்கு எழுதி விட்டேன். நீங்கள் தாராளமாய் உங்கள் தங்கையை அழைத்துக் கொண்டுபோய் அந்த ஆச்ரமத்தில் சேர்க்கலாம். குழந்தைகளுக்கு வெகு ஒழுங்கான முறையில் பயிற்சியும், படிப்பும் கொடுக்கும் ஆச்ரமங்களில் இது முதன்மை ஸ்தானம் பெற்றதாகும். ஆகையால் கவலையே வேண்டாம்.

கோபி! முடியுமானுல்—மன மிருந்தால்—போகும் போதாவது, வரும்போதாவது இந்த ஏழையின் குடிசைக்கு வந்துவிட்டுப் போனுல் மிக மிக பாக்யம் செய்தவளாவேன். நான் இப்போது மீனலோசனி ஹைஸ்கூலில் உபாத்தியாயினியா யிருக்கிறேன் என்பது தங்களுக்குத் தெரிந்திருக்கலாம். பட்டம் B. A., L. T. யேயன்றிச் சம்பளம் 55 ரூபாய்தான். உங்கள் வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்:
தங்கள் அன்புள்ள,
ஸௌம்யா பாய்."

இந்தக் கடிதத்தைப் படித்ததும் கோபியின் இதயம் ஆனந்தத்தால் பூரித்தது. கடிதத்தை மறுபடியும் இருமுறைகள் படித்தான்.

ஸௌம்யாபாயின் அழைப்பின்படி அவள் வீட்டுக்குப் போவதா வேண்டாமா? என்கிற ப்ரச்னை அவன் மனத்திற்குள் பலமாக எழுந்தது. அதற்கு அவன் மனமே தீர்ப்பளிக்கத் தயங்கிப் பெரிய போராட்டத்தில் சிக்கி அலைந்தது.

"அவளைக் காலேஜில் பார்த்தது தவிர, ஒரு தினங்கூட வீட்டிற்குப் போனது கிடையாது. நம்மைப்பற்றி அவள் ஒன்றும் தெரிந்துகொள்ளாது சாதாரணமாயிருக்கும் தருணம் நமது தங்கையின் ஊழலும், வெட்கக்கேடும் தெரியவருமாயின் நம்முடைய மானம் போய் விடுமல்லவா! அம்மாதிரி தலைகுனிவதை விடப் போகாதிருத்தலே மேலானது" என்று தனக்குள் எண்ணினான்.

எது எப்படி இருப்பினும் முதலில் சூட்டோடு சூடாக ஆச்ரமத்தில் குழந்தைகளைச் சேர்த்துவிட்டு மறுகாரியம் பார்க்க வேண்டுமென்ற முடிவுடன் தங்கைகளுக்கான உடைகளை ஒரு பெட்டியில் வைத்தான். இருவருக்கும் இரு படுக்கைகள் கட்டினான். "குழந்தைகளா! என்னுடன் வாருங்கள். உங்களை நல்ல உயர்ந்த பள்ளிக்கூடத்தில் கொண்டு சேர்க்கிறேன். அங்கு வெகு உயர்வான முறையில் பாட்டு, படிப்பு, (இங்கிலீஷ், ஹிந்தி, தமிழ், தெலுங்கு) பூ வேலைகள் முதலிய எல்லாம் சொல்லிக் கொடுப்பார்கள். இங்கு ஒன்றுமே இல்லை. இது வெறும் ஓட்டைப்பள்ளிக்கூடம். அங்கு உங்களைப்போல் இன்னும் எத்தனையோ பெண்கள் படிக்கிறார்கள். ஆகையால், வாருங்கள்" என்று அழைத்தான். குழந்தைகளுக்கு ஒன்றும்புரியவில்லை; ஆதலால் ஒன்றும் பேசாமல் ரயிலில் ஊருக்குப் போகவேண்டுமென்கிற ஆசையில் கிளம்பினார்கள். ஆனால், "அம்மாவும் அக்காவும் அங்கு வருவார்களா?" என்றுமட்டும் கேட்டார்கள்.

குழந்தைகளின் சமாதானத்திற்காக 'வருவார்கள்' என்று கூறிவிட்டான். உடனே பிரயாணசித்தமாகி ரயிலுக்கு வந்து சேர்ந்தான். சிறிய ஸ்டேஷனாகையால் அதிக ஜனக்கூட்டமில்லை. வண்டி வந்தவுடன் தங்கைகளை ஏற்றிவிட்டுத் தானும் ஏறினான்.

இவன் ஏறிய வண்டிக்கு 7, 8 வண்டிக்கு அப்பால் ஒரு வண்டியிலிருந்து இறங்கிய மரகதம், தன் போக்காக வருகையில்

கோபி, தன்குழந்தைகளையும் வண்டியிலேற்றித் தானும் ஏறியதைப் பார்த்ததும் அவளைத் தூக்கிவாரிப்போட்டது. "ஐயோ! குழந்தைகளுடன் கோபி எங்கே போகிறான்?" என்று திடுக்கிட்டுத் திகைத்தபடியே, "கோபீ!" என்று கூவிக்கொண்டே ஓடிவந்தாள். இதற்குள் வண்டியும் ஊதிக்கொண்டு கிளம்பிவிட்டது. மரகதத்தின் குரலும் அந்த ரயிலின் கூச்சலுடனும் காற்றுடனும் கலந்தது.

வண்டி மரகதத்தைத் தாண்டிச்சென்ற சமயம் இரு குழந்தைகளும் ஏக காலத்தில் தாயாரைப் பார்த்ததும், "ஆ! அதோ! அம்மா! அதோ! அம்மா! அண்ணா பாரு!" என்று கத்தியவாறு ஜன்னல்பக்கம் தலையை நீட்டினார்கள். கோபியும் அப்போதே தாயைப் பார்த்தான். எனினும் அவன் திரும்பியும் பார்க்கவில்லை. அவர்களையும் உள்ளுக்கு இழுத்துவிட்டு அமர்த்தினான். வேகமாக வண்டியும் பறந்தது.

**வீண் விளம்பரமல்ல......**

**வத்ஸகுமார்**

ஆனால், நீங்கள் தினசரி வாழ்க்கையில் காணும் அநுபவம், முடிவு வரை ஊகிக்க முடியாத ஆச்சரியம், அடக்க இயலாத சிரிப்பு மிகுந்த சிறந்த சமூகக் கதை.

அணா 8. சந்தாநேயர்களுக்கு அணா 6

**ஒரு ரூபாய்க்கு 3 நாவல்கள்**

உளுத்த இதயம்
மகிழ்ச்சி உதயம்
வத்ஸகுமார்

தனி விலை ரூ. 1-6-0.
முன்பண மனுப்பினால்
தபாற் செலவு இனாம்.

## 20

சிறைக்குக்கொண்டு போகும் கைதியைப்போல் லீலாவைக் காரில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார்கள். அறிவும், விவேக மும் நன்ருகத் தெரிந்த லீலா இந்த அவிவேகிகள் செய்யும் அக் கிரமக் காரியத்திற்கு எப்படித்தான் கட்டுப்படமுடியும்? அல்லது சிறிய குழந்தையைப்போல் கையையும் காலையும் திமிறிக்கொண்டு ஓடத்தான் முடியுமா!

பணத்தையும் பொருளையும் கண்டு உச்சி குளிர்ந்துபோய் தன்னையே மறந்து கொம்மாளமடித்துக் கூத்தாடும் சுந்தரியின் முகத்தையும், அவள் சகபாடிகளின்முகத்தையும் பார்க்கவே பிடிக் காது கசந்து வெறுத்து ஒரு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு விதியே என்று உட்கார்ந்தாள்.

வண்டியின் இறைச்சலுக்கும், ஹாரனின் கூக்குரலுக்கும் மேல் வண்டியிலிருப்பவர்களின் கும்மாள ஆரவாரத்துடன் கார், சிறிது நேரத்தில் வீட்டுவாசலில் வந்து நின்றது. எல்லோரும் வரிசைத்தட்டுகளுடன் உள்ளே சென்ருர்கள். அவர்களுக்கு எத்தனை சந்தோஷம் இருக்கிறதோ, அதற்கு நேர்மாருக லீலாவின் வயிற்றில் சங்கடம் செய்து அவளைக் கொன்று தின்கிறது.

ஒருத்தி தட்டிலுள்ள நகைகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு ஓடிவந்து லீலாவுக்கு அதைப்போட்டு அழகு பார்க்க வெண்ணிப் போட ஆரம்பித்தாள். லீலா அதை விஷம்போல் வெறுத்து அந்தப் பெண்ணிடமிருந்து அதைப் பிடுங்கி வீசி எறிந்துவிட்டுச் சடக் கென்று தன் அறையில் போய்க் கதவைத் தாளிட்டுக்கொண்டாள்.

அந்தச் செய்கை முதலில் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்ததே யன்றி, அடுத்த நிமிஷம் எல்லோரும் சேர்ந்து கடகட வென்று பெரிதாக நகைத்தார்கள். ரத்தினசாமி முதலியோரும் வந்து சேர்ந்துகொண்டார்கள். "ஏதோ, கல்யாணப் பெண்ணுக்கு வெட்கம். அதனுல்தான் உள்ளே இருக்கிருள்" என்ருர்கள் சிலர்.

"ஆமாம். இன்று சற்று வருத்தமாகத்தான் தோன்றும். நாளைக்குச்சரியாகப் போய்விடும். இதைவிடப் பெரிய இடம் கஷ

விலும் காணமுடியாது" என்று சிலர் சமாதானங் கூறினர்கள். எல்லாம் லீலாவின் காதில் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது. அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. "இச் சமயம் பாட்டி இங்கில்லாதது என் துரதிருஷ்டந்தானே!" என்று கண்ணீர்விட்டுக் கலங்குகிருள். அவளை ஆற்றுவாருமில்லை; தேற்றுவாருமில்லை.

வெளியில் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் லீலாவின் துக்கத்தைக் கிளறிவிட்டு, குத்துவதுபோல் இருக்கிறது. விம்மி விம்மி தத்தளிக்கிருள். வெளியே உள்ளவர்கள் "சுந்தரீ! இனி நீ முன் போல ஏமாருதே! லீலாவைத் தனியே எங்கும் அனுப்பாதே! பள்ளிக்கூடமும் வேண்டாம்! பாதாளியும் வேண்டாம். நிறுத்தி விடு. அவள் வீட்டிலேயே பெரிய வாத்தியாரை வைத்துக் கொண்டு படிக்கலாம். வெளியே அனுப்பினல் வீணுக விபரீதந் தான் நேரும். யாருடைய கலகத்தினலாவது எங்கேனும் ஓடினலும் ஓடிவிடுவாள். எடுத்த காரியம் ஜெயம்பெருது போய்விடும். ஜாக்ரதை. ஆயிரம் ஜென்மம் எடுத்துத் தலைகீழாகத் தவம் செய்தாலும் இந்தமாதிரியான அதிர்ஷ்ட தேவதை உன்னை நாடிவர மட்டாள். பத்திரம்" என்று உஷார்ப்படுத்தி எச்சரித்தார்கள்.

இந்த வார்த்தைகள் லீலாவைக் கதிகலங்கச் செய்துவிட்டன. தன்னை இங்கிமிடம் முதல் சிறைவாச தண்டனையைப்போல்தான் நடத்தப்போகிருர்கள் என்பதில் இனிமேல் சந்தேகமில்லை என்றதை நினைக்கும்போது அவள் தேகமே பதறியது. கல்யாணமென்ற பேச்சை எடுக்கும்போதே சிறுமிகளின் உள்ளத்தில் சந்தோஷ அலை பொங்கி வருவது போக, லீலாவின் நெஞ்சிலோ நெருப்பே எரிவதுபோலாகிவிட்டது.

இரவுமுற்றும் இமைகொட்டமுடியாது கண்கள் ஆணி அறைந்ததுபோலாகிவிட்டன. ஊண் உறக்கம் அற்று துயரப் பதுமை போல் கிடந்து பல எண்ணங்களில் குழம்பிப்போய்த் தவித்தது ஒன்றுதான் எஞ்சியதேயன்றி, இந்த விபத்தினின்றும் தப்ப மார்க்கமென்னவோ ஒன்றும் கிடைக்காமலேயே உதயமும் ஆகிவிட்டது.

என்றுமில்லாது இன்று வீட்டில் இரண்டு மூன்று நாய்களின் குரைப்புக் கேட்டு ஆச்சரியத்துடன் பார்த்தாள். வீதியிலும், புறக்கடையிலும் நல்ல கொழுத்த ஜாதி வேட்டைநாய்கள் இரண்டு கன்றுக்குட்டி உயரத்திலுள்ளதாய்க் கட்டப்பட்டிருந்தன. அவைகளுக்கு இது புதிய இடமாதலால், சதா குரைத்துக்கொண்டிருந்தன. ஒருவரையும் வீட்டுவழி விடாதபடிக்குத் தடுக்க இம்மாதிரி வழி செய்திருப்பதை யறிந்துகொண்டாள்.

வழக்கம்போல் பள்ளிக்கூடம் செல்வதற்கும் வேண்டாமென்று தடுத்துவிட்டதால், லீலா எத்தனை சொல்லியும் ப்ரயோஜனமற்று உண்மை சிறைவாஸம் ஆரம்பமாகிவிட்டது. வீட்டிற்கு வரும் மனிதர்களும் இவளுக்குப் பிடிப்பதில்லை. இவளும் வெளியே போக முடியவில்லை. இந்நிலைமையில் தனியாய்க்கிடந்து புலம்பிப் புலம்பி நாட்களும் ஓடிக்கொண்டே இருக்கின்றன.

பாட்டியைப்பற்றிய தகவலும் தெரியவில்லை. கோயிலில் சந்திப்பதாகச் சொல்லிய குருட்டுப் பிச்சைக்காரனையும் போய்ப் பார்க்கமுடியவில்லை. தான் கோயிலுக்குச் செல்வதாய்ச் சொன்னால் நாஸ்திகபுத்தியையுடைய அவர்களும்கூட வருவதாய்க் கூறிக் கிளம்புவதானது லீலாவுக்கு அடியோடு பிடிக்கவில்லை. இந்நிலைமையில் அவள் யோசித்து யோசித்து மூளையே கலங்கிவிட்டது போலாயிற்று.

அந்தப் பிச்சைக்காரனை எப்படியாவது பார்த்துவிட்டு வர வேண்டுமென்ற ஆவல் தடுக்கமுடியாது அவள் மனத்தில் தோன்றி வதைத்ததால், எப்படியாவது தந்திரமாகப் போய்விட்டுவரத் தீர்மானித்துக் கொண்டாள்.

வெள்ளிக்கிழமையன்று தான் கட்டாயம் கோயிலுக்குப் போய்வர வேண்டுமென்று பகிரங்கமாகவே கிளம்பினாள். தனியே விடமாட்டேனென்று சொல்வதற்குப் பதில் எல்லோரும் கிளம்பிவிட்டார்கள். லீலா மறுபேச்சே எடுக்காமல் கூடக் கிளம்பி கோயிலுக்கு வந்து சேர்ந்தாள். பிச்சைக்காரன் கோபுரவாசலில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துப் பரிதாபத்துடன் உள்ளே சென்றாள்.

அன்று ஏதோ பெரிய உத்ஸவம். ஸ்வாமி புறப்பாடு நடக்க ஏக தடபுடல் பட்டுக்கொண்டிருந்தது. இவர்கள் உள்ளே செல்

வதற்குள் ஸ்வாமி புறப்பட்டுக் கோபுரவாசலுக்கு வந்துவிட்டார். கூட்டம் மென்னியை இறுக்குகிறது. கும்பலோடு கும்பலாய் இவர்களும் ஸ்வாமி எதிரில் சென்றுர்கள்.

கூட்டத்தில் யார்-யார் என்னென்ன புதுமாதிரியான நகைகள் போட்டிருக்கிருர்கள். என்ன புதுதினுசு புடவை கட்டியிருக்கிருர்கள் என்று ஆராய்ச்சி செய்வதற்கென்றே சில பக்தகோடிகள் கோயிலுக்குப்போகும் வழக்கமுண்டு. உண்மையில் அவர்கள் ஸ்வாமி தரிசனம் செய்தார்களா! ஸ்வாமிக்கு என்ன திருக்கோலம் சமர்ப்பித்திருந்தது, என்னென்ன ஆடையாபரணம் சாத்தியிருந்தது என்ருல் மேற்படியாருக்கு ஒன்றுமே தெரியாது. அந்த அக்கரையுடன் சென்ருலல்லவோ அது தெரியும்.

அதேபோல் சுந்தரியும், அவளது சகாக்களும் லீலாவுக்குப் புதுமாதிரியான நகைகள் செய்வதற்காக நகை யாராய்ச்சி செய்யத் தொடங்கிவிட்டார்கள். 'இது எத்தனை சவரன்? எத்தனை ரூபாய் கூலி? எத்தனை கேரட்டு கமலம்? எந்தத் தட்டான் செய்தான்?' என்பது போன்ற சமாசாரங்களை விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

லீலா இதுதான் சமயமென்று மெல்ல நழுவி விட்டாள். கும்பலுக்குள் புகுந்தடித்துக்கொண்டு குருட்டுப் பிச்சைக்காரனிருக்குமிடத்திற்கு ஓட்டமாக வந்து அவன் பிரமிக்கும்வண்ணம் "தாதா! தாதா!" என்று கூப்பிட்டாள்.

பிச்சைக்காரன் மகிழ்ச்சியால் மெய்ம்மறந்துபோய், "ஹா! குழந்தையா! அன்னமிட்டு ஆதரித்துப் பசி தீர்த்தப் புனிதவதியா! வாம்மா! வா! வா!" என்று மனங்குழைந்து கூறியபடியே தன் கையை நீட்டி லீலாவின் கரங்களைப் பிடிக்கத் துளாவினுன். குருடன் முகத்தில் ஓர் தனித்த மலர்ச்சியும், கண்களில் சோபையும் ஆவலும் கூடித் தாண்டவமாடிற்று.

இதைக்கண்ட லீலா கிழவனின் கரங்களைப் பிடித்துக்கொண்டு "தாதா! சவுக்யமாயிருக்கிருயா! இந்தா! இவைகளைச் சாப்பிடு" என்று தான் கொண்டுவந்திருந்த பழங்களை அப்படியே ஸ்வாமிக்குத் தானே நைவேத்தியம் செய்துவிட்டு உரித்துக் கிழவனிடம்

18036.

கொடுத்தாள். கிழவனும் ஆவலாய் அதை வாங்கிப் புசித்தபடியே "குழந்தாய்! சென்ற வாரமே வருவாய் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தேன். அன்று உன் பிதா உன்னை ஒன்றும் திட்டாமல் இருந்தாரா! என்னால் உனக்குத் துன்பமொன்றும் இராதிருந்ததா?" என்று வெகு ப்ரீதியுடன் கேட்டான்.

லீலா :—தாதா! உன்னால் ஒருவிதமான ஆபத்தும் நேரவில்லை. ஆனால், என் தலைவிதியால் பேராபத்துக்கள் என்னை ஒரு வினாடியில் சுற்றிக்கொண்டுவிட்டன. அதை......

பிச்சை :—(பதறியவாறு) ஆ! என்ன! பேராபத்தா! குழந்தாய்! அதென்ன ஆபத்து சொல்லு...சொல்லு.

லீலா :—தாதா! அந்த விஷயம் சிலருக்கு மிகவும் விபரீத ஆபத்தாகத் தோன்றலாம். சிலருக்கு எல்லையில்லாத சந்தோஷமாகத் தோன்றலாம். இச்சமயம் என் பாட்டி இங்கிருந்தால், என்னை எப்படியாவது காப்பாற்றுவாள். அவளையும் எங்கேயோ துரத்திவிட்டார்களே! நான் என்ன செய்வேன்?

கிழவன் :—அம்மா! உன் பாட்டி யாரு? எங்கே போயிருக்கிறாள்? உனக்குள்ள ஆபத்துதான் என்ன? என் மனம் பதைக்கின்றதே!

லீலா :—தாதா! அந்த விஷயத்தைத் தெரிவிக்கத்தான் வந்தேன். என் பாட்டி யார் தெரியுமா? நீ இத்தனை அருமையாக அன்புசெலுத்திப் பேசுகின்ற நான் யார் தெரியுமா? தாதா! சொல்லவும் நாத்தடுமாறுகின்றது. உங்கள் கண்ணைக் குருடாக்கி, உங்கள் குடும்பத்தையும் சிதற வடித்து, உங்கள் வாழ்நாளைப் பாழ்படுத்தி, உங்களைப் பிச்சைக்காரனாய்த் தெருவில் அலையும்படி எந்த மகானுபாவன் செய்தானோ, அந்த மகானுபாவனின் தாயார்தான் என் பாட்டி. அந்தப் பயங்கர மனிதனின் மகள்தான் இந்த மகாபாவி. இனி, என்னைக் காணவும் உம் மனம் வெறுக்குமல்லவா? என்னைப் பார்க்கவும் பிடிக்காதல்லவா?...

என்று லீலா கூறி முடிக்குமுன், "ஹா! என்ன! என்ன! ரத்தினத்தின் மகளா! லீலாவதியா நீ...தங்கம்மாளின் பேத்தியா நீ! என்ன ஆச்சரியம்! அம்மா குழந்தாய்! லீலா! லீலா! உன்னையா

நான் வெறுப்பேன்? உன்னையா நான் பார்க்க விரும்பமாட்டேன். என்விதி என்னை யடித்தது அம்மா! உன் அமிருத மயமான இதயத்தின் பரிசுத்தத்தை யறிந்தபிறகு உன்னை எந்த மனிதர்தான் வெறுப்பார்கள்? லீலா! இந்த விஷயத்தை அன்றே ஏன் சொல்ல வில்லை? நான் கண்ணிருந்தும் கெட்டலைந்து பாழாகியதற்கு இது தக்க தண்டனை என்று கடவுள் கொடுத்தாரேயன்றி, அதற்கு நீ என்ன செய்வாய்? உனக்கு யாரால் என்ன ஆபத்து? ரத்தினம் சௌக்யமாய் இருக்கிறனா?" என்று கேட்டான்.

லீலா பிச்சைக்காரனின் சாந்த குணத்தைக் கண்டு உள்ளம் பூரித்தவளாய், "தாதா! நீ எவ்வளவு நல்ல மனுஷ்யன் தெரியுமா? என்னுடைய விஷயம் தெரிந்தவுடனே என்னை அடித்துத் துரத்தி, உனக்குள்ள ஆத்திரத்தை என்மீது பழி தீர்த்துகொள்வாயென்று நான் நினைத்ததற்குமாருக நீ எத்தனை அன்பாய்ப்பேசுகிருய். தாதா! உன் குணத்திற்குமுன்பு என் குணத்தை ஒரு பெரிதாகச் சொல்லு கிருயே. எந்த மனிதனல் உன் வாழ்வு ஒருவிதமாகப் பாழாகியதோ அதே மனிதனல் என் வாழ்வும் ஒருவிதமாகப் பாழாவதற்கு வேண்டிய வழி செய்தாகிவிட்டது. முன்பு, உன் கண்ணை யவித்த முரட்டுத்தனத்தைவிட இப்போது அது அதிகமாகி இருக்கின்றதே யன்றி, ஒரு கடுகளவும் குறையவில்லை. பெத்த தாயை வீட்டை விட்டு அடித்துத் துரத்திவிட்டார். பணத்திற்காக ஆசைப்பட்டுக் கொண்டு ஒரு பயித்தியத்திற்கு என்னைக் கல்யாணம் செய்து கொடுக்க சகலவித ஏற்பாடுகளும் செய்து முடிந்துவிட்டன.

"தாதா! எந்த ஒரு துராத்மாவினல் உன் கண்ணும் குடும்பமும் பாழாகிவிட்டதோ அதே துராத்மாவின் மகளுக்கு உன்னல் ஒரு உதவி வேண்டியிருக்கிறது"...என்று கூறிமுடிக்குமுன், பிச்சைக் காரன் லீலாவின் கரங்களைப் பிடித்துக்கொண்டு, "ஹா! குழந் தாய்! லீலா! உனக்கா! என்னல் உதவியா? என்னலா? இந்தக் குருடனலா? உண்மையிலா?" என்று வியப்புடன் கேட்டான்.

லீலா :—தாதா! உண்மையில் உனது மனப்பூர்வமான உதவி எனக்கு வேண்டும். உன் வெளிப்பார்வை குருடேயன்றி உன் உள் பார்வையும், இதயமுங்கூடக் குருடா? இல்லையே! நான் என்

பாட்டியை எப்படியாவது தேடிப் பிடிக்கவேண்டும். என்னைச் சிறையில் அடைத்திருப்பதுபோல் தற்சமயம் என்னை வைத்திருக்கிறார்கள். நான் ஒரு கடிதம் போடுவதற்குக்கூட முடியாத நிலைமையில் இப்போது இருக்கிறேன். என் பெரியப்பனுக்கு நான் போட்ட கடிதத்தை அந்தப் பிசினாரி திருப்பியனுப்பிவிட்டான். ஆகையால், உன்னோடுகூட விருக்கும் இந்தம்மாளின் உதவியால் நீ சிற்றேரிக்குச் சென்று என் பெரியப்பன் வீட்டில் என் பாட்டி இருக்கிறாளா என்பதை அறிந்து நான் கொடுக்கும் கடிதத்தை அந்தம்மாளிடம் சேர்ப்பித்து விடவேண்டும்.

அங்கு இல்லையென்றால் என் அத்தை வீட்டிலிருப்பாள். அங்கு எனக்காகச் சென்று கொடுத்துவிட்டால் போதும். இந்த உதவி செய்யமுடியுமா? தாதா! உன்னைத்தான் நம்பி வந்திருக்கிறேன். என் ஜனங்கள் என்னோடு இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களை ஏமாற்றிவிட்டு, உன்னைப் பார்க்க வந்தேன்—என்று தன் மனத்திலுள்ள ஆவலை முற்றும் திறந்து காட்டுபவள்போல் கூறினாள்.

இதைக் கேட்டதும் கிழவனின் மனம் இளகி உருகியது. "உன்னையாம்மா பயித்தியத்திற்கு விவாகஞ்செய்விக்கத் துணிந்தார்கள்? லீலா! உன்னை நான் இப்பொழும் கண்ணால் இப்போது பார்க்க வில்லையெனினும் நீ ஆதியில் குழந்தையாக விருந்த எழில் நிறைந்தபிம்பம் என் கண்முன் அப்படியே நிற்கிறது. அக் காலை உன்னை நானும் என் மனைவியும் மருமகளாகவே வரப்போகிறாய் என்று எண்ணியிருந்தோ மல்லவா? இப்போது உன்னை என் பேத்தியாக எண்ணி, உனக்காக நான் என் உயிரையும் கொடுக்கச் சித்தமாய் இருக்கிறேன். நான் நாளைக் காலையே பிச்சை எடுக்க ஊர் ஊராய் அலைவதுபோல் அங்கு சென்று பார்த்துக்கொண்டு வருகிறேன். பயப்படாதே" என்று தேறுதல் கூறினான்.

லீலா, தான் ஏற்கெனவே தயாராய் வைத்திருந்த கவரை அவனிடம் கொடுத்தாள். அதை அவன் வாங்கி மடியில் வைத்துக் கொண்டான். பிறகு அவள் 10 ரூபாய்கள் அப்படியே ரூபாயாய் அவனிடம் கொடுத்தாள். அதை வேண்டாமென்று, பிச்சைக்காரன் சொல்லியும் கேளாமல் லீலா தானே அவனுடைய கந்தைத் துணியில் இருக்கும் பையில் போட்டுக் கட்டிவிட்டாள்.

எங்கே தன்னைத் தன் மனிதர்கள் பார்த்துவிடுவார்களோ என்கிற பயம் ஒருபுறம் திக்கு திக்கு என்று அடித்துக் கொள்கிறது. திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே மேற்குறித்த யாவும் பேசி முடித்துக்கொண்டு, “ தாதா ! அந்த எம கிங்கிரர்கள் என்னைத் தேடிக்கொண்டு வந்துவிடுவார்கள். ஆகையால், நான் போய் வருகிறேன். நீ போய்வந்த பிறகு என்னை எப்படிச் சந்திக்க வேண்டும் தெரியுமா ? இதே இடத்தில் நீ இரு. நான் தினம் இங்கு ஸ்வாமி பிரதக்ஷணத்திற்கு வருவேன். உன்னைப் பார்க்கிறேன். என்ன ! நான் வரட்டுமா ! உன்னை யாரும் அங்கு அடையாளம் கண்டுகொள்ளமாட்டார்களே ?” என்றாள்.

கிழவன் :—உம். அடையாளமாவது கண்டுகொள்வதாவது ? என் வேஷமே புனர்ஜென்மத்தைக் கொடுத்துவிட்டதே ! நான் கூடவிருக்கும் அம்மாளால் எப்படியும் ஜாக்கிரதையாய்ச் செய்து கொண்டுவருகிறேன். நீ மட்டும் கவலைப்படாமல் கடவுளை வேண்டி நம்பி இரு. உனக்கு ஒரு குறைவும் இல்லை” என்று தேறுதல் கூறினான்.

லீலாவும் சட்புட்டென்று தன் காரியத்தை முடித்துக் கொண்டு, கிழவனிடம் விடைபெற்றுக்கொண்டு எழுந்து நடக்க நிமிர்ந்தாள். சற்று தூரத்தில் தன் தாயாரும் அவளுடைய சினேகிதைகளும், “ லீலா ! லீலா !” என்று கூவியபடியே வருவதைக் கவனித்துவிட்டாள். உடனே லீலா கும்பலில் புகுந்து குனிந்தபடியே நுழைந்து சடக்கென்று மறைந்துவிட்டாள்.


# அன்பின் சிகரம்

பக்திப் பெருக்கும், காதல் ரசமும் நிரம்பியது. உயிரினுமினிய உள்ளன்புடன் செய்த உபகாரத்தின் அருமை அறியாத அன்பற்ற அலகையின் முடிவு என்ன ?

**விலை அணா நான்கு**

துரையையும், துரைசானியையும் பார்த்தவுடனே நடுக்க லெடுத்துக்கொண்ட கிழவி, பாவம் பேந்தப்பேந்த விழித்துக் கொண்டு, "ஐயா! அம்மா! முதல்லே அந்த நாயைச் சற்றுப் பிடித்துக்கொள்ளுங்கள். நான் கர்னாடகக் கிழவி. எனக்கு இங்கிலீஷ் தெரியாது. இந்த வண்டியில் ஏறக்கூடாது என்று எனக்குத் தெரியாது. கோபிக்காதெங்கோ! இதோ போய் விடுகிறேன்" என்று கூறிக்கொண்டே கண்ணில் நீர்த் ததும்ப, வந்தது வரட்டுமென்று துணிவுடன் சடக்கென்று நகரும் வண்டியிலிருந்து கீழே இறங்கிவிட்டாள்.

அப்போதுதான் மெல்ல நகரும் வண்டியாயினும் கிழவியின் மனோவேதனையிலும், மழையின் உபத்திரவத்திலும் தடுமாறிப் போய்க் கால்கள் கலகலத்துக் கீழே விழும் நிலைமையில் சறுக்கிச் சாய்ந்து விட்டாள். அச்சமயம் அவசர அவசரமாக ஓடிவரும் ஓர் சாகிப் இதே வண்டியில் ஏறவரும்போது கிழவி சாய்ந்து விட்டதைப் பார்த்ததும், மகா தயாளத்தனமும், உத்தமமான குணமும் பொருந்திய அவர் மனம் பதறியவாறு கிழவி முற்றிலும் கீழே விழாதபடி சடக்கென்று பிடித்துக்கொண்டு வண்டியில் உந்தி ஏற்றிவிட்டுத் தானும் அதில் ஏறி அமர்ந்தார்.

வண்டியும் போய்க்கொண்டே இருக்கிறது. சாகிப் கிழவியை நோக்கி, "பாட்டீ! இப்படித்தானா அஜாக்கிரதையாய் வண்டி ஏறுவது? இன்னும் ஒரு வினாடி தவறியிருந்தால், அநியாயமாய் இந்த ரயில் பூதத்திற்கு இரையாகி இருப்பாயே! கொட்டும் மழையில் ஜாக்கிரதையாய் ஏறவேண்டாமா? ஆண்டவன் உன்னைக் காப்பாத்தினார்—என்று கூறினார். வண்டியிலுள்ளவர்களும் அப்படியே கூறினர்கள்.

கிழவிக்குள்ள நெஞ்சடைக்கும் துக்கத்தில் பேசவும் முடியவில்லை. கண்ணீரோ வெளியே பெய்யும் மழைக்குச் சரியாய் போட்டி போடுகிறது. சொட்டச் சொட்ட நனைந்த ஈரமும் காற்

றும் கூடி குளிர் பாதிக்கிறது. தான் பிறந்த பிறப்பும், வளர்ந்த வளர்ப்பும், வாழ்ந்த வாழ்வும், தான் தற்சமயமுள்ள தாழ்வும் அவள் மனத்தில் புகுந்துகொண்டு குடைகின்றதே யன்றி, வேறொன்றும் தோன்றவில்லை.

சாயபுவை நோக்கி, "ஐயா! நான் தற்கொலை செய்துகொண்டு சாகவேண்டுமென்று எண்ணி இப்படி விழ வரவில்லை. ஆனால், கடவுளே எனக்கு இம்மாதிரி வகையில் சாவைக் கொடுத்திருந்தால், நீர் என்னைக் காப்பாற்றி விட்டதைவிடப் பதின் மடங்கு அதிகரித்த சந்தோஷத்தை என் ஆத்மா அடைந்திருக்கும்." என்று கிழவி கூறும்போது துக்கத்தால் அவள் குரல் கம்மியது. அவள் கூறிய த்வனியிலிருந்தே அவள் நெஞ்சை யடைக்கும் துக்கமும் மனத்திலமுழ்ந்திக் கிடக்கும் வேதனையும் நன்றாகத் தெரிந்தது.

சாகிப் :—பாட்டீ! உலகத்தில் ஆண்டவன் நம்மை என்று பிறப்பித்தானோ அதேபோல ஒருநாள் அவன் பொருளை அவன் எடுத்துக்கொள்கிறான். இதற்காக நாம் ஏன் பிரயத்தனம் செய்ய வேண்டும்? இந்தத் தள்ளாத வயதில் உன்னைத் தனியாய் அதுவும் ராக் காலத்தில்—கொட்டுகிற மழையில் இப்படிக்கூட அனுப்புவார்களா? என் பாட்டி! உனக்கு மக்கள் மனிதர்கள் இல்லையா? அவர்கள் எவ்விதம் மனந்துணிந்து உன்னை இப்படி அனுப்பினார்கள்?

கிழவி :—அப்பா! மனமென்பது ஒன்று இருப்பவர்களுக்குத் துணிவு என்றும், பணிவு என்றும், ஈவிரக்கம், பச்சாத்தாபம் முதலியன எதுவும் இருக்கும். பாலைவனத்தில் பசுமைச் செடிகளையும், நீர் ஓடைகளையும் காண முடியுமா? அதுபோலத் தான் சில மனிதர்களின் மனமும் இருக்கும். எல்லா வியாதிகளுக்கும் மருந்தோ, மாற்றோ உண்டு. பசையற்ற இதயத்திற்குப் பசை ஒட்ட மார்க்கம் ஏது?

சாகிப் :—உன்னுடைய ஒவ்வொரு வார்த்தையும் உன் உள்ளத்திலுள்ள துக்கத்தையும் வெறுப்பையும் எடுத்துக் காட்டுகிறது. ஐயோ, பாவம்! உன்னாலேயே முளைத்தக் கிளைகள் உன்னை அடிக்கும் கொம்பாகிவிட்டதுபோல் தோன்றுகிறது. உம். உலகத்தில்

வரவர அக்கிரமந்தான் மிஞ்சிவிட்டது. உன் பிள்ளைகளே உன்னைக் கவனிக்கவில்லையா ?

கிழவி :—அப்பா ! என் பிள்ளைகளாவது, என் பெண்களாவது எல்லாம் சோதனையின் பிம்பங்கள். தாயாவது, தகப்பனாவது எல்லாம் வெறும் உதவாக்கரைக் குப்பைகளாக வன்றோ மதிக்கப்படுகிறது. பணம் இருந்தால் ஒருகால் உயர்வாக மதிப்பார்களோ என்னவோ !

சாகிப் :—பாட்டியம்மா ! உன் வாய்க்குச் சக்கரைதான் போடவேண்டும். பணமிருந்தால் பிணமும் மதிப்புடன் எழுந்து உட்காரும். அந்தப் பணத்தைச் சம்பாதிப்பதற்காகச் சில துராத்மாக்கள் எத்தனை அக்கிரமம் வேண்டுமாயினும் செய்யத் தயங்குவதே இல்லை. பாட்டியம்மா ! எங்க ஜாதிக்காரர்கள் 'பசுமாடுகளைக் கொலை செய்கிறார்கள் முன் கோபிகள். அப்படி. இப்படி ;' என்று சொல்லுகிறார்களே ! உண்மையில் அதை நான் கண்டிக்கத்தான் செய்கிறேன். அதைவிடக் கேவலமானதும் பயங்கரமானதுமான மனிதக் கொலையையே செய்து பணஞ்சம்பாதிக்கக் கிளம்பிவிட்டார்களே சிலர்...

சிற்றேரி என்ற கிராமத்தில் ஒரு பாதகன் மூன்று தலை முறை தலைச்சன் வர்க்கத்திலுள்ள தலைச்சன் கர்ப்பிணி எந்த ஜாதியிலிருந்தாலும் அவளைப் பலியிடத் தேடிக்கொண்டிருக்கிறானாம். அதற்காக ரகஸியத்தில் ஆட்களை ஏவி வேலை நடத்துகிறானாம். ஒவ்வொருவரும் கர்ப்பிணியை வெளியே அனுப்பக்கூட நடுங்குகிறார்கள். அதோடு அந்த மனிதனை நன்றாக அடித்து நொருக்கிக் கொலைசெய்துவிடவும் சிலர் காத்திருக்கிறார்கள்—என்று சாகிப் சொல்லும்போது, தங்கம்மாளின் தலை சுழன்று சித்திரவதைசெய்ய வாரம்பித்தது. "இத்தகைய அக்ரமத்தைச் செய்யப் புகுந்த மனிதனுக்குப் பெத்த தாயாவது, பாசமாவது ? உலகமெல்லாம் தெரிந்துள்ள இக்காரியத்தைப்பற்றிப் பரமயோக்கியன்போல் பேசி என்னை ஏமாற்றினானே ! இதுதான் கபட உலகத்தின் போக்கு போலும்! அவன் கண்ணு மண்ணு தெரியாது வைத்துக்கொண்டுள்ள வேலை அவனைக் கொன்றுவிடப்போகிறதே !" என்று கிழவி எண்ணிக் கலங்கினாள்.

இதைக் கண்ட சாகிப், "என்ன பாட்டியம்மா! ஏன் உன் முகம் ஒருமாதிரியாகிவிட்டது. இப்படியும் அக்ரமம் நடக்குமா என்று ஆச்சரியமும் பயமும் அடைகிறீர்களா! ஏன் அந்த மனிதன் உங்களுக்குத் தெரிந்தவரா?" என்று மேலும் ஏதேதோ கேள்விகளைக் கேட்டார்.

கிழவி:—(எங்கே தன்குட்டு வெளியாகிவிடுகிறதோ என்கிற பயத்தினால், சாமர்த்தியமாய்ப் பேசத்தொடங்கி) ஐயா! இத்தகையப் பயங்கர விஷயத்தைக் கேட்டவுடன் எனக்குப் பயம் அதிகரிக்கின்றது. ஏனெனில், தாங்கள் சொல்லியதுபோல் மூன்றுதலை முறைத் தலைச்சன் கர்ப்பிணியான என் பேத்தி அந்தப் பாழும் சிற்றேரிக்குப்பக்கத்திலுள்ள இலுப்பத்தோப்பு என்ற கிராமத்தில் இருக்கிறாள். அவளுக்கு ஏதாவது தீங்கு வந்துவிடப்போகிறதே என்று பயப்படுகிறேன். வேறொன்றுமில்லை.

சாகிப்:—"பாட்டியம்மா! ஆண்டவன் ஒருவனை நம்பி இருந்தால் எந்த ம்ருத்யு பயமும் ஒன்றுஞ்செய்யாது. பயப்படாதீர்கள். அந்த ஆண்டவன் அருளால் எனக்குக் கொஞ்சம் யூனானிவைத்தியமும், மந்திரமும் தெரியும். உங்களைப் பார்த்தால் நல்லவர்களாய், ஐயோ பாவமென்று தோன்றுகிறது. ஆகையால் என்னிடமுள்ள மந்திரத் தாயித்தைத் தருகிறேன். அதை ஆண்டவனுக்குமுன் வைத்து சாம்பிராணிப் புகைபோட்டு, பிறகு அதை எடுத்து அந்தப் கர்ப்பிணியின் கழுத்தில் கட்டிவிடுங்கள். எத்தகைய பயமும் இல்லை. எதுவும் கிட்டே அணுகாது. அவளையும் குழந்தையையும் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கும்" என்று கூறிக்கொண்டே அவர் பையிலிருந்து ஒரு தாயித்தை எடுத்துக்கொடுத்தார்.

கிழவிக்கு இது தருமசங்கடமான நிலைமையாகிவிட்டது. தான் அதை வாங்கிக்கொள்ளுவதா, வேண்டாமா! என்ற எண்ணம் மாறி மாறிப் போராடியது. எது வந்தாலும் ஆண்டவனிருக்கிறான் என்று நம்பியே அதை வாங்கிக்கொண்டாள். அது சம்பந்தமாகவே வார்த்தை வளர்ந்துகொண்டே வந்தது. இதற்குள் சாகிப் இறங்கும் ஸ்டேஷன் வந்துவிட்டது. "பாட்டியம்மா! இந்த ஊர் தான் என் இருப்பிடம். நான் சென்று வருகிறேன்" என்று கூறியவாறு இறங்க ஆயத்தமானார்.

கிழவியும் தன் நன்றியறிதலைக் காட்டி, "ஐயா! போய் வாருங்கள். உங்கள் அன்புக்காக மிக்க வந்தனம். உங்களுடைய நல்ல குணத்தை நான் என்றுமே மறக்கமாட்டேன். தங்கள் பேர் என்னவோ!" என்றாள். சாகிப் இறங்கியபடியே, "என் பெயர் உபயதுல்லா சாகிப். நான் வரேன்" என்றார். வண்டியும் போய் விட்டது. சாகிப்பும் மறைந்தார்.

கிழவிக்கு மனம் திக்கு திக்கு என்று அடித்துக்கொண்டு வேதனை செய்கிறது. இந்தப் பேராபத்திலிருந்து தன்னுடைய மகனை எப்படிக் காப்பது என்கிற நிலை அவளைப் பிடித்துக்கொண்டு வாட்டத் தொடங்கியது. பலவிதமான யோசனையுடன் வண்டியில் பொழுதைக் கடத்தினாள். பொழுது விடியுமுன்பு, கிழவி இறங்க வேண்டிய ஸ்டேஷனும் வந்துவிட்டது.

அங்கு யார் வந்திருக்கிறார்களோ தன்னை யழைத்துச் செல்வதற்கு, என்ற ஆவலுடன் தலையை நீட்டி வெளியில் பார்த்தாள். இருள் பிரியவில்லையாதலால் ஒன்றுந்தெரியவில்லை. அங்கு இரண்டே நிமிடம் வண்டி நிற்பதால், உடனே கீழே இறங்கிவிட்டாள். இன்னும் இரண்டொருவர் இறங்கித் தம் வழியோடு சென்றார்கள். தங்கம்மாள் தள்ளாடியபடியே யார் வந்திருப்பார்கள் என்று சுற்றுமுற்றும் பார்த்தாள்.

தனக்குத் தெரிந்த முகமே அங்கு ஒன்றும் காணவில்லை. 'மரகதம், மரகதம்' என்று பலமுறை கூவினாள். "கோபீ! கோபீ!" என்று கூவினாள். யாராவது வந்திருந்தாலன்றோ, கிழவியின் கண்ணிற்குப் படுவார்கள். ஒருவருமே வரவில்லை என்றதை யறிந்ததும் கிழவியின் உள்ளம் துடித்தது. தன்னையொரு பொருட்டாக மதியாது தள்ளிவிட்டான் மகன். அதே நிலைமையில் அணுவளவும் குறையாது மகள் வராதிருந்துவிட்டதானது மேலும் கிழவியின் துக்கத்தைக் கிளறிவிட்டது.

"ஹா! இவ்வளவு கேவலமான நிலைமையிலா நாம் இருக்கின்றோம். உண்மையில் இத்தனை அலங்கோலமாக, அலக்ஷியமாகவா நம் காலம் நடக்கிறது. என்னவேடிக்கை! பெத்தபிள்ளைகளைவிடப் பெண்களுக்குத்தான் பெத்த தாயாரிடத்தில் அதிகமான அன்பும்,

பாசமும் இருக்குமென்று சொல்வார்களே! என் விஷயத்தில் அதுவும் பொய்யாகிவிட்டதே. முன்பு எழுதிய கடிதத்திற்கு வர வேண்டாமென்றாவது பதில் வந்தது. இரண்டாவது கடிதத்திற்கு அதுவே திரும்பிவிட்டதிலிருந்தே அவளுடைய ஆசை தெரிய வில்லையா? அவன் எழுதுவதற்காவது வந்திருப்பார்களோ! என்று எண்ணியதும் ஏமாற்றமாகிவிட்டதே! முன்பின் அறியாத இந்த ஸ்டேஷனில் நான் என்ன செய்வேன்?" என்று தனக்குள் எண்ணி, இடிந்துபோய் சில நிமிடங்கள் தன்னை மறந்து கண்ணீர் பெருக நின்றுவிட்டாள்.

சிறிய ஸ்டேஷனாகையினால் ஒன்று இரண்டு பேர்களும் போய் விட்டார்கள். போர்ட்டர் மட்டும் தங்கம்மாளை நோக்கி, "என்ன ஆயா! ஏன் நிக்கறே! ஜனமெல்லாம் பூடுத்தே. எந்தப்பக்கம் போவணும். வயிகியி தெரியல்லையா?" என்று கேட்டான்.

தன்னுடைய வெட்கக்கேட்டை என்னவென்று சொல்லு வாள் பாவம்! இதற்குமுன் எப்போது வந்தாலும் மனிதர்கள் வந்திருந்து அழைத்துச் சென்றார்கள். இன்று ஒண்டியாக அகப் பட்டுக்கொண்டு வழி தெரியாது விழிக்கும் வயித்தெரிச்சலை என் னென்பது? சற்று யோசித்தாள். பின்னர் சமாளித்துக்கொண்டு "ஏண்டாப்பா! நான் இந்த ஊருக்குப் புதிது. சிங்கிப்பட்டி என்கிற கிராமம் இங்கிருந்து எத்தனை மைல் தூரம் இருக்கிறது? அதற்கு வழி எப்படி?" என்று கேட்டாள்.

போர்:—இங்கிருந்து அது நாலுகல்லு இருக்குதுங்க. இப்படியே நேரே செயக்கே போனீன்னா ஒரு ஆலமரம் கீது. அதுக்கு வடக்கே போனா அந்த ஊருக்கு வழி வருது—என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான்.

கிழவி கிழக்கைக் கண்டாளா! உழக்கைக் கண்டாளா! என்ன செய்வாள் பாவம்! அவள் புருஷன் இறந்த அன்று அவளுக்கு இருந்த துக்கத்தைவிட இன்று அவளுடைய நிலைமையில் அதிக வருத்தம் உண்டாகிவிட்டது. விதியை எண்ணி அழுவதா? திரும் பிப் போய்விடலாமென்றால் கையில் காலணாகூட இல்லாத நிலைமை யில் தான் இருப்பதை எண்ணி அழுவதா! தன் மக்களால், தான்

அடையும் வயித்தெரிச்சலை எண்ணி அழுவதா! அவள் எதை எண்ணித்தான் அழுவாள்.

மனங் கலங்கியபடியே சூர்யோதயம் ஆகும் திக்கைப் பிடித்துக்கொண்டு நடக்க வாரம்பித்தாள். தள்ளாடித் தடுமாறி நடக்க மாட்டாது களைப்பும், வரவர வெய்யில் கிளம்பும் உஷ்ணமும் தாங்காது தத்தளித்து நடந்தும் வழிமாளாது ஒரு மரத்தடியில் உட்கார்ந்துவிட்டாள்.

அவ்வழியே போய்க்கொண்டிருந்த ஓர் சுமை வண்டிக்காரனைக் கூப்பிட்டு "அப்பா! சிங்கிப்பட்டி எத்தனை மைல் இருக்கிறது!" என்று கேட்டாள். ஏதோ கிழவியின் நல்ல காலத்தின் பயனால் வண்டிக்காரன் தாராள மனத்துடன், "ஆயா! இந்த வண்டி அந்த ஏரிகரை வழியேதான் பக்கத்து ஊருக்குப்போவுது. ஐயோ பாவம்! தள்ளாதவளாயிருக்கறயே! இந்த வண்டிலே ஏறிக்கோ ஏரிகரெ மேலே எறக்கிவுட்டுட்டு போரேன் குந்திக்க" என்றான்.

கிழவியின் சோர்வுக்கு இது ஓர் பெருத்த சாந்தி கிடைத்தது போலாயிற்று. வண்டிக்காரனை வாழ்த்திக்கொண்டே ஏறி உட்கார்ந்தாள். வண்டிக்காரன் ஏதேதோ வார்த்தை கொடுத்தபடியே வண்டியை ஓட்டினான். ஏரி கரையில் வண்டியை நிறுத்தி, "ஆயா! எறங்கிப்போ! நேரமாவுது" என்றான். "என் உதரத்தில் ஊறிப்பிறந்த மக்களைக்காட்டிலும் வழியோடுபோகும் அன்னியன், மனிதத் தன்மைக்கு மிகவும் இன்றியமையாத ஜீவகாருண்யத்தினால் அன்புடன் என் நிலையறிந்து வண்டியிலேற்றிவந்துவிட்ட உதவியை நான் மறக்க முடியுமா? உம். பெத்த மக்களுக்கு நான் ஒரு குப்பையாகத் தோன்றினும் இவனுக்காவது நான் பிராணியாகத் தெரிகிறேனே அதுவே போதும்" என்று தனக்குள் எண்ணியபடியே கிழவி வண்டியைவிட்டு இறங்கினாள்.

"அப்பா! முன்பின்னறியாத நீ என்மீது இத்தனை மதிப்பு வைத்து எனக்கு உதவி செய்ததற்காக நான் என் மனப் பூர்வமான நன்றியைச் செலுத்துகிறேன். நீ மகாராஜனாய் நன்னாயிருக்கணும்" என்று வாழ்த்தினாள்.

வண்டிக்காரன் "ஆயா! யாரு தலேலே என்னத்தே கட்டிகினு போவப் போறாங்க சொல்லு. காதற்ற ஊசியும் வாராது கடை

வழிக்கே காண்" என்று பட்டினத்தார் சொல்லியிருக்கறது பொய்யா! நாம்ப வரச்சே இன்னு கொண்டு வந்தோம். போறப்ப இன்னு கொண்டு போவப்போறேம். ஒண்ணுமில்லே பாரு. நாம்ப பண்ற பாவம், புண்ணியம் ரெண்டுதான் நமக்கு நெழல்போலே நம்கூட வருது. என்னமோ கண்ணுலே ஒரு ஆத்மா தவிக்கறத்தெ பாத்தும் பேசாமெ போவ மனம் வருமா! நான் போய் வாரேன்" என்று கூறிக்கொண்டே போய்விட்டான்.

கிழவி, மனங்குழம்பியபடியே பெண் இருக்கும் வீட்டுக்கு வந்தாள். அவள் தள்ளாடியவாறு வருவதைப் பார்த்த அவ்வூரி லுள்ள சில பெண்கள் வியப்புற்றுக் குசமுச வென்று பேசிக் கொண்டதைத் தங்கம்மாள் எவ்வாறு அறிவாள் பாவம்? தன்போக் காக வந்தவள் அவ்வீட்டைப் பார்த்ததும் திடுக்கிட்டுவிட்டாள்.

வீட்டு வாசலில் சில குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன. ஒருவர் வீதித் திண்ணையில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். இந்தப் புதிய மனிதர்களைப் பார்த்ததும் பிரமித்த கிழவி அந்த மனிதரை நோக்கி, "ஐயா! இந்த வீட்டில் முன்பு இருந்தவர்கள் எங்கே இருக்கிறார்கள்?" என்று மெல்ல பயந்த படியே கேட்டாள்.

அதற்கு அந்த மனிதன், "அம்மணீ! நாங்கள் இங்கு குடி வந்து நான்குநாள்தான் ஆகிறது. எங்களுக்கு ஒன்றுந்தெரியாது. வேறு யாரையாவது விசாரியுங்கள்" என்று சாந்தமாகக் கூறினார்.

தங்கம்மாள் என்னதான் செய்வாள் பாவம்! இதில் ஏதோ விபரீதம் இருக்கவேண்டும் என்றுமட்டும் மனதில் சடக்கென்று பட்டது. "உம். எதற்கும் விசாரித்துவிடுவதே சரி!" என்று எண் ணியபடியே எதிர்வீட்டுக்காரம்மாள் வாசலில் நிற்பதை அறிந்து அவள் பக்கம் நகர்ந்தாள்.

இவள் நகர்வதைப் பார்த்துக்கொண்டிருந்த அக்கம்பக்கத்து அம்மாமார்களும், இதுதான் சமயம் என்று அங்கு வந்து தங்கம் மாளைப் பார்த்து, "உம். தலைவிதி! இல்லாதுபோனு தெய்வமே கதி என்று வேதாந்தப்பழமாயிருக்கும் உங்க வயத்தில் அந்தப் பாவி பிறப்பாளோ? பாவம்! பெத்தமனம் கேக்கல்லெ! விஷயம் அறியாது

ஓடிவந்திருக்கிருப்போல் இருக்கிறது" என்று முன்கூட்டியே உபசாரம் சொல்வதைக் கேட்டதும், தங்கம்மாளின்வயிற்றில் இன்னும் புளி கரைக்க ஆரம்பித்தது. மெல்ல சமாளித்துக்கொண்டு, "ஏண்டி அம்மா! என்ன சமாசாரம்?" என்று பரிதாபமாய்க் கேட்டாள்.

எதிர்வீட்டுக்காரி :—சமாசாரமென்ன இருக்கு. உங்க பேத்தி பார்வதி சினிமாக்காரனேடே ஓடிப்போயிட்டா. கோபிக்கும் மரகதத்திற்கும் சண்டே வந்துவிட்டது. கோபி, மத்த கொழந்தைகளே அழைத்துக்கொண்டு போய்விட்டான். மரகதம் எப்படியானளோ, என்னமோ! யாருக்கு தெரியும்? குடும்பம் சிதறிப் போய்விட்டது. ஐயோ, பாவம்! உங்களெப் பாத்தா பரிதாபமா இருக்கு—என்று முடிப்பதற்குள் கிழவியின் சங்கடம் சகிக்கமாட்டாது போய்விட்டது. அதற்குமேல் அவளால் அங்கு நிற்கமுடியாது துவண்டுபோய்த் திரும்பிவிட்டாள்.

கால் சென்ற வழியே நடக்க ஆரம்பித்தாள். களேப்பும், வெறுப்பும், விரக்தியும் ஆவேசமும் அவளே இழுத்துக்கொண்டு போயிற்று. கையிலோ காலணு இல்லே. தான் என்ன செய்வது, எங்கு செல்வது என்றதை அறியாது தடமாடியவாறு ரயில் போகும் பாதையின்மீதே வெறிபிடித்தவள்போல் நடந்து சென்ருள்.

கிழவியை விழுங்கவரும் எமன்போல் பேரிரைச்சலிட்டுக் கொண்டு பின்னுல் பெரிய ரயில் வரும் வேகத்தைக்கூட கிழவியின் அப்போதைய நிலேமையில் அறியாது, உள்ளக் கொதிப்புடன் போய்க்கொண்டே இருக்கிருள். விதி யாரை என்ன செய்யும் என்பதை யார் அறியமுடியும்?


# சுகுண பூஷணம்

அற்ப புத்தி ஆபத்தில் புகுத்தும், ஐயப்பாடு அவதியுறச் செய்யும், பொறுமை என்றும் பெருமை யளிக்கும், பக்ஷபாதம் பழிக்கச் செய்யும், உண்மைக் காதலே நன்மை பயக்கும், உத்தம நெறியே உயர் பெற்றேங்கும் முதலிய அருமையான விஷயங்கள் அடங்கிய துப்பறியும் நாவல்.

**விலே அணு நான்கே.**

# 22

கும்பலில் நுழைந்து வெளியே சென்ற லீலாவதி, அவர்களது கண்ணில் படாமல் வீட்டுக்கே போய்விட வேண்டுமென்று எண்ணி நடக்க வாரம்பித்தாள். அப்போது நன்முக இருள் சூழ்ந்திருந்ததால், லீலா வேகமாகப் போய்க்கொண்டிருக்கையில், அவளுக்குப் பின்னல் ஒரு குரல் மெதுவாக, "லீலா! லீலா!" என்று அழைத்ததைக் கேட்டு வியப்புடன் திரும்பிப் பார்த்து, தன்னேயே நம்ப முடியாத ஆச்சரியத்துடன் "யாரு! அத்தாஞ! கோபி அத்தாஞ!" என்று பிரமித்தபடியே கேட்டாள்.

கோபி :—ஆமாம். லீலா! என், இத்தனை ஆச்சரியமாய்க் கேட்கிருய்? இந்த இராக் காலத்தில் நீ மட்டும் எங்கே தனிமையில் போகிருய்?

லீலா :—என்ன அத்தான்! இப்படி அடையாளந் தெரியாமல் மாறிப் போயிருக்கே? நீ எப்போ வந்தே? அத்தே, பார்வதி, பசங்கள் எல்லோரும் சௌக்கியமா, அத்தான்! பாட்டி அங்கு வந்திருக்கிருளா? பார்த்தியா?

கோபி :—பாட்டியா! என்? பாட்டி இங்கில்லையா? அங்கு வரவில்லையே! என் என்ன சமாசாரம்? பாட்டியைப் பார்க்க வேண்டுமென்றுதான் நானும் இங்கு வந்தேன். பாட்டி எங்கே போனுள்? பெரிய மாமா வீட்டில் கூட இல்லையாமே! அதையும் விசாரித்துக்கொண்டுதான் வந்தேன்.

லீலா:—என்ன! இரண்டிடத்திலும் பாட்டி இல்லையா? ஐயோ! மோசம்! மோசம்!! அத்தான்! அத்தனையும் முழுமோசம். (நடந்தவைகளை யெல்லாம் கூறி) அன்று முதல் பாட்டியைக் காணுமல் நான் தவிக்கிறேன். அவள், இந்தச் சங்கடத்தைத் தாங்காது தற்கொலைதான் புரிந்துகொண்டிருக்கவேண்டும். சந்தேகமே இல்லை. இப்போது என்ன செய்வது அத்தான்!

கோபி :—லீலா! நீ நினைக்கிறபடி அப்படி எதுவும் பாட்டி செய்து கொண்டிருக்கமாட்டாள். நீ கவலைப் படாதே! நான்

அவளை எப்படியும் தேடிப் பிடித்து விடுகிறேன். இப்படியெல்லாம் நடந்திருக்குமென்று நான் நினைக்கவே இல்லையே! நீ இப்போது எங்கே போய் வருகிறாய்?

லீலா :—அத்தான்! என்னுடைய கதை ஓர் புராணம் போலிருக்கிறது. இந்த வீதியில் நாம் அதிகநேரம் நின்று பேச முடியாது. ஏனெனில் என்னைத் தேடிக்கொண்டு பின்னால் ஆள்கள் வந்துவிடுவார்கள். நான் போய் விடுகிறேன்.

கோபி :—லீலா! லீலா! நீ சொல்வது எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! விஷயத்தை விளக்கிக் கூறு. நான் இப்படியே போய் விடுகிறேன். உனக்கு என்ன ஆபத்து?

லீலா :—என் ஆபத்து ஒன்றிரண்டில்லை. என் மனத்தையே என்னால் சமாதானம் செய்ய முடியாது தத்தளித்துக்கொண்டிருக்கிறேன். இரவு பகல் யோசித்து என் மூளையும் குழம்பிப்போய் விட்டது என்றே கூறலாம். நீ எங்க வீட்டுக்கு வாயேன்.

கோபி :—லீலா! பாட்டி இருந்தாலாவது வருவேன். முன்பு நடந்த சம்பவம் மறந்து விட்டதா? நான் வரவில்லை. நீ இப்படி அந்த மரத்தடிக்கு வா! மழைவேறு பெய்ய வாரம்பித்துவிட்டது. நீ விஷயத்தைச் சொல்—என்று கூறிக்கொண்டே ஒரு மரத்தடிக்கு லீலாவை அழைத்துச் சென்றான்.

“எப்படியும் கும்பலில் தவறிவிட்டதாக அவர்கள் நினைக்க ஏது இருக்கிறது. நாம் எதிர்பார்த்தபடியே அகஸ்மாத்தாக இங்கு இவர் வந்திருப்பதை வீணாக்கக் கூடாது” என்று லீலா தனக்குள் தீர்மானித்துக்கொண்டு சென்றாள்.

“அத்தான்! நாம் சிறு வயது முதல் உடன் பிறந்த அண்ணன் தங்கையைப்போல் பழகி வளர்ந்தும், என் பெற்றோரின் துர்க்குணத்தினால் அற்பத்தனத்தினால் உன்னை விரட்டி விட்டபோதிலும் நான் அந்தப் பழய பிரேமையை மறக்கவே இல்லை. நீயும் அப்படியேதான் இருப்பாயென்று நம்புகிறேன். விவாகத்தைப்பற்றிய எண்ணமே எனக்கு உதிக்காது, நான் சந்தோஷமா யிருப்பதைக் கெடுத்து என்னைப் பாழ்படுத்துவதற்காக எனக்குக் கல்யாணத்தை நிச்சயம் செய்துவிட்டார்கள்; (விஷயங்களைக் கூறி) கோபி! இச்

சமயம் நான் என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லையே! நீயாவது ஒரு வழி சொல்லி, என் மனத்தைச் சாந்தியுறச் செய்யேன்" என்று கெஞ்சிக் கேட்டாள்.

இந்த விஷயங்களைக் கேட்டதும் கோபிக்குத் திடுக்கிட்டது. சில நிமிஷங்கள் மவுனமாக விருந்தான். பிறகு பேசத்தொடங்கி, "லீலா! நீ ஆதியில் நினைத்திருந்ததற்கு ஒரு அணுவளவு கூட மாறவில்லை. என் பார்வதியைவிட உயர்வான சகோதரியாகவே உன்னை நான் அன்றும், இன்றும், என்றும் நேசித்து வருகிறேன். உன் பெற்றோரின் துர்க்குணமும், உன் சிறிய தாயாரின் பவிஷும் காணக்கான சதா உன்னைப் பற்றிய கவலையே நான் கொண்டு தவித்தேன்.

நான் ஒரு பெரிய கோடீச்வரனாக விருந்தால், உனக்கும் பார்வதிக்கும் தக்க வரனைத்தேடி நானே கல்யாணத்தையும் செய்து வைக்கலாமெனத் தவித்தேன். வரண்ட கையில் என் எண்ணமும் வரண்டது. உன் தாயார் எங்கே கோமளியைப்போல் உன்னையும் ஆக்கி விடுவாளோ! என்று நான் பயந்ததற்குப் பார்வதியின் கதி கோமளியைவிடக் கேவலமான நிலையில் வந்துவிட்டது"...

என்றதைக் கேட்டதும் லீலா 'என்ன கோபி! பார்வதிக்கு என்ன வந்துவிட்டது?' என்று ஆத்திரத்துடன் கேட்டாள். கோபி நடந்த சகல விஷயங்களையுங் கூறிப் பின்னர், 'இதுதான் வந்துவிட்டது' என்றான்.

"அம்மாவின் புத்தி மயங்கிவிட்ட ஆத்திரத்தால் மற்றைய தங்கைகளை அவளிடம் விட மனமின்றி, வசுந்தராதேவி அனாதை நிலயத்தில் கொண்டு சேர்த்துவிட்டேன். நான் குழந்தைகளை அழைத்துச் செல்லும்போது அம்மா தற்செயலாய் என்னைப் பார்த்துவிட்டதோடு, அதே ரயிலில் தொத்திக்கொண்டு, அடுத்த ஸ்டேஷனில் என்கூடவே வந்துவிட்டாள். பார்வதியைப்பாழ்படுத்திவிட்டதற்கு வருந்திக் கண்ணீர்விட்டு, 'இனி அவள் முகத்தில் விழிப்பதில்லை' என்று சத்தியம் செய்ததோடு, தன்னைக் கைவிடக் கூடாதென்றும் நான் எப்படி சொல்கிறேனே அப்படிக் கேட்பதாயும் கூறிக் கதறினாள். அவளுடைய துக்க உணர்ச்சியில் இனி

அம்மாதிரி எதுவும் செய்யமாட்டாள் என்று எனக்கும் தோன்றியது. அவளை இனி தனியாகக் குடி வைக்க எனக்குச் சம்மதமே இல்லை.

எனக்கோ வேலை கிடைக்கவில்லை. அம்மாவும் முன் ஒரு வீட்டில் சமையல்தான் செய்துகொண்டிருந்தாள். அந்த வீட்டில் உள்ளவர்களால் உண்டாகிய விபரீதந்தான் பார்வதியின் வாழ்வைப் பாழ்படுத்தியது. ஆதலால், அம்மாவை அந்த அனுதை நிலயத்திலேயே சமையல் செய்யும் வேலையில் அமர்த்திவிட்டேன். அங்கு முன்போல் புத்தி கெட்டுப்போக மார்க்கமில்லை. ஆதலால் அவர்களை ஒருவழிப் படுத்திவிட்டேன். பாட்டியைப் பார்த்து வெகு நாளாகி விட்டதே என்றும், பாட்டிக்கு, இந்த விஷயங்கள் தெரிந்தால், மனம் தவிப்பாளே என்றும் எண்ணி, எல்லாவற்றையும் நேரில்கூறிச் செல்ல வந்தேன். வந்த இடத்தில் பாட்டி இல்லை என்கிற ஓர் அதிர்ச்சியும், இவ் விஷயமும் கேள்விப்பட்டேன். லீலா ! நீ என்னதான் தீர்மானித்திருக்கிறுய் ?" என்று வெகு நயமாகக் கேட்டான்.

லீலா :—எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை, அத்தான் ! ஒரு சமயம் வைராக்கியம் தலை சிறந்து பற்பல எண்ணங்களை உண்டாக்குகிறது. ஒரு சமயம் நாம் ஏன் வாழ்நாள்முற்றும் அசட்டுடன் அவதிப்படவேண்டும் என்று தோன்றுகிறது. இச்சமயம் பாட்டியில்லாத குறையே என் மனத்திற்குப் பெருங் குறையாக விருக்கிறது. நான் என்ன செய்வதென்று நீதான் சொல்லேன்.

கோபி :—லீலா ! அந்த ஜமீந்தார் விஷயம் பூராவும் எனக்குத் தெரியும். என் சிநேகிதனுக்கு அவர்கள். சொந்தக்காரர்கள். பையனை நானும் பார்த்திருக்கிறேன். வெகு அழகாக இருப்பான். அவனுக்குப் புத்தி ஸ்வாதீனமற்றுப் போனதற்கு ஓர் ரகஸியமான காரணம் உண்டு. அதை உனக்குக் கூறுகிறேன். நீ பிறரிடம் தெரிவிக்காதே ! அது மிகவும் ரகசியமானது. அதோடு பெரிய இடத்துச் சமாசாரம்.

நம்மாழ்வாரின் தாயார் சித்திரத்தில் எழுதும் அழகு வாய்ந்தவராம். மகா உத்தமி ; கற்புக்கரசி. தரும சிந்தையும், தெய்வபக்தியும், பதிபக்தியும் கொண்டொழுகும் புனிதவதி. அத்தகைய அம்மாள்

மீது ஒரு வயித்தியன் கண்மூடித்தனமாக மோகங்கொண்டு, அவர்களைப் பலாத்கரித்தானும். அம்மாள் அதுதான் சமயமென்று அறிந்து, தன் பர்த்தாவின் செருப்பினுலேயே அவனை அடித்து விட்டார்களாம்.

இந்த ஆத்திரத்தினுல் அவன் ஏதோ ஒரு மருந்தைக் கொடுத்து மகனின் புத்தியை அரைகுறையாகக் கெடுத்துப் பழி தீர்த்துக்கொண்டானும். இந்த விசனத்தினுலேயே அவர்கள் இறந்து விட்டார்களாம். அந்த வயித்தியனும் அதற்குப் பிறகு விளங்க வில்லையாம். அவன் துராத்மா; காமுகன். எனவே, தன்னிடம் வரும் பெண்களில் ஒருத்தியை இம்சித்தும் இணங்காததால், கொலையே செய்து எங்கோ மைதானத்தில் புதைத்துவிட்டானும்.

அந்த ரகஸியம் அவனுடைய விரோதிகளாலேயே வெளியாகி, அந்த மடையன் முதலில் தூக்குத் தண்டனை அடைந்து, பிறகு அப்பீல் செய்ததில், ஆயுள் தண்டனையாக மாறிச் சிறையில் கிடக் கிருனும். உன் ரகஸியம் இதுதான்.

லீலா :—ஐயையோ! இப்படியுமா அநியாயம் நடக்கும்?

கோபி :—லீலா! இதைவிட மோசமான அக்கிரமத்தை உன் னுடைய பெரிய அப்பன் செய்யத் துணிந்திருக்கிருனென்ருல், நமக்கு அதைவிட அவமானம் வேறு உண்டா? (முத்துச்சாமியின் ரகஸியத்தைக் கூறி) இப்படி இருக்கிறது காலம்.

லீலா :—என்ன! பெரியப்பாவா இம்மாதிரி கொடுங் காரி யத்தில் இறங்கி இருக்கிருர்! சரிதான். இதற்கெல்லாம் பாட்டி அங்கே இருந்தால் தொந்தரவு என்று அவளை அடித்துத்தான் துரத்தியிருப்பார் என்று நிச்சயமாகத் தெரிகிறது......ஐயோ! நான் என்ன செய்வேன்?

கோபி :—லீலா! இதில் சந்தேகம் வேறு உண்டா! நீ கவலைப் படாதே! நான் பாட்டியை எப்படியும் கண்டுபிடித்து விடுகிறேன். இந்த விவாக விஷயத்தைப்பற்றி நீ என்னதான் முடிவு செய்யப் போகிருய்?

லீலா :—நான்தான் முதலிலேயே சொன்னேனே! எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ஒரு சமயம் பார்த்தால் பேராசைப்

பிடித்த பெற்ரேர்களின்கண்முன்பு நான் அசடையே மணம்புரிந்து கொண்டு அவர்கள் கோட்டை கட்டியிருக்கிறபடி ஒன்றும் சாய விடாது அவர்கள் வாயில் மண்ணைப் போட்டுவிடலாமா! பணத்தை வீணுகப் பாழடிக்க விருப்பதைத் தடுத்து, அத்தனை பணத்திற்கும் நான் அதிகாரியாகி, நல்ல தர்ம காரியங்களைச்செய்து வாழ்நாளைக் கடத்தலாமா! என்ற ஆத்திரமும் வருகிறது. என்ன செய்யலாம் நீயே சொல்லு!

கோபி:—லீலா! நீ கோபிக்காமல் இருந்தால் நான் சொல்கிறேன். நீ வைராக்கியத்தினுல் முடிவு கட்டியுள்ள விதமே செய்து அதன்மூலம் அநேக நல்ல காரியங்களைச் செய்யலாம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. (காதோடு சில வார்த்தைகளைக் கூறி விட்டு) லீலா! சரிதானே! நீ சற்றும் தயங்காதே; யோசனையே இனி எதுவும் செய்யாதே; கல்யாணத்திற்கு 'ஜாம், ஜாம்' என்று ஒப்புக்கொள்ளு. உனக்குக் கடவுள் கிருபை செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நான் எப்படியாவது வந்து சேர்ந்துவிடுகிறேன். என்ன! தைரியமாக ஒப்புக்கொள்ளுகிருயா?

லீலா:—அண்ணு! உன் வார்த்தைக்குத் தடையே இல்லை. நீ சொல்கிறபடியே செய்வாயா? அதில் உனக்கு நம்பிக்கையும் தைரியமும் இருக்கிறதா? பிறகு கைவிடமாட்டாயே!

கோபி:—சத்தியமாக நான் சொல்லியபடி முடித்துவிடுகிறேன். லீலா! என்னை நம்பமாட்டாயா? இதோ உன்கையில் அடித்துத் தருகிறேன். போதுமா? இனி நீ கவலையேபடாதே. நான் இருக்கிறேன். பாட்டிக்கும் நான் விஷயத்தைக் கூறிவிடுகிறேன். அவளுடைய யோசனையும் இதுவாகத்தான் இருக்கும். தெரிந்ததா! நான் வரட்டுமா! உன்னை வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டுப் போகிறேன். தைரியமாகக் கிளம்பு — என்ருன்.

லீலாவுக்கு இதுகாறுமிருந்த குழப்பம் மாறிப்போய்த் தெம்பும், மனமகிழ்ச்சியும், பலமும் உண்டாகிவிட்டது. கோபியின் சாமர்த்தியத்தையும், தன்மீது கொண்டுள்ள அளப்பரிய ஆசையையும் கண்டு தனக்குள் பூரித்தாள். கோபியின் துணையுடனேயே வீடு வந்து சேர்ந்தாள்.

அப்போதும் தன் மனிதர்கள் யாரும் அங்கு வரவில்லை என்பதை யறிந்ததும் சந்தோஷப்பட்டாள். கடவுளின் படத்திற்கு முன்பு சந்தோஷமும் நம்பிக்கையும் ஒன்றுகூடிய நிலைமையில் பாட வாரம்பித்தாள்.

இவளைக் காணுது கும்பலில் தேடியலையும் சுந்தரி முத லானவர்களுக்கு உள்ளூற திகில் பிடித்துக்கொண்டது. அவள் எங்கேயோ ஓடிப்போய்விட்டாள் என்கிற தப்பபிப்பிராயமும் பயமும் உண்டாகிவிட்டதால், முற்றிலும் தேடிவிட்டு உடைந்த மனத்துடன் 'மேலே என்ன செய்வது? போலீஸ் கம்ப்ளேண்டு கொடுக்கலாமா?' என்று பேசிக்கொண்டே வீட்டிற்கு வந்தார்கள்.

லீலாவின் மதுரமான கானம்ருதம் செவியில் விழுந்த உடனே சுந்தரி மிகவும் சந்தோஷத்துடன் உள்ளே வந்து லீலாவைக் கட்டி யணைத்துக்கொண்டு, "என்ன லீலா! இப்படி எங்களை அலைய வைத்துவிட்டு வந்துவிட்டாயே! நீ எப்படி இங்குத் தனியாய் வந்தாய்?" என்று கேட்டாள்.

லீலா :—போதும்! நீங்கள் ஊராருடைய நகைகளையும் புடவை களையும் பார்த்துக்கொண்டே பின்னுல் எப்படியோ நழுவி விட் டீர்கள். நான் ஸ்வாமி புறப்பாட்டையே பார்த்துக்கொண்டு நின்றேன். ஸ்வாமி நகர்ந்ததும் பார்த்தால், உங்களைக் காணவே இல்லை. எனக்குப் பயம் எடுத்துக்கொண்டது. உடனே ஓட்டமாக ஓடிவந்துவிட்டேன்—என்று பொருத்தமாகக் கூறிவிட்டாள்.

அதற்குமேல் சம்பாஷணை நின்றுவிட்டது. ரத்தினம் அவன் சகாக்களுடன் வெகு அட்டகாஸமாக அங்கு வந்து, "லீலா! லீலா! இதோ பாரு" என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளேபோய் லீலாவிடம் ஒரு அழகான பெட்டியைக் கொடுத்தான்.

லீலா பழய லீலாவாகவிராமல், புதிய லீலாவாகிவிட்ட ரகஸியம் இவர்களுக்கு எப்படித் தெரியும்? வெகு சந்தோஷத்துடன் பெட் டியை வாங்கித் திறந்து பார்த்தாள். அதில் தற்கால நாகரிகமான நெக்லெஸ், செயின், தோடு, லோலக்குகள், ஜடைபில்லை, வளை யல்கள் முதலியன வெல்லாம் கண்ணைப்பறிக்கும் பளபளப்புடன் பிரகாசிப்பதைக் கண்டதும், லீலா மிக்க சந்தோஷத்துடன் பெற்

ருர்கள் சொல்வதற்கு முன்பே அத்தனை நகைகளையும் தானே எடுத்து அணிந்துகொண்டு, சிறு குழந்தையைப்போல் துள்ளிக் குதித்தபடியே நிலைக்கண்ணுடி யருகில் ஓடிப்போய், அழகு பார்த்துக்கொண்டாள்.

சற்று முன்புவரையில் கட்டுக்கடங்காது இருந்த லீலாவின் தெளிவும் செய்கையும் அவர்களைப் பிரமிக்கச் செய்துவிட்டன. ஒருவர்முகத்தை யொருவர் மாறி மாறிப் பார்த்துக்கொண்டார்கள். சந்தோஷம் தாங்க முடியவில்லை. "சுந்தரீ! நாளை புதன்கிழமை காலையில் 9-மணிக்குமேல் நிச்சயதார்த்தத்திற்கு முகூர்த்தம் பார்த்திருப்பதாயும் அந்தக் காரியத்தை அவர்களுடைய பரம்பரை வழக்கப்படி அவர்களுடைய ஜமீன் கிராமத்திலேயே செய்யவேண்டுமென்றும் நம்மை எல்லாம் திங்கட்கிழமையே ஊருக்கு வந்துவிடும்படியும் ஜெமீந்தாரின் காரியஸ்தர் நேரில் என்னிடம் தெரிவித்துவிட்டு, அவரே இந்த வைர செட்டு நகைகளையும் பொறுக்கி வாங்கிக்கொடுத்து விட்டுச் சென்ருர்" என்று ரத்தினம் அபாரமான சந்தோஷத்துடன் கூறினன்.

சுந்தரி பொறுக்க முடியாத ஆனந்த வெறியுடன் ஓடிப்போய், லீலாவைக் கட்டியணைத்து முத்தமிட்டு, "என் கண்ணே! உன்னைப் போல அதிர்ஷ்டசாலி யார் இருக்கிருர்கள்? உன்னைப் பெற்ற என்னைப்போன்ற பாக்கியசாலிதான் யார் வருவார்கள்?" என்று மெய்ம்மறந்து கூறினள்.

---


# ஜீவியச் சுழல்

ஆம்! அவள் ஜாதியில் மானத்தை விலைக்கு விற்றுப் பிழைக்கும் கேவலமான தாசிப் பெண்தான். ஆனல்,......ஒழுக்கத்திலோ குலமகளை விடச் சிறந்தவளே!

அவன் செய்தது என்னவோ குற்றந்தான். அதற்குக் காரணம்,...... காட்டிய கருணையே அவனது குடும்பத்தைச் சிதைத்துவிட்டது......ஆனல், கடவுளும் கை விடுவாரா?......மனித வாழ்க்கையில் பயங்கரச் சுழல் காற்றைப்போன்று நிகழக்கூடிய பலவித சம்பவங்கள் நிறைந்த அருமையான நாவல்.

விலை ரூ. 1-4-0. சந்தா நேயர்களுக்கு ரூ. 1.

# 23

முத்துச்சாமி செய்யும் அக்கிரமக் காரியம் உலகத்தில் ஒருவருக்கும் தெரியாதென்று அவன் நினைத்ததற்கு நேர் மாருக உலக மெல்லாம் தெரிந்துபோய் அதே வார்த்தையாக ஜனங்கள் பேச வாரம்பித்தார்கள் என்றது சிறுகச் சிறுக முத்துசாமியின் காதில் கேட்டதும் அவனுக்கு உள்ளூற உதைப்பு எடுத்துக்கொண்டது.

கர்ப்பிணியைத் தேடுவதற்காக எத்தனையோ இடத்தில் ரகஸிய மாக ஆளைவைத்து வேலைசெய்து வந்ததுடன், தானும் பலவிதத்தில் முயன்று வந்தான். பலன் கிடைக்கவில்லை. பணங்கொடுத்த மனிதனே அவசரப்படுத்தி ஆள்மீது ஆளைவிட வாரம்பித்தான்.

முத்து :—சாவித்திரி ! என்ன செய்வது சொல்லு. நாம் உடனே கண்டு பிடித்துத் தராவிட்டால், சாமியாருக்குக் கோபம் பொங்கிவிடுமாம். எத்தனை பிரயத்தனப்பட்டும் அசல் தலைச்சன் கிடைக்கவில்லையே !

சாவித்திரி :—ஆமாம். நான்தான் முன்பே சொன்னேனே ! இந்த விஷயமென்னவோ ஊர் முற்றிலும் எட்டி இருக்கிறது. எந்த சமயம் என்ன நேருமோ யார் கண்டது. மூன்று தலை முறையை அவன் கண்டானு என்ன ? நம்ம வீட்டு வேலைக்காரி சுப்பியின் மகள் தலைச்சன்தான் உண்டாயிருக்கிருள். அவளும் தலைச்சன் தான் என்று பொய் சொல்லி அவளைக்கொண்டு அங்கு விட்டு மிச்ச பணத்தை வாங்கிக்கொண்டு வந்துவிடுங்கள். இது தான் சரியான யோசனை. எனக்கு மாசம் ஆய்விட்டது....இதை உடனே செய்துவிடுங்கள்.

முத்து:—எண்டீ ! சுப்பிக்கு எத்தனையோ குழந்தைகள் செத் துப்போய் இதொன்றுதானே அருமையாயிருக்கிறது பாவம். இதை எப்படி நாம் ஏமாற்றிக் கொண்டுபோக முடியும் ?

சாவித்திரி :—சரிதான். கூழுக்கும் ஆசைப்பட்டு, மீசைக்கும் ஆசைப்பட்டால் முடியுமோ ? அந்தப் பெண்ணுக்குத்தான் யாரோ

பங்காளிகள் சூனியம் வைத்திருக்கிறார்களென்றும் அதனால் உடம்பு சரியில்லை என்றும் அவள், தினம் விடிந்தால் மந்திரமும் தந்திரமும் ஏதேதோ செய்கிறாள். அந்தச் சாமியாரிடம் மந்திரிக்க அழைத்துப் போவதாய்ச் சொல்லி, சுப்பியுடன் கூடவே அழைத்துச்சென்று ரகஸியமாய் அவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள். பிறகு சூனியமே ஆளைக் கொன்றுவிட்டது என்ற முறையில் அவர்களே நடத்திக் கொள்ளட்டும்.

முத்து :—அதோ சுப்பியே வருகிறாள். நீயே தந்திரமாய்ப் பேசி விஷயத்தை முடித்துவிடு. நான் ஏரிக்குப்போய் வருகிறேன்— என்று கூறிச்சென்று விட்டான்.

சாவித்திரி :—ஏண்டி சுப்பீ ! இத்தனை நேரமாகிவிட்டது ?

சுப்பி:—என்னத்தெம்மா சொல்லுவேன். வள்ளியம்மா சமா சாரந்தான் தெரியுமே. அதான் நேரமாயிடுச்சி. ஒரு மந்தரக்காரன் வந்து இண்ணமோ சேஞ்சான். சாமி கிருபேலே இப்பவாவது லகுவாய் கண்ணெ தொரந்துபாத்து ஒரு வேளே சோறு துண்ணு போதும்.

சாவித்திரி :—சுப்பீ ! நேத்துதான் நான் ஒரு பெரிய சாமி யாரைப் பத்தி கேள்விப்பட்டேன். அவர் ஓட்டாத பேய் இல்லை யாம். அவர் எடுக்காத சூனியமில்லையாம். கொடுக்காத மருந்தில்லை யாம். மகா கெட்டிக்காரராம். அவரிடம் உன்னுடைய மகளை இட்டுக் கொண்டுபோனால் கட்டாயம் குணப்படுத்தி விடுவார் என்று நிச்சயமாய்த் தோன்றுகிறது. நான் வேண்டுமானால் என் வீட்டுக்காரரிடம் சொல்லி ஏற்பாடுசெய்து உன்னை அழைத்துக் கொண்டுபோகச் சொல்லுகிறேன். என்ன சொல்லுகிறாய் ?

சுப்பி :—அம்மணீ ! தாயே ! ஒங்க புள்ளெ குட்டிங்கல்லாம் நல்லாருக்கணும். எப்படியாச்சும் என் வவுத்துலே பாலெ வாத்தா போதும். இப்பவே ஐயாகிட்ட சொல்லி, இந்த தருமத்தெ சேஞ் சிங்கண்ணு ஒங்க குடும்பம் மலெபோலெ வளரும்—என்று கள்ளங் கபடற்ற நிலைமையில் கூறினாள்.

கொலைக்கும் அஞ்சாத மகா பாவி, பணத்தின் பேராசையினால் மனத்தில் சற்றும் திகிலோ, அச்சமோ, பயமோ அற்றுப்போய்

எல்லாம் வெறும் கட்டுக்கதையைக் கொட்டி யளக்கிருள் என்பதை பெத்த பாசத்தில் ஊசலாடும் பேதையான சுப்பி எப்படி அறிவாள் பாவம்! அத்தனையும் முற்றிலும் மோசம் என்பதோடு மட்டும் நிற்காது தன் மகளுக்குக் குணமாகித் தான் நெடு நாட்களாய் ஏங்கி எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் பேரனும் ராஜவடிவாய்ப் பிறந்து தான் சீராட்டித் தாலாட்டிப் பாலூட்டி அன்புமயமான அரிய முத்தமிட்டுக் கொஞ்சுவதுபோன்ற பெரிய உணர்ச்சியும் அவள் இதயம் பூராவும் சூழ்ந்துகொண்டு தேகம் முற்றிலும் பரவி, நரம்புக்கு நரம்பு அந்த ஆனந்த உணர்ச்சியின் வேகம் அவளை ஒரு குலுக்குக் குலுக்கியது.

சாவித்திரியின் காலில் அப்படியே சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கினுள். சுப்பியின் உண்மையான இதயப் போக்கைப் பார்த்த பிறகுகூட சாவித்திரியின் நெஞ்சில் பயம் சற்றும் தோன்ருமல், தான் எடுத்த காரியத்தில் வெற்றி கிடைத்து விட்டது; இனி, மிச்ச முள்ள பணமும் வந்து விடும். இந்தப் பாழும் ஊரைவிட்டுப் பட்டணவாசத்திற்குப் போய், பங்களா வாங்கிக்கொண்டு, தான் சுகமாக விருக்கவேண்டும் என்ற பேராசையின் கயிற்றில் அவள் மனம் பம்பரம்போல் ஆடிக்கொண்டிருந்தது.

முத்துச்சாமி வந்த உடனே தான் ஜெயித்து விட்டதாக பெருமை வேறு அடித்துக்கொண்டாள். வீட்டிலுள்ள திருடனைப் பிடிப்பதற்காக ஒரு பிரகஸ்பதி வீட்டிற்கே நெருப்பு வைத்து விட்டுத் 'திருடனைப் பிடித்துவிட்டேன். கொன்று விட்டேன்' என்று சந்தோஷப் பறை சாற்றினுனும். திருடன் திருடிக்கொண்டு போயிருந்தால் கொஞ்சம் சொத்து மட்டுந்தான் போயிருக்கும். இப்போதோ தன் வீட்டுடன் போகாது, அண்டை அயல் வீடுகளையும் பஸ்பம் செய்துவிட்டான்.

இதுபோல் தன் மனத்திலுள்ள பேராசைக் கள்ளனைப் பிடிப் பதற்கு, தன் குடும்பத்திற்கு ஏழேழு தலை முறைக்கும் அழியாத நெருப்பை அப் பாவி தேடி வைத்துவிட்டது எப்படி அந்தச் சமயம் அவளுக்குத் தெரியும்? அல்லது முத்துச்சாமிக்குத்தான் எப்படித் தெரியும்? இருவரும் மாபெரும் வெற்றியைக் கண்டு விட்டதுபோல் ஆனந்தக் கூத்தாடினர்கள்.

அதே சமயம் லீலாவுக்குக் கல்யாணமென்று கல்யாணப் பத்திரிகை வந்தது. அதைப் பார்த்தவுடனே பொருமைத் தீ வயிற்றில் பற்றிக்கொண்டு எரிய வாரம்பித்தது. "லீலாவுக்கா ஜெமீந்தார் மகன் கணவனுவது!" என்று நினைக்கும்போது சாப்பிட்ட சாப்பாடெல்லாம் அப்படியே பஸ்பமாகிவிட்டது. கல்யாணத்தைப்பற்றி முன்பே தெரிந்திருந்தால், கல்யாணமாகவிடாது கலைத்துத் தன் மகளை ஏற்பாடு செய்திருக்கலாம். இனி, என்ன செய்வது? கல்யாணத்திற்குப் போவதா வேண்டாமா என்ற யோசனை பிறந்துவிட்டது.

"நாளைவிட்டு மறுநாள் விவாகமாகையால், இன்றே கிளம்பினுல்தான் கல்யாணத்திற்குப் போகமுடியும். எதற்கும் போய்த்தான் பார்க்கலாம்" என்று முடிவு கட்டிக்கொண்டார்கள். சுப்பிக்காகத் தான் சாமியாரை நேரில் பார்த்து விசாரித்துக்கொண்டு வருவதாகக் கூறிவிட்டு, அன்றே எல்லோரும் கிளம்பினுர்கள்.

'ஜாம்! ஜாம்!' என்று பலவிதமான மேள தாளங்கள் முழங்க சூர்ய உதயத்திற்கு லீலாவுக்கும் இளைய ஜமீந்தாருக்கும் சாஸ்த்ரோக்தமாய், சம்பிரதாயப்படி சிறப்பாய் அதிவிமரிசையுடன் விவாகம் நடந்தேறியது. எல்லா ஜனங்களுக்கும்—என் சுந்தரிக்கும் ரத்தினத்திற்கும்கூட—கழுத்தில் மாங்கல்யம் மூன்று முடி விழும் வரையில் நிச்சயமில்லை. எந்தச் சமயம் என்ன நேருமோ? லீலா எப்படி ஏமாற்றிவிடுவாளோ? இந்த அசட்டு மாப்பிள்ளைக்கு மாலையிட மனம் எப்படி இசைகிருள் பார்க்கலாம். இந்த வேடிக்கையை நேரில் பார்த்து விடுவதென்று வந்திருந்த பொது ஜனங்களும் உறவினர்களும் வியக்கும்படிக்கு விவாகம் தடையின்றி நடந்த உடனே எல்லோருடைய உள்ளமும் பூரித்தது.

லீலாவின் கண்களில் கண்ணீர் அருவிபோல் வழிவதைக் கண்ட ஜனங்கள், "ஐயோ பாவம்! அசட்டுக் கணவனுக்கு வாழ்க்கைப்பட்டு விட்டோமே!" என்று கண்ணீர் விட்டுக் கலங்குவதாக எண்ணி விசனித்தார்கள். ஆனல், லீலாவின் மனத்தில் அம்மாதிரியான கிலேசம் லவலேசமும் இல்லை. தன்மீது உயிரையே வைத்திருக்கும் பாட்டி, தன் விவாகத்தைப் பார்க்காது எப்படியோ

மறைந்து விட்டாளே என்கிற பெரிய துக்கமும் ஏக்கமுந்தான் அவள் மனத்தை அள்ளித்தின்றது. தாயார் எந்தக் கதி யானுள் என்பதைச் சற்றும் லக்ஷியமே செய்யாது, அன்னை என்ற அன்பு கடுகளவும் இல்லாது உலாவும் தன் பிதாவையும் பெரியப்பாவையும் கண்ணுல் காணவும் லீலா மனம் வெறுத்தாள்.

எந்தக் கோபியிடம் ரத்தினமும் சுந்தரியும் சந்தேகப்பட்டு அவனை வீட்டு வழியும் சேர்க்காது இருந்தார்களோ, அதே கோபி தான் கல்யாணத்திற்குக் கூட இருந்து சகலமான காரியங்களையும் ரத்தினம் வியக்கும்படிக்குக் கவனித்துக்கொண்டுவந்தானென்ருல் அவர்களுக்கு அதைவிட ஆச்சரியம் வேறு என்ன வேண்டும்? கல்யாணம் நடந்துவிட்டது. கச்சேரிகளும், விருந்துகளும் தட புடலாக விமரிசையாய் நடந்தன. கல்யாணத்திற்கு வந்தவர்க ளெல்லாம் போய்விட்டார்கள். ஆனுல், ரத்தினசாமியின் சகாக் களும், சுந்தரியின் சினேகிதைகளும் மட்டும் மேலும் ஒரு வார மாகியும் போகவில்லை.

ரத்தினம், வீட்டைக் காலிசெய்துவிட்டு, இங்கேயே வந்துவிடு வதற்கான ஏற்பாடுகள் செய்து கும்மாளமடித்துக் கொண்டிருந் தான். சுந்தரியைவிட அவளுடைய சகாக்களின் அட்டகாஸம் கூறத் திறமில்லை. நம்மாழ்வாரைக் கல்யாணத்திற்கு முன்பு பார்த் தவர்களுக்குக் கல்யாணத்திற்குப் பிறகு அவன் அடையாளமே தெரியவில்லை. அவ் அரண்மனையைச் சார்ந்த வஸந்த மண்டபத்தை விட்டு லீலாவும் நம்மாழ்வாரும் சுமார் ஒருமாதம் வரையில் வெளி யிலேயே வரவில்லை எனலாம்.

ஒரு மாதமாகியும் ரத்தினமும் அவன் கோஷ்டியும், சுந்தரியும் அவள் கோஷ்டியும் வீட்டைவிட்டுப் போகாததோடு, அடிக்கடி பல சினிமாக்காரர்கள் அங்கு வந்து கும்பல்கூட வாரம்பித்தார்கள்.

ஒருதினம் லீலா ஒரு கடிதமெழுதித் தன் தாய்தந்தையருக்குத் தன் தாதியின்மூலம் கொடுத்தனுப்பினுள். அதைப் பிரித்துப் படித்த இருவரும் தம்மையே நம்பாமல் வியப்புற்றுப் பிரமித்துப்போய் மீண்டும் படிக்க வாரம்பித்தார்கள்.

"என் பிரியமுள்ள பெற்றோர்களுக்கு, லீலா நமஸ்காரம்.

என்னை ஒருவருக்குத் தாரைவார்த்துக் கொடுத்த பிறகு நான் அவருடைய சொத்தாகிவிட்டேன். கல்யாணமாகிய பிறகு ஒரு வாரத்திற்குள் நீங்களும், உங்கள் கோஷ்டியினரும் மரியாதையாக அவரவர் வீடு போய்ச் சேர்ந்திருக்கவேண்டியது நியாயம். அதை விடுத்து இந்த இடத்தையும் உங்கள் சீட்டாட்ட, கும்மாளக் கேளிக்கை இடமாக எண்ணிக் கண்டபேரும் வந்து நுழையும்படியாக நடப்பது ஜெமீன் சமஸ்தானத்திற்கு அழகல்ல. சம்பந்தம் செய்த முறைக்கும் அழகல்ல. தாம் சொல்லாமலேயே மரியாதையாகப் போய் விடுவார்கள் என்று என் கணவரும் எதிர்பார்த்தார். அந்தத் தெளிவு உங்களிடமில்லாததால், நான் இதை எழுத நேர்ந்தது.

பெண்ணைப் பார்ப்பதற்காக எப்பவாவது வருவது தான் பெற்றோருக்கு அழகேயன்றி மரியாதைக் குறைவாய் இங்கேயே இருப்பது சரியில்லை; அழகில்லை. நீங்கள் மட்டும் இங்குள்ள மற்றவர்களுடன் கலந்துகொண்டு மரியாதையாய் இருப்பதாயின் யாதொரு ஆக்ஷேபணையும் இல்லை. உங்கள் சகாக்கள் இனி 5 நிமிடங்கூட இந்த இடத்தில் இருக்கக்கூடாது. என்றும் இப்பக்கம் வரவும் கூடாது. அப்படி அவர்களை விட்டிருக்க உங்களால் ஆகவில்லையென்றால் நீங்களும் போகவேண்டியவர்கள்தான். உங்கள் வயிற்றில் பிறந்த தோஷத்திற்காக மாதம் 50 ரூபாய் எனக்காக என் கணவர் உங்களுக்குக் கொடுத்துவிடுகிறாராம். ஆகையால், மறுமுறை சொல்ல இடமின்றி உங்களுடைய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

இங்ஙனம்,
லீலா."

அதைப் படித்தவுடனே, தம்பதிகளுக்கு அப்படியே மனமுடைந்துவிட்டது. "நாம் கட்டிய கோட்டையின் உயரமென்ன,

அது இடிந்து விழுந்த வேகமென்ன ? என்ன ஆச்சரியம் ! இந்த சின்ன பெண் லீலாவுக்கா இத்தனை கர்வம் ? அசட்டை ? பயித்தியத்தைக் கல்யாணஞ் செய்துகொண்டிருக்கையிலேயா இத்தனை மமதை ! பேஷ்... வளர்த்த கடா, மார்மேல் பாய்ந்தது என்ற பழமொழிப் படியாயிற்றே. இருக்கட்டும். அவளுக்காயிற்று ; எனக்காயிற்று" என்று கூறிக்கொண்டே தடதடவென்று வஸந்த மண்டபத்தை நோக்கிச் சென்றார்கள்.

## 24

தன் நிறையழிந்து ரயில் பாதையின்மீது தள்ளாடித் தடுமாறிக் கொண்டு நடக்கும் தங்கம்மாளுக்கு "இனிமேல் நான் ஏன் இந்த உலகிலிருக்கவேண்டும் ; ஏன் இறக்கக்கூடாது ? பெத்த மக்களுக்கே விஷம்போலாகிவிட்ட நான் யாருக்காக வாழவேண்டும் ?" என்கிற வைராக்யம் தானாகச் சிறுகச் சிறுக மனத்தில் தோன்றி ஊர்ஜிதமாகி வளர்ந்துகொண்டே வந்தது.

அந்த எண்ணம் வேகமாக வளருவதுபோல் அவளுக்குப் பின்னால் எமன்போல் ரயிலும் அதிபயங்கரமான சப்தத்துடன் வேகமாக ஓடிவருகிறது. அந்த இடமோ காட்டுப்பாதை. அருகில் மனித சஞ்சாரமே காணாத இடம். அத்தகைய நிர்மானுஷ்யமான இடத்தில் இவளைக் கவனிப்பார் யார் ? காப்பாற்றுகிறவர்கள்தான் யார் ? ஒன்றுமில்லை.

ரயில் வேகமாக வரும் சப்தம் ஒரு சிறிது கேட்ட உடனே கிழவியின் மனோதைரியமும் துணிவும் அதிகரித்துவிட்டது. "இந்த ரயிலில்தான் இந்த உயிர் போகட்டும். என்னை அரைத்துக்கொண்டு போய் இந்த ஜன்மத்தை முடித்துவிடட்டும், இந்தப் பாவத்தின் தண்டனையை மனதார ஏற்று அனுபவிக்கிறேன்" என்ற குண்டு தைரியத்தில் தன்போக்காகத் தண்டவாளத்தின் மத்தியிலேயே நடந்து போய்க்கொண்டிருந்தாள்.

வைராக்கிய மயமாய் மனம் மாறிவிட்டதால், அவளுக்கு ஒன்றுமே தோன்றாது அயோமயமாகிவிட்டது. ரயிலில் உட்கார்ந்

திருப்பவர்கள் பட்டப்பகலாகையினல் இருப்புறமும் பார்த்துக் கொண்டே வந்தார்கள். அதே வண்டியில் உட்கார்ந்திருந்த ஸௌம்யாபாயும் அவளுடன் வந்திருக்கும் ஒரு வேலைக்காரக் கிழவியும் தண்டவாளத்தின்மீது கிழவி நடப்பதைப் பார்த்து விட்டு, "ஐயையோ! ஐயையோ! யாரோ கிழவி ரயிலில் அகப் பட்டுச் சாகப்போகிருளே!" என்று பெருங்கூக்குரலிட்டார்கள்.

வண்டியிலிருந்த அத்தனைபேர்களும் ஏககாலத்தில் கத்தினுர் கள். ஸௌம்யாவும் இன்னும்சிலரும் ரயிலின் சங்கிலியைப்பிடித்துப் பலமாக இழுத்தார்கள். கிழவிக்கு ரயிலின் ஓசை சமீபத்தில் கேட் கக்கேட்க ஸ்மரணையே அற்றுப்போய் அப்படியே தடாரென்று தண்டவாளத்தின் மத்தியில் விழுந்துவிட்டாள்: அதேசமயம் ரயி லும் ஒரு குலுக்கு குலுக்கிக்கொண்டு பெருத்த இரைச்சலுடன் சடக்கென்று நின்றது.

உடனே சிலர் இறங்கி ஓடிவந்தார்கள். ஸௌம்யாபாயும் அவர்களுடன் ஓடி வந்து பார்த்தாள். கிழவிக்கு ஸ்மரணையே இல்லை. தண்டவாளத்தில் அடிபட்டுத் தலையில் ரத்தம் பீறிட்டுக் கொண்டுவெளிவந்தது. இவள் வேண்டுமென்று தற்கொலை புரிந்து கொள்ளத்தான் இம்மாதிரி விழுந்திருக்கிருள் என்று ரயில்வே போலீஸார் வேறு தீர்மானம் செய்து கிழவியின்மீது வழக்கு ஜோடிக்க வாரம்பித்துவிட்டார்கள்.

* * * * *

மத்தியில் சில தினங்கள் உருண்டு ஓடிவிட்டன. அன்பே உருவாய் ஸௌம்யாபாய் கிழவியின் பக்கத்தில் உட்கார்ந்து தலை காயத்துக்கு மருந்துபோட்டுக் கட்டிக்கொண்டே "என் பாட்டீ! இன்னமும் நீங்கள் சொல்லமாட்டீர்களா! உங்கள் மக்கள் மனி தர்கள் யாரு எங்கே இருக்கிருர்கள் சொல்லுங்கள். உண்மையில் நீங்கள் சொல்கிறபடி நீங்கள் அனுதை என்று நம்பமுடியவே இல்லையே! என்னிடம் சொல்லக்கூடாதா?" என்று கேட்டாள்.

தங்கம்மாளின் இதயத்திற்குள் செய்யும் சங்கடமும் வேதனை யும் அக்கடவுளுக்கன்றி வேறு யாருக்குத் தெரியும்? "குழந்தாய்! ஸௌம்யா! இவ்வுலகத்தில் ஒருவராலும் விரும்பப்படாத இந்த

உதவாக்கரைக் கட்டையை—முன்பின் அறியாத கிழட்டுப் பிணத்தை—எப்படியோ போலீஸாரிடமும், ரயில்வேக்காரர்களிடமும் உன் சாமர்த்தியத்தையும், சாகஸத்தையும் உபயோகித்துத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டாய். நான் அனுதை என்று சொன்னலும் கேட்கமாட்டேனென்கிருய். தற்கொலை செய்துகொள்ளும் குற்றச் சாட்டிலேயே என்கதி தொலையட்டுமென் றிருந்ததும் உன்னல் வீணுகிவிட்டது. எனக்குத் தெய்வந்தான் துணை. தெய்வம் உன்னைத் துணையாயனுப்பியிருக்கிறது. இதைத் தவிர வேறு விஷயமே இல்லையம்மா! நான் பரதேசியிலும் பரதேசி. என்னை விட்டுவிடு. நான் போய்விடுகிறேன்" என்று கூறும்போது கண்ணீர் மடமட வென்று வந்துவிட்டது.

ஸௌம்யா:—பாட்டீ! உன்னை இனி நான் விடவேமாட்டேன். உனக்குத்தான் திக்கில்லை, அனுதை என்கிருயே! அப்படிப்பட்ட உனக்கு நீ எங்கிருந்தால்தான் என்ன? நீ சொல்வதை என்னல் நம்பவேமுடியவில்லை. உன் உள்ளம் அப்படியே துக்கத்தில் தோய்ந்து கிடப்பதாகத் தெரிகிறது. உன் வார்த்தைகளிலிருந்து நீ ஏதோ ஒளிப்பதாகவே என் நெஞ்சிற்குப்படுகிறது. நான் என்ன செய்வேன்? என்ன விருந்தாலும் உன் இத்தனை தள்ளாத வயதில் நீ கண்ட அனுபவங்கள் மலையத்தனை இருக்கும். உலக அனுபவமே அறியாத என்போன்ற சிறுமிகளுக்கு அனுபவம் நிறைந்த ஒரு நல்ல துணையை அகஸ்மாத்தாக ஈசன் காட்டியதை நான் ஏன் கைவிட வேண்டும்? உண்மையில் உனக்கு மக்கள் மனிதர்கள் இருக்கிருர்களா? சொல்லு. நானே அங்கு உன்னை கொண்டு விட்டு விடுகிறேன். அப்படியில்லையென்ருல் நான் உன்னை விடவேமாட்டேன். என் பாட்டி உயிருடன் இருந்த காலத்து நினைவுகள் முற்றும் எனக்கு அப்படியே படம் பிடித்ததுபோல் ஞாபகத்திலிருக்கிறது. பாட்டீ! உன் துணையை நான் மிகுந்த ப்ரீதியுடன் விரும்புகிறேன். நீ திக்கில்லாத அனுதை என்று சொல்லிக்கொள்ளுகிருய். உண்மையில் நான்தான் திக்கில்லாத அனுதையாவேன். ஆகையால், அனுபவமும் அறிவும், ஆற்றலும் நிறைந்த உன் துணையை நான் விடவேமாட்டேன். பாட்டீ! என்னிடமிருப்பதற்கு உனக்குப் பிடிக்கவில்லையா? அதையாவது சொல்லிவிடு"

என்று மிகவும் கெஞ்சிய குரலில் கேட்டாள். அவளை அறியாது அவள் கண்கள் கலங்கின.

தங்கம்மாளின் பாடு தர்மசங்கடமாகிவிட்டது. தன் கதையைச் சொல்லமுடியாது வெட்கமும் துக்கமும் பாதித்தன. தன் சொந்த மக்களுக்கே தன்மீது வெறுப்பாயிருக்கையில், அந்நியப் பெண்ணுக்கு இத்தனை பாசமிருப்பது ஒருபுறம் சந்தோஷமாகத் தோன்றினும், மறு நிமிடமே தன்னைப்பற்றி என்ன நினைப்பாளோ என்கிற எண்ணம் உண்டாகி வதைத்தது. சில நிமிடங்கள் வரையில் பதிலே கூறுமல் மௌனமாக இருந்தாள். தன் பெரிய மகன் மகா அக்கிரமத்தைச் செய்யப் புகுந்திருப்பதைத் தான் எப்படி அதனின்றும் தப்பவைப்பது என்ற பெருங் கவலையே அவளுக்கு முதலாகத் தோன்றியது. இதற்காகத் தான் என்னவிதமான காரியம் செய்யலாம்; இதற்கு இந்தப் பெண்ணை உபயோகித்துக்கொண்டு ஏதாவது உபாயஞ்செய்யலாமா? என்று ஓர் யுக்தி தோன்றியது.

அந்தப் புதிய எண்ணத்தில் அவளை மீறிய நம்பிக்கையும் உறுதியும் தானுக மனத்தில் ஊன்றியது. உடனே அவளை நோக்கி, “ஸௌம்யாபாய்! நீ பெரிய அனுபவம் வாய்ந்த கிழக்கட்டைகளின் துணைவேண்டும் என்று கர்நாடகமாய்ப் பேசுகிறுய். என்னை உலகில் தற்சமயம் ஓர் உபயோகமான மனுஷி என்று மதித்து அன்பு என்ற பொருளைக் காட்டிப் பேசுகிறவர்களில் நீ இரண்டாவது நபராக இருக்கிறுய் என்பதைப் பார்க்க என் உள்ளம் பூரிக்கின்றது.

குழந்தாய்! உன் விருப்பப்படியே நான் இருப்பதில் யாதொரு ஆக்ஷேபணையும் இல்லை. ஆனுல், நான் ஒருத்தி இங்கிருப்பதாக நீ யாருக்கும் சொல்லக்கூடாது. நீ நினைப்பதுபோலவே என்னுடைய பிறவியிலும் சில மர்மங்கள் இருக்கலாம். அது ஒரு காலத்தில் உனக்குத் தெரியும் சமயம் வரும். ஆகையால், என்னை இப்போது எதுவும் கேட்காதே” என்று கூறும்போது கிழவிக்குக் கண்ணீர் வந்துவிட்டது.

அதற்குமேல் எதுவும் கேட்காமல் ஸௌம்யாபாயும் புத்திசாலித்தனமாய் இருந்துவிட்டாள். அன்ருடம் பத்திரிகையைப் படித்து நல்ல சாரமான விஷயங்களைக் கிழவிக்குச் சொல்லுவாள்.

கிழவியும் இதில் எல்லாம் மிக்க பிரியமுள்ளவளாகையினல் ஆசையுடன் கேட்பாள். ஒழிந்த நேரத்தில் தானும் படிப்பாள்.

அன்று வழக்கம்போல் ஸெளம்யாபாய் பள்ளிக்கூடத்திற்குச் சென்ற பிறகு கிழவி தினசரியை வைத்துப் புரட்டிக்கொண்டிருந்தாள். அதில் ஒரு பெரியவருக்கும் ஒரு இளமங்கைக்கும் ஏராளமான புஷ்பமாலைகளைச் சூட்டி, கையில் பொக்கேயுடன் நிற்கும் புகைப்படத்தைக் கிழவி கண்டதும் 'அடாடாடா! இத்தனை பெரிய கிழவனுக்கும் இந்தப் பெண்ணுக்குமா விவாகம்!' என்ற ஆவலுடன் அந்தப் படத்தை உற்றுப் பார்த்தாள். படத்தில் இன்னும் பலரும் நிற்கும் மாதிரியைப் பார்த்தால் சந்தேகமாய் இருந்தது. படத்தின் கீழே கொட்டை எழுத்துக்களில்,

துப்பறியும் வீரசிங்கமென்று புகழ்பெற்ற நிபுணர் ஸ்ரீமான் ராஜாராம் நாயுடுகாரு அவர்களும், அவரது அபிமானப் புதல்வியாகிய கீர்த்தி மிகுந்த ஸ்ரீமதி அம்புஜம்மாளும் சமீபத்தில், "கோல்லக்கேணி" ஜமீந்தார் மனைவியின் ஆச்சரியமான கோலைக்கேஸைக் கண்டு பிடித்து, உண்மைக் குற்றவாளிக்குத் தண்டனை விதித்த பிரஸித்தர்கள். (மத்தியில் மாலையுடன் இருப்பவர்கள்) மற்றவர்கள், ஜமீந்தாரின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்."

என்று எழுதியிருந்ததைப் படித்ததும் தான் நினைத்தது தப்பிதம் என்று உணர்ந்து அவர்களையே உற்று உற்றுக் கவனித்தாள். அவர்களைப்பற்றி இதற்கு முன்பு பல பத்திரிகைகளில் படித்தது இவளுக்கு ஞாபகம் வந்தது. "என்ன வீரம்! என்ன புத்திசாலித்தனம்" என்று தனக்குள் வியந்தாள். ஏதேதோ எண்ணி ஒரு பெருமூச்சுவிட்டாள்.

சாயங்காலம் ஸெளம்யாபாயின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். ஸெளம்யா வந்ததும் கிழவி அவளிடம் ஏதேதோ விஷயங்களை ரகஸியமாய் காதோடு சொல்லிக் கண்ணீர்விட்டாள். ஸெளம்யா ஆச்சரியத்தினல் பிரமிப்படைந்து, "பாட்டீ! உண்மையாகவா?" என்றாள். கிழவி ஸெளம்யாவைத் தழுவிக்கொண்டு அவள் வாயைப் பொத்திவிட்டாள்.

பின்னும் சில தினங்கள் ஆயின. கிழவியின் முகத்தில் முன்பு இருந்த பரிதாபக் களையும், ஏக்கமும் சிறிதுமாறி சற்றுத் தெளிவும் தெம்பும் உண்டாகியது. ஸௌம்யாவுக்குக் கிழவியின் துணையால் எத்தனை தைரியமும் சந்தோஷமும் உண்டாகியதோ அதேபோல் அவளுடைய தெளிவினால், பின்னும் மனச்சாந்தியும் சந்துஷ்டியும் உண்டாகியது. ஸௌம்யா வழக்கம்போல் பத்திரிகை படிக்கையில் அடியில் வரும் விஷயத்தைப் படித்தாள்.

வஸந்தபுரி இளைய ஜமீன்தார் ஸ்ரீமான் நம்மாழ்வார் அவர்களுக்கும் சிற்றேரி ஸ்ரீமான் ரத்தினசாமியின் புதல்வி சௌபாக்யவதி லீலாவதிக்கும் சென்ற வெள்ளிக்கிழமை யன்று விவாகம் சிறப்பாக நடந்தேறியது.

என்றதைப் படித்துவிட்டு, அந்தத் தம்பதிகளின் புகைப்படத்தைக் காட்டினாள்.

இதைக் கேட்டதுமே தங்கம்மாளைத் தூக்கி வாரிப்போட்டது. "என்ன! என் கண்மணி லீலாவுக்குக் கல்யாணமாயிற்று? அந்த அசட்டு ஜமீன்தாருக்குக் கொடுத்தார்களா?" என்று தனக்குள் நினைத்து ஒரு விநாடி நேரம் அப்படியே தம்பித்து நின்றாள். கிழவியின் உண்மை நிலை அறியாத ஸௌம்யாவுக்கு ஒன்றும் புரியவில்லை. "எம்பாட்டீ! உன் முகம் ஏதோ ஒரு மாதிரி ஆகிவிட்டதே! உனக்கு இவர்களைத் தெரியுமா?" என்று கேட்டாள்.

தங்க :—உம். யாரைத்தெரிந்தால் என்ன லாபம்? என்னிடத்தில் அன்பாயிருக்கும் ஆத்மாக்களில் இந்தப் பெண் ஒருத்தி. அவளைப் பார்த்து எத்தனையோ யுகமாகிவிட்டது. இந்த ஜெமீந்தார் வெறும் பயித்தியம். இதை அவளுக்கு மணஞ்செய்துவிட்டார்களே என்று நினைக்கும்போது விசனமாயிருக்கிறது—என்றாள்.

அதற்குமேல் ஏதாவது கேட்டால் கிழவிக்குக் கோபம் வருமோ என்ற அச்சத்தினால் ஸௌம்யா பேசாதுபோய்விட்டாள். கிழவிக்கோ லீலாவைப்பற்றிய கவலை ஏற்கெனவே பாதிப்பது போதாமல், "இந்த அசட்டு மாப்பிள்ளைக்கு அவளை எப்படி மனந்துணிந்து பெற்றோர்கள் தள்ளிவிட்டார்களோ; லீலா என்ன வேதனை யடைந்தாளோ! எப்படி மனம் வருந்தினாளோ!

என்னை எண்ணி என்ன ஏங்குகிருளோ! இம்மாதிரியான காரியத்தையெல்லாம் முடிக்க எண்ணித்தான் ரத்தினமும் அங்கிருந்து சமயம்பார்த்து என்னை அடித்துத் துரத்தினன். முத்துவும் அவன் அக்கிரமத்தைச் சாதிக்கத்தான் துரத்தினன். இப்ப வன்ருே எனக்கு உண்மைக் காரணம் தெரிகிறது.

ஐயோ! ஆண்டவனே! இம்மாதிரியான துர்க்குணமுடைய மக்களால் என் குடும்பம் சிதறிப் பாழாகவேண்டுமென்று நான் எந்த ஜென்மத்தில் வேண்டினேன். எந்தக் கோயிலைச் சுற்றினேன். உலகமறியாத குழந்தையை அவள் மனம் நோகும்படியாக ஒரு அசட்டுக்குத் தள்ளிவிட்டதைச் சகியாது பிராணனை விட்டுவிட்டால், என்ன செய்வேன்?" என்ற கவலை யொருபுறம் பிடித்துக்கொண்டது. என்ன செய்வாள் பாவம்! 'பெத்த மனம் பித்து' என்ற பழமொழிப்படிக்குக் கலங்கித் தவிக்கிருள். லீலாவைப் பார்க்க வேண்டுமென்கிற வேட்கையோ அவளை மீறி எழுந்து மற்ருெருபுறம் வதைத்தது.

## 25

லீலாவின் கல்யாணத்திற்குச் சென்று திரும்பி வந்த முத்துச்சாமியும் சாவித்திரியும் தாங்கள் ஏற்கெனவே தயார்செய்திருந்தபடி சுப்பியின் மகளை அழைத்துச் செல்லத் தீர்மானித்திருந்தார்கள். இவர்களுடைய துரதிருஷ்டமும், ஒரு பாபமும் அறியாத சுப்பியின் அதிர்ஷ்டமும் ஒன்றுகூடியதால், மாதக் கணக்குகள் சரியாகத் தெரியாததனுல், சுப்பியின் மகள் திடீரென்று ஓர் அழகிய ஆண் மகவைப் பெற்றுவிட்டாள். சுப்பியின் ஆவலைப் பூர்த்திசெய்து விட்டார் கடவுள்.

இது கேட்ட தம்பதிகள் ஏமாற்றமும் வருத்தமும் அதிகரித்துத் தவித்துக்கொண்டிருக்கையில், முதலில் பத்தாயிரம் ரூபாய் கொடுத்த மனிதன் அவசரமாக வந்து, "சார்! சாமியார் உங்களை உடனே அழைத்துவரச் சொன்னூர்கள். விளையாட்டுப்போல் ஏக நாட்களாகிவிட்டன என்று உங்கள்மீது சாமியாருக்கு அசாத்ய கோபம். ஏன் தாமதம். புறப்படும்" என்ருன்.

முத்துச்சாமிக்கு ஒருபுறம் பயம். மற்றொருபுறம் தனக்கு வலுவில் கிடைத்துள்ள அதிர்ஷ்டம் எங்கே தன்னைவிட்டுப் போய் விடுமோ என்கிற திகிலும் பிடித்துக்கொண்டது. "என் சார்! நான்தான் முதலிலேயே சொன்னேனே? இது என்ன இலேசில் அகப்படக் கூடியதா? சில பேர்களைத் தயார் செய்து ஏதோ சாகசக்யம் செய்து அழைத்து வருவதற்குள், அதில் சிலர் பிரஸவித்து விட்டார்கள். சிலருக்குக் கருச்சேதம் ஆகிவிட்டது. இப்போது கூட வாருங்கள்; நான் இன்று அழைத்துவரத் தயாராயிருந்த அந்தப் பெண் திடீரெனப் பிரஸவித்துவிட்டதைக் காட்டுகிறேன். இம் மாதிரி பெண்கள் அகப்படுவதென்றால்......

இதற்குள் அந்த ஆசாமி இடைமறுத்து, "சார்! வீணாக இழுத்துப் பேசுவதில் லாபமில்லை. உம்மிடம் ஸ்பெஷலாகச் சாமியார் இந்தக் காரியத்தை ஏன் கொடுத்தார் தெரியுமா? உம்முடைய வேறொரு ரகஸியமான காரியம் ஒருவருக்கும் தெரியாதென்று நினைக்காதேயும். பெண்களையெல்லாம் பிடித்துத் துராத்மாக்களுக்கு விற்றுக் கமிஷன் அடிக்கும் மகான் நீர் என்று தெரிந்துதான் அந்த வியாபாரத்திலிருக்கும் உமக்கு இது மிகவும் சுலபம் என்று சாமியார் உம்முடைய ரகஸியத்தை அறிந்து உம்மைத் தேடிப்பிடித்தார்.

சார்! வீணாக வார்த்தைகளை வளர்த்துவானேன். நீர் இன்னும் ஒரு வாரத்திற்குள் இந்தக் காரியத்தைச் செய்யாவிட்டால், உம்முடைய அந்த விபசார விடுதி ரகஸ்யத்தை வெளியிட்டு உம்மைக் காட்டிக் கொடுத்துவிடுவதாகச் சாமியார் சொல்லச் சொன்னார். தெரியுமா? இனி, வீண் தாமதம் வேண்டாம். சாமியாருக்குப் பதில் சொல்லி அனுப்புகிறீர்களா? அல்லது நேரில் வருகிறீர்களா?" என்று சற்று முடுக்காகக் கேட்டான்.

முத்துச்சாமிக்குத் தூக்கிவாரிப்போட்டது. தன்னுடைய மற்றொரு ரகஸ்யத்தைக் கொண்டு தன்னை என்ன செய்துவிடுவானோ என்கிற பயமும் திகிலும் உண்டாகித் தவித்து, குழம்பிக் கொண்டிருக்கையில், ஒரு ஆள் கடிதமொன்றைக் கொணர்ந்து, முத்துச்சாமியிடம் கொடுத்தான். அதை அவன் ஆவலுடனும் பயத்துடனும் வாங்கிப் படித்தான்.

"ஐயா!

நீங்கள் ரகஸியமாகக் கருப்பனிடம் சொல்லி யிருக்கும் விஷயத்தின்படியே மூன்று தலைமுறைத் தலைச் சன் கர்ப்பிணி யொருத்தி சேரியில் தயாராய் இருப்பவளை நான் தந்திரமாய் என் வீட்டில் கொண்டுவந்து வைத் திருக்கிறேன். அவளுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்காக அவளது தாயும் தகப்பனும்கூட இருக்கிறார்கள். எப் போது எங்கு அழைத்து வரலாமென்று தெரிந்தால், உடனே ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் சொல்லியது போல் 500 ரூபாய் எனக்கு எடுத்து வைத்துவிடவும். பிறகு ஏமாற்றும் பேரம் வேண்டாம்.

இங்ஙனம்,

மாடன்."

என்று எழுதி இருந்ததைப் படித்ததும் முத்துச்சாமிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. உடனே கடிதத்தை, வந்துள்ள மனித னிடம் காட்டினான். அவனும் பார்த்துச் சந்தோஷப்பட்டதை முக பாவத்தால் அறிந்துகொண்ட முத்துச்சாமிக்குச் சற்றுத் தைரியம் பிறந்தது. "சார்! பார்த்தீர்களா! நான் என்ன சும்மாவா பொழு தைப் போக்குகிறேன். பாருங்கள். நான் இன்னும் நாலு நாளைக்குள் அங்கு வந்து சேருகிறேன். நீங்கள் சொல்லியபடி மிச்ச பணத்திற்கு உடனே ஏற்பாடு செய்யுங்கள். இனி, கவலை வேண்டாம்" என்று சற்றுத் தைரியமாயும் அழுத்தமாயும் சொன்னான்.

வந்தவன் குசாலாகப் பேசிவிட்டுப் போய்விட்டான். கடிதம் கொண்டுவந்த ஆளுக்கு முத்துச்சாமி பதில் கடிதம் எழுதிக் கொடுத்து அனுப்பிவிட்டான். தம்பதிகளுக்கு ஒரு பெரிய காரி யத்தை ஜெயித்துவிட்ட சந்தோஷம் மீண்டும் உண்டாகிவிட்டது. அவர்களை வரச்சொல்லியிருந்த நாளை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

யாருடைய வயிறு எரிந்துபோகிறதோ! யாருடைய குடி முழுகிப்போகிறதோ அதைப்பற்றி இந்தச் சண்டாளர்களுக்கு என்ன கவலை? எந்த வழியிலாவது பணம் சம்பாதிக்க வேண்டும் என்கிற ஒரே எண்ணத்தில் மூழ்கிக் கிடக்கையில் மற்ற எதுவும் கண்ணில் படாதல்லவா?

பிறர் வயிறெரிந்தால்—மனம் பதறினல்—கண்ணுடியில் பிரதி பிம்பம் தெரிவதுபோல் இவர்களைத் தாக்கிவிடும் என்ற எண்ணம் இருக்குமாயின், எந்த அக்கிரமத்தையாவது செய்ய நினைப்பார்களா? தெய்வம் ஒன்று உண்டு என்ற நினைவாவது இருந்தால், தேகத்தில் ஒருவித அச்சம் இருக்கும். அந்த உணர்ச்சி சிறிதும் இல்லாதவர்களுக்கு எந்தப் பயந்தான் இருக்கும்?

குறித்த நேரத்தில் பழங்காலத்து ரெட்டைமாட்டு வண்டியில் நாலைந்து பேர்கள் ஆண், பெண்களுமாய் முத்துச்சாமி குறித்திருந்த மாந்தோப்பில் வந்து இறங்கினர்கள். ஆள்மூலம் முத்துச்சாமிக்குத் தகவல் தெரிந்ததும் அவனும் அங்கு வந்தான். அவனைக் கண்டதும் கருப்பன் என்கிற ஹரிஜன் வண்டியிலிருந்த அம்மாளிடம் போய், "ஒலகாத்தா! இதோபாரு. நம்ப ஐயா வந்துட்டாரு. இவருதான் அந்த வயித்தியகாரங்கிட்டே இட்டுகினு போவாரு. செல்லாத்தாளுக்கு ஒடம்பு ஒண்ணுமே இருக்காது. நல்லா லகு வாப்பூடும். நல்ல தொரேமாதிரி ஆம்ப்ளெபுள்ளெ பொறக்கும். அயுவாதே என்று கூறிவிட்டு, சாமீ! இவங்களெ நீங்கத்தான் காப்பாத்தணும்!" என்று முத்துவின் காலில் விழுந்தான்.

முத்து :—சேச்சே! இனுமே பயமாவது, கிலியாவது? அந்த வயித்தியரிடம் போனல் பிறகு வியாதி என்ற பிசாசு நிக்குமா?

வண்டிக்குள்ளிருப்பவள் :—சாமீ! எங்க குடும்ப வெளக்கே நீங்கள்தான் ஏத்தணுங்க. கொயந்தேக்கு ஒடம்பு குணமாயிட்டாக்காபோதுங்க. எசமான்கால்லே உயுராங்க. உசுரு பிச்சே தரணுங்க—என்று கண்ணீர்விட்டாள்.

முத்து :—அம்மா! கொஞ்சங்கூட பயப்படாதங்கோ! அந்த வயித்தியர் சாமானியப்பட்டவரல்ல. வெகு கெட்டிக்காரர். ஆயிரக்கணக்கானவர்களுக்குக் குணப்படுத்தி இருக்கிருர். கவலைப்படவேண்டாம். இப்பவே போகலாம் வாருங்கள்—என்று கூறிக்கொண்டே தான் வேறொரு மாட்டுவண்டியில் ஏறிக்கொண்டு புறப்பட்டான்.

வண்டியில் படுத்திருக்கும் கர்ப்பிணி, "ஐயோ! அம்மா! அப்பா! உயிர்போறதே. மண்டையிடி பொறுக்கல்லையே! என்ன செய்வேன்?" என்று அலத்துகிருள் பாவம். கூட விருக்கும் அவளுடைய தாயாரும் பாட்டியும் கண்ணைத் துடைத்துக்கொண்டும் மூக்கைச் சிந்தியவாறும் தேறுதல் கூறுகிருர்கள்.

இந்த அக்கிரமத்தைக்கண்டு சகியாது மனங்கொதித்து ஆத்திரம் பொங்கி எழுபவன்போல் அதி தீக்ஷண்யமாக சூரியன் தன் உஷ்ணத்தை முற்றும் கக்குகிறுன். அந்தக் கொடிய வெயிலில் மாடு நடக்கமுடியாது தவித்தவாறு வண்டியை இழுத்துக்கொண்டு போகிறது.

* * * *

முத்துச்சாமி சென்றுவிட்டதும் சாவித்திரியின் சந்தோஷம் அவளாலேயே கட்டுக்கடக்க முடியவில்லே. திரும்பி வரும்போது இன்னும் பத்தாயிரம் ரூபாயுடன் வருவான்; இனி இந்தக் கிராமத்து வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம். பட்டணத்தில் 'ஜம்'மென்றிருக்கலா மென்று மனத்திற்குள் கோட்டை கட்டிக் கொண்டிருந்தாள்.

அன்று செல்ல மறுதினம் இரவு திடீரென்று அவள் சற்றும் எதிர்பாராவிதமாய் ப்ரஸவவேதனே உண்டாகிவிட்டதும், அவள் நிலைமை தடமாடிவிட்டது. "வீட்டிலோ யாருமில்லே. அவளது மகள் ப்ரஸவித்ததிலிருந்து சுப்பிக்கும் லீவாகையால் அவளுமில்லே. இச்சமயம் என்ன செய்வது? யாரைக் கூப்பிடுகிறது? அக்கம் பக்கத்துக்காரர்களேக் கூப்பிட்டால், நமது ரகஸியமும் பத்தாயிர ரூபாயின் மர்மமும் தெரிந்துவிடப்போகிறதே; என்ன செய்வது?" என்று குழம்பிப்போய்த் தவித்தவாறு கண்ணீர் விடுகிறுள். காலமோ நள்ளிருள் காலம். ஊரோ நிசப்தம் குடிகொண்டு நித்திரையில் ஆழ்ந்திருக்கிறது. அங்கு வண்டியில் சென்ற கர்ப்பிணிக்கு யார் உதவி செய்வார்களோ! இந்தப் புண்ணியவதிக்கு இந்த ஆபத்தில் யார் துணே செய்வார்களோ யார் கண்டது?

---

## 26

லீலாவதியின் கடிதத்தைப் பார்த்துக் கோபமும் ஏளனமுங்கொண்டு வஸந்த மண்டபத்தின் பக்கமாக ஓடிய சுந்தரியும் ரத்தினமும் அங்குள்ள காட்சியைக் கண்டு திடுக்கிட்டார்கள். தம் கண்ணேயே தாம் நம்பாது அப்படியே திகைத்து நின்றுர்கள். அப்படி அவர்களேப் பிரமிக்கச் செய்த காக்ஷி யாது?

ரத்தினத்தின் ஆவேசத்தினுல் முரட்டுத்தனமாக அடித்துக் கண்ணேக் குருடாக்கி, பிச்சைக்காரனுத் தெருவில் அலேயச்செய்த

அதேமனிதன்—அன்று லீலா பார்க்கும்போது கந்தல் உடையும் அழுக்கு மேனியும் ஜடைத் தலையுமாக இருந்தவன்,—இன்று நல்ல உடையும் கிராப்புவெட்டிய தலையும், புழுதியேறியிருந்த முகத்தில் விபூதியும் குங்குமமும் அணிந்துகொண்டு, ஆனந்தமாய் ரேடியோ கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டால், எப்படி அவர்களுடைய கண்களை அவர்கள் நம்ப முடியும்?

சில விநாடிகள் ரத்தினம் தம்பித்து நின்றான். அடுத்த நிமிடமே லீலா ஒரு வெள்ளித்தட்டுடன் பலகாரங்களையும் பழவகைகளையும் கொண்டுவந்து, "தாதா! இந்தா சாப்பிடு!" என்று அன்பேமயமாய் அவனிடம் கொடுத்துவிட்டு உள்ளே போய்விட்டாள். என்ன ஆச்சரியம்! நம்மால் கண்ணை இழந்த இந்த மனிதன் இத்தனை வருடங்கள் கழித்து இங்கு எப்படி வந்து விட்டான்? லீலா அவனிடம் இத்தனை அன்பு பாராட்டுவதன் மர்மமென்ன?" என்கிற பிரச்னைகள் அவன் மனத்தில் போராடத் தொடங்கின. அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

சுந்தரி வியப்பும் திகைப்பும் நிறைந்தவளாய், அவ்விடத்தைத் தாண்டி வேறொரு ஹாலுக்குள் நுழைந்தாள். அங்கு அவள் கண்ட ஆச்சரியம் முன்னதைவிட ஆயிரம் பங்கு அதிகரித்ததாயிருந்தபடியால், அபாரமான திகைப்புடன் நின்றுவிட்டாள்.

நம்மாழ்வாரின் தகப்பனார் ஏற்கெனவே இரண்டு மனைவிகளை விவாகஞ்செய்துகொண்டும் குழந்தை யில்லாததால், அவர்களுக்கு ஏதோ தொகையைக் கொடுத்துத் தனியாக வைத்துவிட்டார் என்ற விஷயத்தை நாம் முதலிலேயே கூறி யிருக்கிறோம். அதே இரண்டு மனைவிகளுக்கும் லீலா பழங்களும், பலகாரங்களும் தனித் தனியே வெள்ளித்தட்டுகளில் கொடுத்து உபசரித்துக்கொண்டு மயில்போல் நிற்கிறாள். அந்த இரண்டு பேர்களும் மகிழ்ச்சியே மயமாய் அன்புடன் கண்கொட்டாது லீலாவைப்பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள்.

லீலா மரியாதையாகப் பேசத்தொடங்கி, "சாப்பிடுங்கள் மாமி! இனிமேல் நான் உங்கள் பழைய பல்லவியைக் கேட்கமாட்டேன். உங்கள் வீட்டில் நீங்கள் இருப்பதற்குக்கூட யோசனையும் மீனமேஷமும் பார்ப்பது உண்டா! இனி, உங்களைக் கேட்கக் கூடாதென்கிற தீரத்துடன் உங்கள் வீடுகளுக்கு நம் குமாஸ்தாவை அனுப்பிச் சாமான்களைக் காலிசெய்துவிட்டு, வீட்டையும் வாட

கைக்கு விட்டுவிடும்படிச் சொல்லிவிட்டேன். என்மீது கோபம் வேண்டாம்" என்று தேனொழுகக் கூறினள்.

சுந்தரிக்கு இதைப் பார்க்கும்போது வயிற்றில் பற்றி எரிகிறது. தான் ஒருவிதமான கருத்துடன் இக் கல்யாணத்தைச் செய்தது போக, பெத்த தாயார் தகப்பனர் என்கிற தாக்ஷிண்யங்கூட இல்லாமல் விபரீதமான கடிதம் ஒன்றைத் துரைசானிபோல் அனுப்பி விட்டு, என்றைக்கோ வீட்டைவிட்டுத் துரத்தப்பட்ட மாமியார்களை வரவழைத்துக் குலாவும் வயித்தெரிச்சலை என்னென்பது! ஐயையோ! நினைத்தது ஒன்று நடப்பது ஒன்ருக விருக்கிறதே. இந்தப் பெண்ணுக்கென்ன புத்தி கெட்டுவிட்டதா? பைத்தியத்திற்கு வாழ்க்கைப் பட்டிருக்கும்போதே இத்தனை கர்வமும் ஆணவமும் வந்துவிட்டதா? என்ற பொருமையும் ஆத்திரமும் உண்டாகியது. சற்று மறைவாகவே நின்று, அவர்களுடைய சம்பாஷணைகளைக் கவனிக்கலானள்.

மாமியார் :—லீலாவதீ! நாங்கள் குழந்தை குட்டிகளைப் பெருத மலடாக விருந்தும் அள்விலாத உன்னுடைய அன்பானது எங்கள் வயிற்றிலிருந்து ஓர் வாத்ஸல்யத்தைக் கிளப்புகிறது. எங்களை மணந்த கணவன்கூட எங்களிடம் தம் வாழ்நாளில் ஒரு நாளாவது இத்தகைய அன்பைக் காட்டியதில்லை. அதிலும் நாங்கள் மலடிகள் என்று தெரிந்ததும் அடியோடு வெறுத்துப் பிறகு தள்ளியும் விட மனந்துணிந்துவிட்டார்.

அம்மா! நீ யாரோ அன்னியர் வீட்டுக்குழந்தை. உன்னுடைய தாயும் தகப்பனும் இருக்கிற மாதிரியைப் பார்த்தால், கொடிய விஷத்தையுடைய சர்ப்பத்தின் தலையில் அருமையான மாணிக்கம் இருப்பதுபோல், அவர்கள் வயிற்றில் நீ எப்படித்தான் பிறந்தாயோ?"... என்கிற வார்த்தைகள் சுந்தரியின் காதில் கேட்டது தான் தாமதம். அந்த இருவரையும் அப்படியே நசுக்கிவிடலாமா என்று அபாரமான ஆத்திரம் பொங்கியது. பின்னும் என்ன பேசுகிருர்கள் என்பதை யறியும்பொருட்டு மேலும் அங்கேயே நின்று கொண்டிருந்தாள்.

லீலா பணிவுடன் பேசத் தொடங்கி, "மாமீ! தங்களுடைய நாட்டுப் பெண்ணுயிற்றே என்று என்னிடம் இத்தனை அன்பாய் பேசுகிறீர்கள். ஏதோ இம்மட்டும் நீங்கள் கொண்டாடும்படியான ஓர் நிலைமையை என் பாட்டியின் அன்பால், ஆசியால் உப

தேசத்தால் நான் பெற்றேன். உலகில் மக்களுக்குத் தாம் படித்து அறியும் அறிவைக் காட்டிலும் சகவாஸ விசேஷத்தினுல் உண்டாகும் அறிவுதான் அனுபவத்துடன் கலந்து பிரதிபலிக்கிறது. அதே சகவாஸம் கெட்டதாயிருந்தால், இயற்கையாயுள்ள நல்ல புத்தியையும் அந்த சகவாஸதோஷத்தின் விபரீதத்தில் மறைத்துவிடுகிறது. முற்றிலும் துர்க்குணமே மயமாகி விடுகிறது.

மாமீ! என் தாயார் தகப்பனுர்கூட செயற்கையின் சகவாஸ தோஷத்தினுல்தான் கேவலம் இம்மாதிரியாகிவிட்டார்கள். என் பாட்டியைப்போல் நல்லவர்கள் இந்த உலகத்தில் யாருமே இருக்க மாட்டார்கள். அத்தகையவளை இழந்துவிட்டதால்தான் என் மனம் பதறுகிறது...என்று முடிப்பதற்குள், மாமியாரில் ஒருத்தி, "அம்மா! வருந்ாதே! விஷயமெல்லாம் நம் குமாஸ்தாவின்மூலம் அறிந்தேன். உன்பாட்டியைத் தேடிக் கண்டுபிடிக்க ஏற்பாடுகளும் செய்திருப்பதை யறிந்தேன். கவலைப்படாதே" என்று தேற்றினுள்.

வெளியிலிருந்து இதைக் கேட்கும் சுந்தரியின் மனம் ஆத்திரத்தினுல் குபீரென்று கோபம் பீறிக்கொண்டு வந்தது. கண்கள் சிவக்க அவர்களை நோக்கி ஓடினுள். "ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை ஓட்டியதாம் என்ற பழமொழிப்படிக்கு நீங்கள் வெகு சுதந்தரத்துடன் இங்கு வந்து அட்டகாஸம் செய்யத் தொடங்கி விட்டீர்களா! இது யாருடைய வீடு என்பது ஞாபகமிருக்கட்டும். என்னுடைய மகளின் வீடு. சர்வமும் என்னுடையது. இதற்கு அதிகாரி நான் என்பதை மறந்துபேச வேண்டாம்" என்று முந்தாணியை இழுத்துக் கட்டிக்கொண்டு, பத்திரகாளியைப் போல் பேச வாரம்பித்தாள்.

லீலாவுக்கு ஆத்திரம் பிய்த்துக்கொண்டு வந்துவிட்டது. தாயாரை நோக்கி, "அம்மா! சாந்தத்தை இழக்காமல் பேசு. என்னைப் பெற்ற ஒரு சுதந்தரம் மட்டும் இந்த இடத்தில் உனக்கு உண்டேயன்றி, மற்றையபடி சகல சுதந்தரமும் அதிகாரமும் இந்த இருவருடையதுதான் என்பதை இனியாவது அறிந்துகொள். அம்மா! நீ சொல்லிய பழமொழி உனக்கேதான் தகும். இனி, உன்னுடைய வீண் அட்டகாஸத்திற்கு இங்கு இடம் கிடையாது. ஜமீனின் சொந்தக்காரர்கள் இவர்களேயன்றி, நான் அல்ல. உங்கள் இஷ்டம்போல் கல்யாணம் செய்தாயிற்று. இனி, உங்கள் வீட்டிற்கு நீங்கள் போய்ச் சேரலாம்" என்று சுந்தரியின் முகத்தில் அடித்ததுபோல் சிறிதும் அச்சமின்றி, வெட்டொன்று துண்டு இரண்டெனக் கூறினுள்.

183036

புதிய பதிப்பு தயார் ! உடனே முந்துங்கள் !!

இம்மாதிரி பதிப்பு இதற்குமுன் தமிழில் வெளிவந்ததில்லை !

# அனாதைப் பெண்

## டாக்கி நாவலின் அழகிய உயரிய பதிப்பு

"அனாதைப் பெண்" டாக்கியிலிருந்து இப்பதிப்பில் சந்தர்ப் பத்திற்கேற்றவாறு 36 ஆப்டோன் படங்கள் உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், புத்தகத்தின் விலையை மாத்திரம் அதிகரிக்கவில்லை யென்பதை நேயர்கள் கவனிப்பார்களாக !

இந்தப் புஸ்தகம் உங்கள் கைக்குப் பூஷணம் !
மனதுக்கு ஆனந்தம் ! யாவர்க்கும் இனியதோர் விருந்து !

**விலை ரூ. 1—4—0 தான்.**

**நாவலைப் படித்துப் படத்தைப் பாருங்கள்.**

---

## ஒரு வருஷ சஞ்சிகையும் இதர நாவல்களும் இனாமாக வேண்டுமா ?

1. மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம்.

2. எத்தனை புதிய சந்தாநேயர்களைச்சேர்த்து முன் பணம் நமக்கு அனுப்புகிறீர்களோ அத்தனை எட்டணா விலையுள்ள நாவல் இனாம்.

உதாரணமாக 4 சந்தாநேயர்களைச்
சேர்த்தால், ரூ. 2 விலையுள்ள தியாகக்கோடி இனாம்.

"JAGANMOHINI" Vol. XVI No. 9 Regd. No. M. 2210

தலைவலிக்கு






ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,
சென்னை கல்கத்தா பம்பாய்

Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St, Triplicane, Madras.